Registered at G. P. O. as a Newspaper

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—2




புத்தகம் 10 ஏவிளம்பி ஹூ சித்திரை மாதம் 30 திகதி 12-5-57 ஞாயிற்றுக்கிழமை ஷவ்வால் பிறை 12 இதழ் 49

# ஆகஸ்ட் இருபதை யு. என். பி. யும் எதிர்பார்த்திருக்கிறதா?

## சட்ட மறுப்பு போராட்டம் பற்றி சிறீ கோத்தாவில் அந்தரங்க மகாநாடு

## நிலைமையைப் பரிசீலனை செய்ய இரு பெருந் தலைவர்கள் நியமனம்

## வேறு பகுதிகளிலும் விஷமத்தனம் விளையுமோவென பண்டா பீதி

(சுதந்திரன் ஒற்று நிருபர்)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 20ந் திகதிக்கு மேல் தமிழ்பேசும் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில்நடத்தப்போகிறசட்ட மறுப்புசத்தியாக்கிரகப் போராட்டங்களை, யு. என். பி. கட்சி எப்படிப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்ற விஷயம்பற்றிக் கடந்த வாரம் 'சிறீ கோத்தாவில்' நடைபெற்ற, பிரஸ்தாப கட்சியின் உயர்தரத் தலைவர்கள் மகாநாட்டில் மிக மிக அந்தரங்கமாக ஆராயப்பட்டதென்று சுதந்திரன் ஒற்று நிருபர் அறிவிக்கின்ருர்.

கடந்தவாரம் யு. என். பி. கட்சியின் தலைமைக்காரியாலயமான 'சிறீ கோத்தா' வில் கட்சியின் உயர்தரத் தலைவர்கள் பலர் ஒன்றுகூடி ஒரு அந்தரங்க மகாநாடு நடத்தியதாகவும், அம்மகாநாட்டில் எம். ஈ. பி. அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான பற்பல விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டனவென்றும் தெரியவருகிறது.

### திட்டம் தயாரிக்க ஆள் நியமனம்

ஆலோசிக்கப்பட்ட முக்கிய விஷயங்களுள் ஆகஸ்ட் மாதத்தில் தமிழ் பேசும் மக்கள் நடத்தப்போகிற சட்ட மறுப்பு சத்தியாக்கிரகப் போராட்டங்களை யு. என். பி. கட்சி எப்படிப் பயன்படுத்திக் கொள்வதென்பதும் ஒன்ருகும். தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தினுல் ஏற்படும் நெருக்கடியைப் பயன்படுத்தி, எம். ஈ. பி. அரசாங்கத்தை நாட்டில் செல்வாக்கு இழக்கும்படி செய்வதற்கு திட்டம் வகுத்து செயலாற்ற வேண்டும் என்றும், கூடுமாளுல் அக்காலத்திலேயே எம். ஈ. பி. யை முறியடித்துவிட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் மகாநாட்டில் கலந்து கொண்ட பல தலைவர்கள் அபிப்பிராயம் வெளியிட்டனராம்.

இந்த விஷயங்களை ஆராய்ந்து அந்தரங்க அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இரு பெருந் தலைவர்கள் பொறுப்பாக விடப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்கு பொலிஸ், இராணுவம் ஆகிய துறைகளில் மிகுந்த செல்வாக்கும் ஈடுபாடும் உண்டென்று நம்பப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன யு. என். பி. தலைமைக் காரியாலயத்தில் மிக நீண்ட நேரம் உட்கார்ந்து வேலை பார்த்துவருவதாகவும், சில சமயம் அதிகாலையிலேயே அவர் காரியாலயத்துக்கு வந்து தமது மேசையில் உட்கார்ந்துவிடுவதாகவும் தெரிகிறது. பல காரியாலய 'பைல்' கட்டுகளை அவர் தாமாகவே கவனித்து தனிப் பீரோவில் வைத்துப்பூட்டிக் கொண்டு செல்வதாகவும், ஆகஸ்ட் இருபதையொட்டியே பல இரகசிய நடவடிக்கைகள் மேற்கொள்ள இடமுண்டு என்றும் நமது ஒற்று நிருபர் மேலும் தெரிவிக்கின்ருர்.

### பண்டாவின் கலக்கம்

ஆகஸ்ட் 20க்கு மேல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் தரக்கூடிய தொந்தரவுகளோடுகூட, நாட்டின் இதர பகுதிகளில் யு. என். பியும் ஏதாவது விஷமத்தனம் செய்து விடுமோ என்ற கவலையும் பீதியும் திரு. பண்டாரநாயகாவுக்கு ஏற்பட்டிருப்பதாக அரசாங்கத் தொடர்புடைய பிரமுகர் ஒருவர் கூறினர்.

# ஆவணி அழைக்கிறது அதில் உங்கள் பங்கு என்ன?

## வீட்டுக் கொரு வீரன் வேண்டும்: படை நடத்தப் பணம் வேண்டும்

## தமிழரசுத் தலைவர் மூவர் வெளியிட்டுள்ள வேண்டுகோள்

**"எம். ஈ. பி. அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்பதை விடுத்து "வாய்ப்பந்தல்" போடுவதனுல் எம்மை ஏமாற்றி விடலாம் என நினைக்கிறது. திருமலைத் தீர்மானத்தில் குறிப்பிட்ட அத்தனை உரிமைகளையும் பெறும் வரை தொடர்ந்து போராடுவதெனத் தமிழரசுக் கட்சி தீர்மானித்திருக்கிறது. போர் முரசு ஆவணியில் அதிரப் போகிறது. குறைந்த பட்சம் வீட்டுக்கொரு வீரனை வேண்டி நிற்கிருள் தமிழன்னை. தருவது தமிழ்பேசும் மக்கள் கடமை"**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு கு. வன்னியசிங்கம், பொதுச் செயலாளர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், பொருளாளர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர் கையொப்பமிட்டு வெளியிட்டிருக்கும் "ஆவணி அழைக்கிறது, அதில் உங்கள் பங்கு என்ன?" என்ற வேண்டுகோளில் மேற்கண்ட வாக்கியங்கள் காணப்படுகின்றன.

### அப்போது உண்மையை உணரவில்லை

பிரஸ்தாப வேண்டுகோள் துண்டுப் பிரசுரமாக பல்லாயிரக்கணக்கில் அச்சிடப்பட்டு, தமிழ்ப் பிரதேசம் அனைத்தும் விநியோகிக்கப் படவிருப்பதாகத் தெரிகிறது. அவ்வேண்டுகோள் தொடர்ந்து கூறுவதாவது:

"அன்புக்குரிய தமிழ் பேசும் மக்களே! குடியுரிமை நிலவுரிமை, மொழியுரிமை அனைத்தும் இழந்து அல்லற்படும் தமிழினத்தின் விடுதலைப் போர் அண்மிவிட்டது. 1949ம் ஆண்டிலிருந்து தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களை எதிர் நோக்கியிருந்த ஆபத்துக்களை எடுத்துக் கூறிவந்த பொழுதிலும், பெரும் பான்மையான தமிழ் பேசும் மக்கள் இக்கட்சி கூறியவற்றின் உண்மையை அப்போது உணரவில்லை.

### பொதுத் தேர்தல் தந்த தீர்ப்பு

"நம் அன்னை மொழியாம் செந்தமிழின் தொன்மையை நசுக்கிக்கொள்ள ஆட்சியாளர் முற்பட்டபொழுது தான் தமிழினம் விழித்தது. தமிழரக்கட்சி எச்சரிக்கை செய்தபொழுது விழிப்பாயிருந்த தமிழ்பேசும் மக்கள் ஆபத்து அளவு கடந்த பொழுதுதான் உண்மையை உணந்தார்கள். நிலையான கொள்கையும் உறுதியான போக்கும் கொண்ட தமிழர

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கிராமங்களுக்கும் சிங்களத் தந்தி வசதி

## ஆனல் தமிழ்த் தந்தி அனுப்ப முடியாது

## அரசாங்கத்தின் "நியாயமான தமிழ்ப் பிரயோகம்" இதுதான்!

(சுதந்திரன் நிருபர்)

சுயபாஷைகளில் தந்தியனுப்பலாம் என்று அரசாங்க தபால் இலாகா முடிவு செய்திருந்தபோதிலும், சிங்கள பாஷையில் தந்திகள் அனுப்புவதற்கே அதிகப்படியான வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. பல தமிழ்க் கிராமங்களுக்குக்கூட சிங்கள மொழியில் தந்தியனுப்பக்கூடியதாய் இருக்கிறது. ஆனல் தமிழ் மொழியில் தந்தியனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

கொழும்பில் மத்திய தந்திக் காரியாலயத்திலிருந்தும், பெரிய தபால் காரியாலயத்திலிருந்தும்தான் தமிழ்த் தந்திகள் அனுப்பக் கூடியதாய் இருக்கிறது. தமிழ் பேசும் மக்கள் பெருமளவில் வாழும் வெள்ளவத்தைத் தபால் நிலையத்தில் கூடத் தமிழ்த் தந்திகள் மறுக்கப்படுவதாக ஒரு நிருபர் நமக்கு அறிவிக்கிருர். தமிழில் எழுதப்பட்ட பதிவுக் தபால்களும் இந்நிலையத்தில் சிலசமயம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லையாம்.

தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாகவும், நிரந்தரமாகவும் வசிக்கும் சில இடங்களில் தமிழ் தந்தி வசதிகள் இல்லை. வடமேல் மாகாணம், மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய இடங்களில் இருக்கும் அநேக தபால் நிலையங்க

(9-ம் பக்கம் பார்க்க)

'யப்பான் ஜுவலேர்ஸ்

பிரபல நகை வியாபாரிகளும்,
வைர இறக்குமதியாளர்களும்

தேவையான ஆபரணங்கள் செய்து கொடுக்கத் தயார்

கொழும்புக் கிளை:
163, புதுச்செட்டித் தெரு.
போன்: 5489.

YAPPAN JEWELLERS,
64, கன்ருதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 118.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களைத்த ஆண்மான் மரத்தழை நிழலிலே உறங்கி இளைப்பாறிய நிகழ்ச்சி

## தலைவனின் உள்ளத்திலே தலைவியிடம் விரைந்து செல்லும் உத்வேகத்தை உண்டாக்கும் என்ற தோழியின் நம்பிக்கை

—0—

### குறுந்தொகைப் பாலைத் திணையிலே ஊண்பித்தை என்ற புலவரேறு தரும கருத்தோவியம்

பிரிந்து போனவரிடமிருந்து எந்தச்செய்தியும் கிடைக்கவில்லை. அவரும் திரும்பி வரவில்லை. திரும்பி வருவதற்கான அடையாளங்களும் காணப்படவில்லை. அந்த நிலையிலே பிரிந்தவரை எதிர்பார்த்திருப்பவர் என்னதான் நினைப்பார்? அவர் நம்மை மறந்து விட்டாரரோ? என்றுதான் நினைக்கக்கூடும் அல்லவா?

காதலன் வெளியூருக்குப் புறப்பட்டுப் போய்ப் பல நாட்கள் கடந்துவிட்டன. காதலி ஒவ்வொருநாளும் காலையிலும் மாலையிலும் அவன் வரவை எதிர்பார்த்திருந்தாள். பார்த்த கண்கள் பூத்துப் போயினவேயன்றிப் பயன் இல்லை. காதலனைக் காணவில்லை. இப்படிப் பல நாட்கள் சென்ற பின் காதலிக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. காதலன் இன்னும் வரவில்லை அவர் நம்மை மறந்துவிட்டாரரோ! வேறு யாரையாவது கைபிடித்துவிட்டாரரோ! என்பதுதான் அந்த ஐயம்.

#### தோழியின் கூற்று

உடனே அவள் தன் ஐயத்தைத் தோழியிடம் உரைத்தாள். தலைவி எழுப்பிய ஐயம் தோழியின் உள்ளத்திலே வேறொரு ஐயத்தை எழுப்பிவிட்டது. காதலன் கருதிச் சென்ற காரியம் இன்னும் கைகூடவில்லையாக்கும். அதனால்தான் அவன் திரும்பி வருவதற்குரிய வேளையைப் பெறவில்லைபோலும் என்பதுதான் தோழியின் உள்ளத்திலே உதித்த ஐயம். காதலியை அவன் மறந்துவிடமாட்டான், கட்டாயம் திரும்பி வந்துவிடுவான் என்ற உறுதி தோழிக்கு உண்டு. ஆதலால்தான் அவள் உள்ளத்திலே இத்தகைய ஐயம் எழுந்தது. தன் ஐயத்தைத் தலைவியிடம் அறிவிக்கும் முறையிலே 'காலந்தாழ்ந்தாலும்,, காதலன் திரும்பி வந்துவிடுவான். காரியம் 'கைகூடியவுடன் மீள்வான்' என்று குறிப்பாகத் தெரிவித்தாள்.

தோழி இதைத் தலைவியிடம் சொல்லும்போது, தலைவன் சென்ற வழியிலே கண்ட காட்சி ஒன்றையும் எடுத்துக்காட்டினாள். அக்காட்சியைக் கண்ட அவன் காரியம் நிறைவேறியதும் திரும்பி வருவது உறுதி என்பதையும் குறிப்பாகக் கூறினாள்.

#### காட்சி நினைவூட்டும்

'தோழியே! மலையின் பக்கத்திலே உள்ளது பாலைவனம். அதிலே உணவு தேடித் திரிந்தது ஆண்மான். அது மரப்பட்டையா

சாமி சிதம்பரனார்

கிய உணவைத் தின்ற பின் படுத்துறங்கிக் களைப்பாற இடந் தேடிற்று. செழித்த புல்தரையோ, வளர்ந்து பரந்த மரநிழலோ கிடைக்கவில்லை. யாமரம் ஒன்றின் நிழல்தான் கிடைத்தது. அந்த மரத்தின் மேலும் தழைகள் இல்லை. அதன் தழைகளை உரல்போன்ற கால்களையுடைய யானை ஒடித்துத் தின்றுவிட்டது. அம் மரத்தில் தின்னுமல் விடப்பட்ட சில தழைகளே இருந்தன. அதனால் தரையிலே விழுந்த நிழல் அடர்த்தியாக இல்லாமல் வரி வரியாக இருந்தது. அந்த நிழலைக் கண்ட ஆண் மான் இதுவாவது கிடைத்ததே என்று அதன் அடியிலே உறங்கிக் கொண்டிருக்கும் இந்தக் காட்சியை வழியிலே பார்த்துக்கொண்டுபோன அவர் நம்மைப்பற்றி நினைக்காமல் இருந்துவிட்டாரரோ? அல்லது நினைத்தும் கருதிச் சென்ற காரியத்தை முடித்துக்கொண்டு திரும்புவதற்குரிய வேளையை அறியாத காரணத்தால் அவர் வரவில்லையோ? அறியேன்' என்ருள் அவள்.

உள்ளார் கொல்லோ
 தோழ? உள்ளியும்
வாய்ப்பு உணர்வு
 இன்மையின்
 வாரார் கொல்லோ!
மரல் புகா அருந்திய
 மா எருத்து இரலை,
உரல்கால் யானை
 ஒடித்து உண்டு எஞ்சிய
யாஅ வரி நிழல்
 துஞ்சும்,
மாயிரும் சோலை
 மலை இறந்தோரே

சுருங்கச் சொன்னுல், காதலர் கருதிச் சென்ற காரியம் கைகூடவில்லை, ஆதலால் தான் வந்திலர். விரைவில் வருவார் என்று தோழி தலைவியிடம் தெரிவித்தாள்.

ஆண் மான் உணவுண்ட பின் யாமர நிழலில் தூங்குவதைக் கண்டால், 'நாமும் காரியத்தை முடித்தபின், வீடு சென்று காதலியுடன் இளைப்பாறுவோம்' 'என்ற எண்ணம் தலைவருக்கு உண்டாகும். இக்குறிப்பை உணர்த்துவதே இந்த இயற்கை நிகழ்ச்சி. தலைவியின் உள்ளத்திலேநம்பிக்கை உண்டாக வேண்டும் என்பதற்காகவே தோழி இந்த இயற்கைக் காட்சியை எடுத்துக்காட்டினுள். காரியம் முடிந்த பின் ஓய்வுபெற விரும்புவது இயற்கையாகும்.

இது, ஊண்பித்தை என்னும் புலவர் பாட்டு. தலைவன் பிரிந்திருந்தபோது வருந்திய தலைவிக்குத் தோழி கூறிய சமாதானம். பாலைத்திணையிலுள்ளபாடல் இது.

#### மனோரஞ்சிதகான சபை

மனோரஞ்சிதகான சபையாரின் நாடகக் குழுவின் பகிரங்கக் கூட்டம் உயர் திரு. ஏ. ராஜன் தலைமையில் சென்ற 28—4—57-ல் கொழும்பில் நடைபெற்றது.

மேற்படி சபையின் சட்ட திட்டங்கள் கௌரவ காரியதரிசியால் வாசிக்கப்பட்டு சபையோரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விளம்பரக் காரியதரிசி திரு. யோண் எப். கே. சாமுவேல் சபையின் அங்கத்தவர்கள் யாவரையும் ஒருமனப்பட்டு ஒத்துழைக்குமாறு வேண்டிக்கொண்டார்.


FOR YOUR

**PRINTING TYPES**

10. pt. 'Monotype' Times Roman
Types imported from England are high in price. The English types made by us are very much cheaper in price than types imported from England or India. Those interested will please ask for our price list of types made by us.

12 pt. 'Monotype' Times New Roman
This Foundry makes English and Tamil types of various faces. Those interested will please ask for a seperate folder showing specimen of our types.
This paragraph is composed with 12 pt. Monotype Times New Roman cast on a 12 pt body.

14pt. 'Monotype' Times Roman
We cast types on ordinary type metal and on harder type metal. The ordinary type metal is hard enough for most purposes, and the types cast on it would be cheaper than the types cast on the harder metal. It is open to customers to choose either the ordinary or harder quality type metal.

18 pt. 'Monotype' Times Roman
Many printers will have their old types which they would wish to recast. We are prepared to accept the old types unmelted for recasting in the faces referred to in this column.

'Monotype' Times Bold and Times Italics Types can also be cast in 10 pt., 12 pt. 14 pt. and 18 pt in our Foundry.

For further details:—

The Manager,
SutantiranType Foundry.
194-A, Silversmith St.,
Colombo 12.


# மனம் நாடிய மங்கையை மனையாளாகப் பெறுவதில் காளைக்கேற்பட்ட குதூகலம்!

—:0:—

## அவள் ஊர் கண்ணில் பட்டதும் தேர்ப்பாகனிடம் காட்டிப் பெருமையடைகிறுன்

—0—

### குறுந்தொகையில் பேயன் புலவரின் பாடலொன்று

(சாவன்னு சிறு)

காதலர்களுக்குள் ஒற்றுமையிருக்க வேண்டும்; அப்பொழுதுதான் அவர்கள் வாழ்க்கையிலே இன்பங் காண முடியும். வயதிலே ஒற்றுமை; உருவத்திலே ஒற்றுமை; அறிவிலே ஒற்றுமை; குணத்திலே ஒற்றுமை; ஒழுக்கத்திலே ஒற்றுமை; இருவர் பிறந்தகுத்தாருள் ஒற்றுமை இவையெல்லாம் காதலர்களை என்றும் பிரியாமல் இறுக்கிப் பிணிக்கும் பாசக்கயிறுகள். இவற்றுள் முதன்மையானது காதலர்களின் கருத்தொற்றுமைதான். இந்தப் பொருத்தங்களுடன்தான் பெரும்பாலான திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. பண்டைக் காலத்திலுங்கூட இத்தகைய பொருத்தமுள்ள இளைஞர்கள்தாம் காதல் தம்பதிகளாக வந்திருக்கின்றனர் என்று எண்ணுவதற்கு இடம் உண்டு. இதற்கு இச்செய்யுள் ஒரு உதாரணமாகும்.

#### குஷி பிறந்தது!

ஒரு தலைவன்; அவனும் செல்வக் குடியிலே பிறந்தவன், அவன் காதலித்த தலைவியும் செல்வக் குடியிலே பிறந்தவள்தான். அத் தலைவனை [illegible] செல்வக் குடி என்பது தெரிகின்றது. இத் தலைவனுக்கும் இவன் காதலித்த தலைவிக்கும் இன்னும் வெளிப்படையாகத் திருமணம் நடக்கவில்லை. இந்நாளில் தலைவன் அரச காரியத்தின்பொருட்டு வெளியூர் சென்று திரும்பினுன் அவன் திரும்பி வரும் வழியிலே காதலியின் ஊர் இருந்தது. அந்த ஊர் இருந்த இடம் முல்லை நிலம். அவ்வூரை அவன் தன் தேர்ப்பாகனுக்குச் சுட்டிக்காட்டுகின்றான். அப்பொழுது தன் காதலியின் பெற்றோர் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றான் அவ்வூரின் அழகையும் குறிப்பிடுகின்றான். தன் காதலியின் ஊரைக் கண்டவுடன் தலைவன் உள்ளத்திலே உவகை பிறந்துவிட்டது. அவளை மணந்து மகிழ்ந்து வாழப்போகின்றோம் என்ற ஆவல் வளர்ந்தது. ஆதலாலேதான் அவன் தன் தேர்ப்பாகனிடம் தன் நெஞ்சிலே நிகழ்வதை ஒளிக்காமல் கூறினுன்.

#### மாமனுர் சிறப்பு

"தேர்ப்பாகனே அதோ பார்; அதுதான் என் காதலியின் ஊர். என் காதலி கைகளிலே வரிசையாகக் குறுந்தொடி வளையல்களை அணிந்தவள். செல்வக் குடியிலே பிறந்த மகள். அவள் தந்தை தன்னிடம் வந்த உயர்ந்தவர்களுக்கு நீரோடு பொன்னைச் சேர்த்துத் தானமாக வழங்குவான். தானம் கொடுத்து மிஞ்சிய பொருளையும் தான் மட்டும் நுகரமாட்டான். யார் வந்தாலும் தடையில்லாமல் சோறு போடுவான். இத்தகைய வள்ளல்தான் அவள் தந்தை.

#### ஊர்ச் சிறப்பு

இத் தந்தையின் ஊர் முல்லை நிலத்திலே இருக்கின்றது. கிழங்கைக் கல்லி எடுத்து அகலமான பெரிய குழிகளிலே கொன்றை மலர்கள் வீழ்ந்து நிரம்பிக் கிடக்கின்றன. அதைக் காணும்போது செல்வம்படைத்தவர்கள் வீட்டில் உள்ள பொன் வைத்திருக்கும்பெட்டியின் மூடியைத் திறந்து வைத்திருப்பதுபோலக் காணப்படுகின்றது. கார் காலத்தைக்கொண்ட இத்தகைய முல்லை நிலத்தில்தான் என் காதலியின் தந்தை வாழும் ஊர் இருக்கின்றது" என்ருன் அவன்.

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணே! போரோ உரிமைப் போர்:

## படையோ தொண்டர் படை!!

## இதில் சேரவுமா அத்தானின் அனுமதி வேண்டுமுனக்கு?

### "தாய் நாட்டுக்காக நான் சாகவும் தயார் காந்திஜீ!" என்று சொன்ன 16 வயதுச் சிறுமி வள்ளியின் வீரம் உனக்கில்லையா?

### கீதோபதேசம் நீ கேட்டதேயில்லையா? தமிழ் வீரன் தன் காதலிக்கெழுதிய கடிதம்!

தேடக்கிடைக்காத தீந்தமிழ் இன்பமே! நேற்று நீ அனுப்பி வைத்த அஞ்சல் கிடைக்கப் பெற்றேன். படித்தேன் — களிப்புக்குப் பதில் கவலையையே அந்த அஞ்சல் தந்தது. மட்டற்ற மகிழ்ச்சி தரும் உனது முல்லையகடிதங்களின் சுவையெங்கே? வதை செய்யும் அந்தக் கடிதத்தின் நிறையெங்கே..............? நான் மிகவும் ஏமாந்து விட்டேன்.

அன்பே! நான் உன்னை மறந்து விட்டதாக எழுதியிருக்கின்றாய். நான் உன்னை மறப்பது எப்படி? வண்டி மாட்டை மறந்தால், உண்டி உணவை மறந்தால், தூண்டில் மீனை மறந்தால் அதனதன் பெறுபேறு என்னவாகும்? உனக்குத் தெரிந்தது தானே!

மண்ணுக்கும் வானுக்குமுள்ள தொடர்பு மாறுமா? வானம் மண்ணை மறந்தாலும் மண் அதை மறப்பதில்லையே! தன்னுள் வைத்திருக்கும் பசுமையை — சாரத்தை எல்லாம் தூதனுப்பியேனும் அதன் அமுதத்தைப் பெறுவதிலேயே நாட்டமாக இருக்கிறது அது. இது நாமனைவரும் காணும் காட்சி.

உன் மேல் எனக்கிருக்கும் கொள்ளை அன்பை வெளிப்படுத்த வேண்டிக் கடிதங்களைத் தூதாக அனுப்பி - பின் பதில் கண்டு உன் உள்ளத்தின் உறுதியையும், பாசத்தையும் அடிக்கடி அறிந்து வந்த நான் சில கிழமைகளாக மடல் அனுப்பாதது கண்டு சந்தேகமா?

கண்ணே! மலரின், வண்ணமும் வனப்பும் அழகும் தான் முதலிற் கண்களுக்குத் தெரிகின்றன. அது இதழ்களைச் சொரிந்து அழகை உதறித் தள்ளி — மணத்தைக் குறுகிப் பிஞ்சுக்காகத் தன்னைத் தியாகம் செய்யும் கடமையுணர்ச்சி அந்த வெளிப்பகட்டையெல்லாம் விட மேலானது என்பது சிந்திக்கச் சிந்திக்கத் தான் தெளிவாகிறது. பருவத் துடிப்புக்கும், உணர்ச்சிப் பெருக்குக்கும் சிந்தனை ஏது? நாடெல்லாம் இன்று என்ன நடக்கிறது—! உனக்குத் தெரியாதா என்ன?

பேச்செல்லாம் தமிழ் மொழியின் பெருமை உரைத்து, பெற்றதெல்லாம் தமிழ்த் தாயின் பெற்றியென்று கூறி, முற்றும் அவள் திருப்பணிக்கே உள்ள மூச்சையெல்லாம் விட முனைந்த தமிழ் வாலிபர்கள் —வாலைக்குமரிகள் திரண்டு வரும் இந்த நேரத்தில் என் பங்கும் மிகமிக அவசியமல்லவா? இதை நீ மறுக்க மாட்டாயே?

இன்பமே! நேசமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்ய வேண்டுமென்று பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடிய பாடலின் கருத்தை முன்னொரு முடங்கலில் உனக்கு எடுத்துக் காட்டியிருந்தேனல்லவா? அப்பொழுது அதை நீ ஆமோதித்து இன்று தமிழ் நாட்டில் தமிழ் என்றால் தமது உயிரென்ற எண்ணம் அரும்பி முகை விட்டு மலர்வதைக் காணவில்லையா தாங்கள் எனப் பதில் எழுதியிருந்தாய். இப்பொழுதோ தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்தால் மட்டும் போதாது, ஆட்சியும் தமிழ் ஆட்சியாக வேண்டும். அப்பொழுது தான் தமிழ்—தமிழர்; தமிழ் நாடு விடுதலை பெறும் என்ற உண்மை புலனாகி விட்டது. அந்த எண்ணத்தைச் செயலிற் காட்ட நாம் எடுக்கும் நடவடிக்கை தான் சாத்வீகப் போராட்டம்; ஆகஸ்ட் இருபதில் போராட்டம் என்றால் தொடை நடுங்குவோர் நம் மத்தியில் நடமாடுகின்றார்கள். நான் அவர்களைப் பிரத்தியட்சமாகக் காண்கிறேன். தொடை நடுங்கிகள் கையால் ஆகாத கபவர்கள். மனிதன் மனிதனாக வாழ வேண்டும். எத்தனை உயிர் போனாலும் உரிமை காப்பாற்றப்படவேண்டும். தமிழ் மொழி இந்த மண்ணில் வாழ வேண்டுமென்ற நல்லெண்ணம் கொண்டோர் தொடை நடுங்க வேண்டியதில்லை. அவர்களுக்குப் போராட்டம் என்ற சொல் பசித்தவனுக்குப் பாயாசம் கிடைத்த மாதிரி இருக்க வேண்டும். இதை நீ மறுக்க மாட்டாயல்லவா?

"அடிமை மனிதனாக ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதைவிட விடுதலை வீரனாக ஒரு மணி நேரம் வாழ்வதே மேல்" என்று அடிலன் என்ற அறிஞர் கூறியிருப்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப் படுத்துகின்றேன். வாழ்க்கை உனக்கொரு வேடிக்கையாக இருப்பதாக உணர்கின்றேன். வாழ்க்கை இன்பமானதுமல்ல, துன்பமானதுமல்ல. தைரியத்தோடும் தியாக உணர்ச்சியோடும் ஈடுபடவேண்டிய ஒரு கடினமான தொழில் என்பதை உனக்கு இந்த நெருக்கடியான காலத்தில் உறைப்பாக அறியத்தருகிறேன்.

இன்று ஈழத்தில் நீயும் நானும் அடிமைகளாக ஆக்கப்படுவதை நீ ஒப்புக்கொள்வாய்? நியாயமான அளவு தமிழ் உபயோகம் என்று பூச்சாண்டி காட்டி... மக்களை ஏமாற்றும் எம். ஈ. பி. அரசாங்கம் முத்திரைகளிலும் — காசு நோட்டுக்களிலும் — நாணயங்களிலும் தனிச் சிங்களத்தைப் புகுத்தும் செப்படி வித்தையை நீ அறிவாயல்லவா? நியாயமான அளவு உபயோகம் என்று சொல்லும் வாய் மூடு முன்னரே இந்த அநியாயம் கண்கூடாகத் தெரிகின்றதல்லவா? முதலில் நாம் இன்று அடிமைத் தன்மையை ஒழித்துக்கட்டி அதற்குச் சாவுமணி யடித்தாக வேண்டும்.

"அடிமைத் தனையிலிருந்து விடுவித்துக்கொண்டு சுதந்திர வாழ்வில் இன்பம் காண்பதே மனித வாழ்வின் இலட்சியம்" என்று பகவத்கீதை கூறும் அறிவுரையை நீ நன்கு சிந்தித்துப்பார். இந்த உயிரான இலட்சியத்துக்காக உயிர் போனாலும் பரவாயில்லையெனத் தமிழ் வாலிபன் ஒவ்வொருவனும் கங்கணங்கட்டிச் செயலாற்றும் இன்று உன் குலத்தின் பங்கு சிறிதா என்ன?

"தம் மக்களுக்காக உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருப்பவனே மனிதன்" என்று மகாத்மாஜீ கூறியிருப்பதை நீ உணர்ந்து நடப்பதுடன் உன் தோழிகளுக்கும் தெரிவிக்கத் தவறாதே.

ஆன்ற மறைவிளக்கி, அன்பு நெறி பெருக்கி, அகச் சுவை, புறச் சுவைமிகுத்த தமிழ் இந்த நாட்டில்—புத்தியில்லாத புல்லர்களால் தாழ்த்தப்படுவதானால் புலி நிகர் தமிழர் சிந்தையை அடக்கிச் சும்மா இருப்பார்களா? ... ...அதும்?

கண்ணே, சொல்வதற்கே நெஞ்சு நோகிறது. தமிழர் வாழும் இடமெங்கணும் ஆணும்-பெண்ணும் தொண்டர்களாகத் தம் பெயர்களை பதிவு செய்யும் போது நீ இன்னும் உன் பெயரைப் பதிவு செய்யாத செய்தி கேட்டு மிக மிக வருந்தினேன். நாட்டிற்காக நமது மொழிக்காக விடுதலைப் போராட்டத்துக்கு மக்களைத் தயார்படுத்தும் போது அதில் சேர்ந்து என் பங்கை ஆற்றுவதற்கு என் அனுமதியைப் பெற்றுத்தான் சேர்வதென்ற உனது உள்ளப் போக்கை என்னென்பேன்!

"தொண்டர் திருக் கூட்டத்தில் சேர்ந்துவிட்டேன் அத்தான்" என்று நீ எழுதியிருந்தால் உன் தியாகத்தை மெச்சி மகிழ்ந்திருப்பேன். உனது கிராமத்தில் தொண்டர்களைத் திரட்டிய போது நீ முன்னின்று செயலாற்றியிருப்பாயென்றல்லவா கனவு கண்டேன். அப்படி முன்னின்று உன் பங்கை ஆற்றி நீ எனக்குப் புகழ் தேடித் தருவாயென்றல்லவா எண்ணி ஏமாந்தேன்.

உனது பள்ளித் தோழி பத்மா தொண்டர் படையில் சேர்ந்துவிட்டதாகவும் தெரிவித்திருக்கிறாய். மற்றையோருக்கு முன்மாதிரி காட்ட வேண்டிய நீ பின் வாங்கிய செயல் எனக்கு வேதனையைத்தான் தருகிறது. அடுத்த அஞ்சல் 'தொண்டர் படையில் சேர்ந்து விட்டேன்' என்ற தேனூறும் தித்திப்புச் செய்தியைத் தாங்கி வரட்டும்.

தென்னாபிரிக்காவில் காந்திஜீ நடாத்திய சத்தியாக்கிரக போராட்டத்தில் உன் போன்ற ஒரு தமிழ்ப் பெண்-பெயர் வள்ளி-பதினாறு வயது-ஆர். முனிசாமி முதலியாரின் மகள் மூன்று மாதச் சிறை சென்றாள். சிறையிலிருந்து வெளி வரும் போது ஜுரம் பிடித்திருந்தது. அவளைப் பார்க்கக் காந்திஜீ அவள் இல்லம் சென்றிருந்தார். "வள்ளியம்மா, சிறை சென்றதில் உனக்கு வருத்தம் இல்லையே?" என்று கேட்டார். "வருந்தும் ஏன்? என்னை மறுபடியும் கைது செய்தால் இந்த நிமிடமே சிறை செல்லத் தயாராக இருக்கிறேன்." என்று பதிலிறுத்தாள். "அப்படிச் செய்யும் போது சாவு வந்து விட்டால்" இப்படி மீண்டும் கேட்டார் காந்திஜீ. "பேஷாக வரட்டுமே! தாய் நாட்டுக்காகச் சாவது யாருக்குத்தான் பிடிக்காது" என்னாமற்று என்ன தியாக சிந்தை. சில நாட்களின் பின் உயிர் நீத்தாள். உடல் மறைந்தது. ஆனால் அவள் பெயர் குன்றின் மேலிட்ட மங்காத் தீபம்.

இப்படி நாட்டுக்காகப் போராடிச் சாவு வரட்டும் என்று ஆண்டவனை வேண்டிக்கொண்டாலும் களிப்படைவேன். வெற்றி வேண்டுமானால் தன்னலமற்ற தியாகம் செய்ய வேண்டும். தியாக உணர்வுக்கு எதையும் தாங்கும் இதயம் வேண்டும். தங்கள் அன்புதான் என்னை எல்லாவற்றிலும் மேம்பட வைக்கும். புத்தமுதம். தங்கள் இருதயப் பேழையில் குடிபுகுந்த அன்றே நான் எனக்கே புதியவளாகி விட்டேன். நம் பிரேமையைப் புனிதமாக்கும் பிணைப்பாகத் திருமணத்தைக் கருதுகிறேன். அது எதிர்வரும் ஆனியில் நடைபெற வேண்டும் என்று எழுதியிருக்கிறாய். பெண்கள் எப்பொழுதும் அவசர புத்திக்காரர்கள் என்ற பழிச்சொல்லுக்கு நீயுமா இலக்காக வேண்டும்?

கல்லடி தந்தாலும், சொல்

(11-ம் பக்கம் பார்க்க)

### சமரணி சேர்ந்திட வருவீர்!

("நாவேந்தன்")

சேருவீர் தொண்டர் படையினிற் தோழர்காள்
செகத்தினில் நமதுயிர் மூச்சாம்
ஆருயிர்த் தமிழை—அருந்தமிழ் நாட்டை
அழித்திட முனைந்திடுங் கயவர்
யாருளர்? அவர் தம் படைவலி என்னே
அறிகுவம் ஆவணி அமரில்
மேருவா தடந்தோள் வீரரீர் வம்மின்
விரைகுவம் விடுதலை பெறுவோம்!

★

காசினி முழுதும் தமிழரசாண்ட
கதையெல்லாங் கனவென ஒழிய
மாசினில் தமிழர் வீரமும், மொழியும்
மாண்புறு நிலையதும் மாயத்
தூசென நினைத்தெம முரிமைகள் பறிக்கும்
தூர்த்தரைத் தொலைத்திட இன்றே
மாசினங் கொண்டே வீரர்கள் படையில்
மகிழ்வொடு பொருந்துவம் வாரீர்!

★

பாய்புலி நிகர்த்த தமிழராம் நாமும்
பயந்திவர் நயந்திடும் சலுகைக்
கா(ய்) அவர் கொள்கை தழுவுவம்?
மானம் பழுதுறல் காணுவிரிங்கே!
காய்சின வேங்கை கடும்பசி யுறினும்
காய்கனி யருந்து மோவுலகிற்
தாய் தனைக் கொல்லும் சழக்கரோடுறவோ?
சமரணி சேர்ந்திட வருவீர்!

புரட்சிப் பாதையில்! புதுமை நடையில்! புத்துலகு சமைக்க!
சோஷலிஸ்ட் மாத மிருமுறை வெளியீடு
"சம நீதி"
அரசியல், இலக்கியம், சிறுகதை ஆகிய பகுதிகளுடன் மாத மிருமுறை வெளிவரும்.
இலங்கையெங்கும் முன்பணம்கட்டும் ஏஜண்டுகள்தேவை.
பிரதி விலை சதம் 15 ஆண்டு சந்தா ரூ. 3-00
விற்பனை உரிமையாளர்:-
80, Kew Road. COLOMBO -2
செயலாளர், சோஷலிஸ்ட் வாலிபர் சங்கம்,

முள்ளுக் கம்பி
முள்ளுக் கம்பி

உங்கள் பயிர்களை மிருகங்கள் மேய்கின்றனவென்று கவலைப்படாதீர்கள். இவற்றைச் சொற்ப செலவுடன் முள்ளுக் கம்பியால் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
700 யார் 14 கேஜ்
450 யார் 12½ கேஜ்
விற்பனையாளர்:
சாமுவேல் சன்ஸ் அன் கம்பெனி லிமிட்டெட்,
தபாற் பெட்டி நிர். 46, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை சட்ட சபையில்:

# நாட்டை விடுவிக்கும் சிறுபடை நாங்கள்!

## மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் மாநிலத்துக்கு மாற எங்களைப் பயன் படுத்தலாம்

### காங்கிரஸ் பிரதிநிதிகள் கிண்டல் பேச்சுகளுக்கு அண்ணாத்துரையின் ஆணித்தரமான பதில்

சென்னை சட்ட சபையில் கவர்னரின் பிரசங்கத்தின் மீது நடந்த விவாதத்தின் போது தி. மு. க. தலைவர் திரு அண்ணாத்துரை பேசுகையில் கவர்னரின் பிரசங்கம் மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்ததாகவும், அதில் எதுவித கொள்கை விளக்கமும் காணப்படவில்லையென்றும் கூறினார். ஆளும் கட்சியினரின், கொள்கைதிட்டங்களை விளக்குவதே கவர்னரின் உரை என்பதும், அக்கொள்கை திட்டங்களுக்கேற்ப நிதியை பகிர்வதே நிதி மந்திரியின் வரவு செலவு திட்டம் என்பதுமே நான் அறிந்தது. ஆனால் கவர்னர் உரை அப்படி இல்லாமல்போனது பெருங்குறைஎன்று திரு அண்ணாத்துரை மேலும் சொன்னார்.

திரு. அண்ணாத்துரை தொடர்ந்து பேசுகையில், விவாதத்தின்போது ஒவ்வொரு பகுதியினரும் எழுப்பிய வாதங்களையும், மறுப்புகளையும் நான் வரவேற்கிறேன். அரசியல் துறையில் நாங்கள் புகுந்துள்ள இத்தருணத்தில் எல்லா கருத்துக்களையும் உணர்ந்து செம்மைப் படுத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். எங்களை எதிரிகள் என்று பேசினர். வெறும் பேச்சுக்களால் இப்படி ஏற்பட்டு விடாது. நல்ல காரியங்கள் செய்யும்போது தோளோடு தோள் சேர்ந்து நிற்க வேண்டுமென்று கூறப்பட்டது. முதன் மந்திரியுடன் நான் அப்படி தோளோடு தோள் சேர்ந்து நிற்க வேண்டுமென்றால் அது இயற்கையிலேயே கைகூடாத காரியம். (சிரிப்பு)

(திரு காமராஜ் உயரமானவர். திரு அண்ணாத்துரை சற்று குள்ளமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.)

கையோடு கைசேர்த்து வேண்டுமானால் நடக்கலாம். அதேபோல் இப்போதைய நிலையில் உள்ளப் பான்மை பொறுத்தவரை அப்படி கை சேர்த்து நடப்பது சாத்தியமல்ல.

> **தி. மு கவுக்கு பெயர் மாற்றச் சவால்**
>
> தி. மு. கவினர் சென்னை மாநிலத்துக்குத் தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று வற்புறுத்திச் சென்னை சட்டசபையில் பேசியதற்குச் சவால் விடுத்துக் காங்கிரஸ் பிரதிநிதி திரு சங்கரன் பேசுகையில்,
>
> "தமிழ் நாடு" என்று பெயர் மாற்றம் செய்ய அன்பழகனும், ஆசைத்தம்பியும் வற்புறுத்தினார்கள். "திராவிடம்" என்பது ஆந்திரா, மலையாளம், தமிழ் நாடு ஆகிய பகுதிகள் சேர்ந்தது. இதில் தமிழ் நாடு பிரிந்து தனி ராஜ்யமாக இருக்கிறது. ஆகவே "திராவிட முன்னேற்ற கழகம்" என்ற பெயரை "தமிழர் முன்னேற்ற கழகம்" என்று அவர்கள் அவர்கள் முதலில் மாற்றிக் காட்டட்டும். தமிழ் என்று சொன்னால்தான் தேன் வந்து பாயுது காதினிலே! இன்பமாக இருக்கிறது.
>
> "ஆகவே முதலில் அவர்கள் தங்களை சீர்திருத்தம் செய்துகொண்டு பிறகு தமிழ் நாடு என்று பெயரிட வற்புறுத்தினால் நன்றாக இருக்கும்" என்று கூறினார்.

**நிதி மந்திரிக்காக பரிதாபப்படுகிறேன்**

ஆளும் கட்சியினரின், கொள்கை திட்டங்களை விளக்குவதே கவர்னரின் உரை என்பதும், அக்கொள்கை திட்டங்களுக்கேற்ப நிதியை பகிர்வதே நிதி மந்திரியின் வரவு செலவு திட்டம் என்பதுமே நான் அறிந்தது. ஆனால், கவர்னர் உரை அப்படி இல்லாமல் போனது குறை கவர்னர் உரையில் சில காட்சிகளை எடுத்துக் காட்டியுள்ளார் கவர்னர். நிதி மந்திரி அரசாங்க கொள்கையை பின்னர் எடுத்துரைப்பார் என்று விட்டு விட்டார். ஏற்கனவே நிதி, நீதி, கல்வி இலாகாக்களின் அமைச்சராக பொறுப்பு பாரத்தில் மூழ்கியுள்ள நிதி மந்திரியின் மீது இன்னும் அதிக பாரத்தை சுமத்துவதாக இது தோன்றுகிறது. அவர் தொல்லைகள் இப்படி அதிகமாக்கப்படுவதற்கு அவரைக் கண்டு பரிதாபப் படுகிறேன்.

திரு அண்ணாத்துரை தொடர்ந்து சொன்னதாவது:

**படத்திற்கே சட்டம் சட்டத்திற்கு படமல்ல**

வரவு செலவுத் திட்டம் கொள்கை அடிப்படையில் தான் வகுக்கப்பட வேண்டும். படத்திற்குச் சட்டம், சட்டத்திற்குப் படமல்ல என்பது போல் இது. கொள்கையை சட்டமன்றத்தில் விளக்கி அவைவரின் கருத்துக்களையும் மதித்து ஏற்றுப் பெருந்தன்மையுடன் ஆட்சியாளர் தயாரிக்கும் வரவு செலவுத் திட்டமே பூர்த்தியானதாக இருக்கும் இலலாவிட்டால் புள்ளி விவரங்கள் எங்கோ இழுத்துக் கொண்டு போய் விடும். கொள்கை விளக்கம் கவர்னர் உரையில் இல்லாதது வருந்தத் தக்கது.

**கொள்கை இல்லை**

புதுக் கொள்கை அரசாங்கத்திற்கு இல்லையே என்று ஐயப்பாடு எழுகிறது. முதன் மந்திரி பதவி ஏற்ற பின்னர் கொள்கை பற்றி நிருபர்கள் கேட்டதற்கு "அதே கட்சி தானே, புது மந்திரி சபை. அதே கொள்கை, திட்டம் தாம்" என்று சொன்னதாகச் செய்தித் தாள்களில் படித்தேன்.

திரு காமராஜ் (குறுக்கிட்டு.) ஆமாம்.

திரு அண்ணாத்துரை கொள்கை புதிதல்ல. பழையதே. திட்டம் அதே என்றால் அதிலுள்ள குறைகளைக் கூறாமல் இருக்க முடியாது.

**மாமியார்-மருமகள்**

குறை கூறுவது பற்றி பலர் குறை கூறினார்கள். எப்படி. காங்கிரஸ் கட்சியினர் நடந்தனர் என்பது பிச்சைக்கு வந்தவனை நாட்டுப் பெண் விரட்ட, அந்த அதிகாரம் தன்னிடமே இருக்கிறதென்று கூறிவிரட்டப்பட்ட பிச்சைக்காரனை திரும்ப அழைத்துப் பிச்சை இல்லை என்று மாமியார் சொன்னதைப் போலிருக்கிறது. (சிரிப்பு.) ஆட்சியாளரிடை ஜனநாயகப் பண்பு வளர வேண்டும். அப்படி வளர்ந்து விட்டால் எங்கள் வேலை குறையும்.

**விடுவிக்கும் படை நாம்**

குறைகளை எடுத்துச்சொல்வதற்கு சிலர் தத்துவார்த்தங்களைக் காண்பித்துச் சொன்னார்கள். இப்படிச் சொல்லி நடத்தால் தேர்தலில் மக்கள் ஆதரவு கிடைக்கும் என்றார்கள். ஆனால், இப்படி நடந்து ஆதரவு பெற எங்களுக்கு அவசியமில்லை. காரணம், தாழ்ந்தின நாட்டை விடுவிக்கும் சிறு படையாக நாங்கள் இயங்குகிறோம். இதி[illegible] குறைந்து விடாது.

**வினோபாவின் திரை ஏன்?**

அரசாங்கத்திடம் நிலச் சீர்திருத்தம் விஷயத்தில் திட்டவட்டமான கொள்கை இருப்பதாகக், கவர்னர் உரையில் தோன்றவில்லை. வினோபாவின் பூதான இயக்கத்தைச் சுட்டிக் காட்டி இது வெற்றி பெற்றால் நில விநியோகம் வரம்பு கட்டுவதற்கு அவசியமிராது என்று கூறியுள்ளார். தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்க வினோபாவை ஆட்சியாளர் திரையாகப் பயன்படுத்துகிறார்களோ என்ற ஐயப்பாடே எழுகிறது நிலவுடைமையில் அக்கறையுள்ளோர் சேர்ந்த மந்திரி சபை, நிலச் சீர்திருத்தத்தைச் சரியாகச் செய்யாது; சட்டங்களில் ஓட்டைகள் இருக்கும்; சட்டம் வருமென நிலச் சொந்தக்காரர்களை உஷார்ப் படுத்தி அதிலிருந்து தப்ப வழிவகைகள் செய்து கொள்ள அவகாசம் அளிக்கும் என்று இப்போதைய ஆட்சியாளர் பற்றிவினோபா கூறியிருப்பதாகச் சபையின் கவனத்திற்குகொண்டுவருகிறேன். அரசாங்க அமைப்பு எப்படி இருக்கிறது என்பதே அவர் சொல்லியிருப்பது.



திரு. சி. என். அண்ணாத்துரை

> **அலங்கார பொம்மைகள்?**
>
> 'நாங்கள் அலங்கார பொம்மைகளாக இருப்பதாக எதிர்க்கட்சிப் பிரதிநிதி ஒருவர் சொன்னார். நாங்கள் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற மேலான எண்ணத்தோடு இங்கு வந்துள்ளோம். இதில் எதிர்க்கட்சியினரைவிடப் பன்மடங்கு ஆர்வம்கொண்டுள்ளவர்கள் நாங்கள். எங்களை அலங்கார பொம்மைகள் என்று சொல்வது சரியல்ல.
>
> "பிறரைக் குறைகூறும் பிரதிநிதிகள் தாங்கள் செய்வது சரியா என்று முதலில் ஆத்மசோதனை செய்து பார்த்துவிட்டுப் பிறகு மற்றவர்களுக்கு யோசனை சொல்லட்டும்"
>
> இவ்வாறு காங்கிரஸ் பெண் பிரதிநிதி திருமதி லக்ஷ்மி காந்தம்மாள், சென்னை சட்ட சபையில், எதிர்க் கட்சிப் பிரமுகர் ஒருவரின் தாக்குதலுக்குப் [illegible] ரோசமாகப் பேசினார்.

வினோபா இதைச் சாதிக்க முடியுமென்றால், நாட்டை ஆளும் ஆட்சியாளர் வேறு யாருக்கும் இல்லாத செல்வாக்கு பெற்ற மந்திரி சபை துரைத்தனத்தில் இதைச் செய்யத் தயக்கமேன்? யாரைக் கண்டு பயப்படுகிறார்கள்? அவர்கள் கைகளை யார் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்?

**அத்தைக்கு மீசை**

அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா, அப்படி மீசை முளைக்காது என்று ஆட்சியாளருக்கு வக்கிலாக வக்காலத்து வாங்கி எங்களைக் குறைத்துப் பேசியவர்கள் உண்டு. அதிகாரம் படைத்த கோட்டை தங்கள் கையை விட்டு ஓடிவிடாது என்ற நினைப்பால் இப்படிப்பேசுகிறார்கள். அண்டை வீடாகிய கேரளத்தில் அத்தைக்கு மீசை முளைத்திருக்கிறது! (சிரிப்பு)

**அரசியல் ஜமீன்தார்களுக்கு இறுதிக்காலம்**

எதிர்க் கட்சியை அழைத்துச் செல்ல வேண்டும் என்பது எதிர்க் கட்சி ஒரு சமயம் ஆட்சிக்கு வரலாம் என்பதால்தான். செஞ்சிக் கோட்டை மீதேறிய வன் தேசிங்கு ராஜன் என்பது போல் இன்று காங்கிரஸ்கட்சியிலிருப்பவர்களெல்லாம் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் என்று நினைத்துப் பழைய கதைபேசி அந்நியருக்கு உதவுவர்கள் என்றெல்லாம் ஒரு சாராரைக் குறைத்துப் பேச முற்படும்போது எங்கள் முகம் சுருங்கவில்லை. ஆட்சியாளர் முகம்தானே சுருங்குகிறது... ஜமீந்தார்கள், ஜாக்கீர்தார்கள், சுதேச மன்னர்கள் இருந்த இடம் தெரியவில்லை. அரசியல் ஜமீந்தார்களுக்கும் வெகு விரைவில் இறுதிக் காலம் வரத்தான் செய்யும்.

**தொழில் துறை ஜனநாயகம் வளர......**

தென்னாட்டிற்கு தொழில் துறையில் முன்னேற்றம் அவசியம். இதுபற்றிக் குறை கூறிப் பேசி இருப்போர் பலர். மத்திய அரசாங்கப் பாவாடையில் கட்டப்பட்டுள்ள, நாடாவாக ராஜ்ய நிலை இருக்கிறதென்று கூறப்பட்டுள்ளது. அந்த நாடாவை அவிழ்க்கவே நாங்கள் விரும்புகிறோம். ஆட்சியாளரை ஆட்சியிலிருந்து விரட்ட விரும்பவில்லை.

ஜனநாயகம் வளர ஏற்பாடு செய்வது அவசியம். விஷயம் தெரிந்த உறுப்பினர்கள் குழுவை ஒவ்வொரு துறையிலும் நிறுவி ஆராய்ந்து, முடிவு காண ஏற்பாடு செய்யலாம். இப்படிச் செய்தால் அனைவருக்கும் பேச சந்தர்ப்பமில்லை என்ற குறையின்றி போகுமே. ஜனநாயக வளர்ச்சியிலும் அனைவருக்கும் பங்கு கிடைக்கும்.

**எங்களை உபயோகப் படுத்தலாம்**

வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்பது வெறும் அடுக்கு மொழியல்ல. ஆலைத் தொழிலாளர் வருமானம், விவசாயிகள் வருமானம், வேலை நாட்கள் முதலிய பல துறைகள் அரசாங்கப் புள்ளிகளைக்கொண்டே பார்க்கலாம். தாரதம்யத்தை அரசாங்கத் தகவல்களே எடுத்துக் காட்டுகின்றன. இவைகள் போக எங்களை கருவிகளாக ஆட்சியாளர்பயன்படுத்திக்கொள்ளலாம். கள்ளி, காளைகளை அகற்றி அனுப்பப்படும் "சாப்பரஸ் அண்டுமைனர்ஸ்"களாக உபயோகிக்கலாம். எங்கள் கரம் அழுக்காகலாம் கருத்தல்ல. பாதை சரிப்பட, மத்திய அரசாங்க அதிகாரங்கள்ராஜ்யத்திற்கு மாற எங்களை உபயோகித்துக்கொள்ளலாம்.

> **அத்தைக்கு மீசை முளைத்தால் .....!**
>
> "நாணயம், கண்ணியம் வேண்டும் என்று அன்பர்கள் பேசுகிறார்கள். ஆனால் அப்படி பேசுகிறவர்கள் முதலில் தாங்கள் நடக்கிறார்களா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெறுமனே மேடை ஏறி பேசினால் போதுமா?
>
> "ஊருக்கு மட்டும் உபதேசம் உனக்கு இல்லையடி" என்று மனைவியிடம் ஒருவர் சொன்னாராம் அப்படிப்பட்ட பழக்கம் தமிழ் பண்பாட்டிற்கு புறம்பானது. (கூச்சல் சிரிப்பு)
>
> "தமிழன் என்றொரு இனமுண்டு; அவனுக்கு தனியே ஒரு குணமுண்டு" என்று நாமக்கல் கவிஞர் பாடி உள்ளார்.
>
> "அதிகார பீடத்தில் உள்ளவர்கள் அவர்களுடைய அதிகார வெறியினால் எங்களை நசுக்கி விட்டார்கள். இல்லாவிட்டால் தேர்தலில் ஜெயித்து ஆட்சியைப் பிடித்து இருப்போம் என்று எதிர்க் கட்சிக்காரர் பேசுகிறார்கள். இது "அத்தைக்கு மீசை முளைத்தால் மச்சான் (சபையில் ஒரே சிரிப்பு)......இல்லை சித்தப்பா ஆகிவிடுவார் என்று சொல்லுவது போல இருக்கிறது. ஆனால் அத்தைக்கு மீசை முளைக்க வேண்டாமா?"
>
> இவ்வாறு சென்னை சட்ட சபையில் கவர்னர் பிரசங்கத்தின் மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய காங்கிரஸ் பெண் பிரதிநிதி திருமதி குழந்தையம்மாள் எதிர்க் கட்சியினரைக் கிண்டல் பண்ணினார். இதற்கு தி. மு. க. பிரதிநிதிகள் ஆட்சேபனை தெரிவித்தார்கள். ஆனால், அந்த அம்மாள் யாரையும் குறிப்பிட்டு பேசவில்லை. அந்த அம்மாளின் தைரியத்தை பாராட்ட வேண்டும் என்று சபாநாயகர் கூறி, ஆட்சேபனைகளை நிராகரித்தார்.

மதுவிலக்கு அமுல் பற்றி பொலீஸ், மந்திரியாக திரு பக்தவத்சலம் பதவி ஏற்ற பின்னர் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுவதற்குத் தம் பாராட்டுதலை திரு அண்ணாத்துரை தெரிவித்தார்..... அதே சமயம் இதற்கு முன்னர் இக்குற்றங்கள் மறைக்-

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பொலீஸாரின் வெறியாட்டத்தில்

## உயிரைப் பலி கொடுத்த தமிழன் தனுஷ்கோடி

## பிரேத ஊர்வலத்தில் 2000 பேர் பங்குபற்றினர்

## அரசாங்க அதிபருக்கு மக்கள் நன்றியும் பாராட்டும்

கடந்த முதலாந் திகதி மன்னார் பொலீஸாரின் வெறியாட்டத்தின் விளைவாக மன்னாரே அல்லோலகல்லோலப்பட்டது. பொதுஜன பாதுகாப்பளிப்பதையே கடமையாகக்கொண்ட பொலீஸார் மக்களுக்கு நேரே நீட்டிய துப்பாக்கியின் குண்டுக்குத் தனுஷ்கோடி என்ற வாலிபர் பலியானார். மற்றும் பலர் காயமடைந்தனர்.

பொதுமக்களைத் தாக்கி உயிர்ச்சேதம் விளைவித்தது மட்டுமல்லாமல் மன்னார் பகுதி அரசாங்க அதிபர் திரு டபிள்யூ. பத்திரனவையும் பொலீஸார் தாக்க முயன்றதாகவும் அவரின் கட்டளைகளுக்குப் பணிய மறுத்ததாகவும் தெரிய வருகிறது.

பிரஸ்தாப சம்பவம் நடந்த அன்று ஒரு பொலீஸ் கோஷ்டியினர் ஜீப் ஒன்றில் தெருவழியாக அடங்காப் பிடாரித்தனமாகவும் எதேச்சாதிகாரமாகவும் நடமாடுவோருக்கு ஆபத்து வரக்கூடிய விதமாகவும் சென்றதாகச் சொல்லப்படுகிறது. இதனால் கலவரமடைந்த மக்கள் பொலீஸ் ஸ்டேஷனை முற்றுகையிட்டனர் என்றும் அப்பொழுது கூட்டத்தைக் கலைக்கப் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

### வாக்கு மூலங்கள்

பிரஸ்தாப சம்பவம்பற்றி தற்போது விசாரணை நடந்து வருகிறது. விசாரணையின் போது சாட்சியமளித்த மன்னார்ப் பகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு அழகக்கோனும் அரசாங்க ஏஜன்டு திரு பத்திரானவும் கூறியவற்றிலிருந்து சம்பந்தப்பட்ட பொலீஸார் குடிபோதையில் இருந்ததாகவும் கடமையை மறந்து நெறிதவறி நடந்ததாகவும் தெரிகிறது. இதுவரை சாட்சியமளித்துள்ள பொலீஸாரின் வாக்குமூலங்களும் இவற்றை ஊர்ஜிதம் செய்யும் வகையில் அமைந்திருக்கின்றன.

### ஊர்வலம்

துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகிய திரு தனுஷ்கோடியின் ஈமக்கிரியைகளை மன்னார்வாசிகள் மிகுந்த அநுதாபத்தோடும் மதிப்போடும் செய்து முடித்தனர். பிரேதம் நகர சபை மண்டபத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்ட பின் ஈமக்கிரியைக்காக வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்தில் பெருவாரியான மக்கள்கலந்துகொண்டனர். மன்னார்ப் பகுதிப் பிரதிநிதி திரு அழகக்கோன் தலைமைதாங்கி ஊர்வலத்தை நடத்திச் சென்றார்.

ஈமக்கிரியைகள் முடிவடைந்ததும் எல்லோரும் மன்னார் அரசாங்க அதிபர் வீட்டு முன்றலில் கூடினர். அங்கே அரசாங்க அதிபர் ஒரு கூட்டத்தையே நடத்தி வைத்தார். கூட்டத்தில் கூடியிருந்த சமார் 2000 மக்களின் சார்பில் தமிழரசுக் கட்சுப் பிரமுகர் திரு ஜேம்ஸ் பேசினார். அவர் பேசியதின் சுருக்கம் வருமாறு:

### நன்றியறிதல்


"இவ்வளவு காலமாக மன்னாரில் நடவாத சம்பவம் இலங்கையிலே நடவாத சம்பவம், அதாவது எங்கள் பகுதித் தலைவராகிய தங்களைப் பொலீஸ் (சப்) இன்ஸ்பெக்டர் தாக்க முன்வந்ததையிட்டு நாங்கள் மிகவும் மனம் வருந்துகிறோம்.

இவ்வளவு காலமாக நாங்கள் தமிழர், முஸ்லிம், சிங்களவர் என்ற பாகுபாடேயின்றி வாழ்ந்து வந்ததை மறந்து பொலீஸ் இன்ஸ்பெக்ரர் தான் ஓர் சிங்களவர் என்பதைக் காட்டிச் சில தமிழரைத் தாக்கியதாகவும் கேள்விப்பட்டோம். இந்த மரண சம்பவத்துடன் தமிழன், சிங்களவன் என்ற இனத்துவேஷமும் கலந்து பரவிக்கொண்டிருப்பது எங்களுக்குக் கவலையைக் கொடுக்கிறது. தாங்களும் ஓர் சிங்களவராயிருந்தாலும் எங்கள்மேல் காட்டிவரும் அன்பும், நீதியும் குறித்து தங்களுக்கு வந்த மாற்றத்தைக்கூட நிறுத்தவேண்டுமென்று மக்கள் கோரினர். எது எப்படி நடந்தபோதிலும் தங்களை நாங்கள் மறப்பதற்கில்லை. தாங்கள் எங்களுக்கு என்றென்றும் உதவியாக இருக்கக் கோருகிறேன்"

### அரசாங்க அதிபர் உறுதி

பின்னர் அரசாங்க அதிபர் பேசுகையில் "இந்தச் சம்பவத்தையிட்டு எனக்குமிகுந்த கவலை இரவு முழுதும் நான் நித்திரை செய்யக்கூட வில்லை. இது இலங்கையில் நடைபெறாத ஒரு அதிசயசம்பவம் தான். நீங்கள் கேட்டுக்கொண்டபடி இங்குள்ள பொலீஸ்காரர் முழுப்பேரையும் மாற்றும்படி நானும்

(9-ம் பக்கம் பார்க்க)



தமிழனுக்கு இலங்கையில் நேர்ந்துள்ள இன்னல்களை உள்ளது உள்ளபடி அறிந்து ஆவன செய்வதில் ஆர்வமுடைய தென்னாடு தி. மு. க. த் தோழர்கள் பலர் அங்கு சென்றிருந்த தமிழரசுக்கட்சிச் சாவகச்சேரிப் பிரதிநிதியான திரு. வி. என். நவரத்தினத்தைத் திருச்சியில் சூழ்ந்து கொண்டார்கள். கூட்டமொன்றை ஏற்பாடு செய்து அதில் அவரை பேசவைத்தார்கள்.

திரு. நவரத்தினம் பேசுகையில் ஈழத்தின் இன்றைய நிலையை எடுத்துரைத்துவிட்டுத் தாய்த் தமிழகத்திடமிருந்து நாம் எதிர்பார்க்கும் மேலான உதவி என்ன என்பதையும் தெரிவித்தார். "டெல்லி அரசாங்கத்துக்கும் மற்றும் வெளியுலகுக்கும் நமது நிலையைத் தெளிவாக்குங்கள்" என்று அவர் வேண்டிக்கொண்டார்.

கூட்டத்தில் தி. மு. க. பிரமுகர்கள் பலரும் பெருந் திரளான மக்களும் பிரசன்னமாகியிருந்தார்கள். திருவாளர்கள் சி. என். அண்ணாத்துரை (திரு. நவரத்தினத்தின் பின்னால்), தர்மலிங்கம், இளஞ்செழியன், கருணாநிதி, திருமதி சத்தியவாணிமுத்து ஆகியோர் மேடையில் வீற்றிருக்கத் திரு. நவரத்தினம் பேசிக்கொண்டிருப்பதைப் படத்தில் காண்க.

## கேளாமல் கிடைத்த நிதி

### மலைநாட்டு மங்கையின் ஆர்வம்

ஆசிரியர்,
சுதந்திரன், கொழும்பு.
அன்புள்ள ஐயா,

இத்துடன் வரும் பணத்தைத் தயைகூர்ந்து உரியவர்களிடம் சேர்ப்பித்துவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

மொழி வெறியர்களிடமிருந்து எமதினிய தமிழ்மொழியைக் காப்பாற்ற அஹிம்சா முறையில் போராட முன்வந்திருக்கும் புனிதமான தமிழரசுக் கட்சிக்கு எம் மனமுவந்த அன்பளிப்பு:

| | | |
|---|---|---|
| 1. | சி. இராசம்மா | ரூ. 3-00 |
| 2. | ப. கந்தவனம் | ரூ. 3-00 |
| 3. | சு. புஷ்பதேவி | ரூ. 2-00 |
| 4. | ப. குணசீலி | ரூ. 2-00 |
| 5. | பி. மைக்கல் | ரூ. 2-00 |
| 6. | ஆர். மணி | ரூ. 2-00 |
| 7. | எஸ். ராஜு சலோசனு | ரூ. 2-00 |
| 8. | எஸ். நல்லம்மா | ரூ. 2-00 |
| 9. | எஸ். இரத்தினவதி | ரூ. 2-00 |
| 10. | வெ. இரத்தின சிங்கம் | ரூ. 2-00 |
| 11. | க. நவமலர் | ரூ. 2-00 |
| 12. | ப. கந்தையா | ரூ. 2-00 |
| 13. | சி. மாதவன் | ரூ. 2-00 |
| 14. | இ. யோ. அரியநாயகம் | ரூ. 2-00 |
| | | 30-00 |

இங்ஙனம்,
நிதி திரட்டியவர்,
சி. இராசம்மா,
392, பேராதனை வீதி,
கண்டி, 2-5-57.

★

குறிப்பு: அன்புள்ள சகோதரி, தமிழ் காக்கத் தங்கள் ஆர்வம் கண்டு மகிழ்ச்சி. தங்கள் நிதி ரூ. 30-00ம் இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொருளாளர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. உரிய பற்றுச்சீட்டு தங்களுக்கு நேரில் அனுப்பி வைக்கப்படும் என்று அறிகிறோம்.

ஆசிரியர்: சுதந்திரன்,
10—5—57.


உத்தரவாதமான உபயோகத்திற்கு

'எக்கோ' வானொலிப் பெட்டிகள்



மொடல் B. 241

டிரை-பட்டரி-வானொலிப் பெட்டி மிகவும் சிறந்தது. அதற்கு இணையான வானொலிப் பெட்டிகளே கிடையாது. அதிதீவிர உணர்ச்சி உடையது. புதிதாக இதில் அமைக்கப்பட்ட குறைவான மின்சாரம் உபயோகிக்கும் வால்வ்கள் பாட்டரியின் ஆயுளை நீடிக்கச்செய்கின்றன.

பிரசித்தி பெற்றதும் திறமையுடையதுமான பலவித விதமான 'எக்கோ' வானொலிப் பெட்டிகளையும், ரேடியோக் கிரம்களையும் இன்றே பார்க்க வாருங்கள். உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் கூடிய வானொலிப்பெட்டி 'எக்கோ'தான்.

'எக்கோ' வானொலிப் பெட்டிகளை நீங்கள் நம்பி இருக்கலாம்.

அக்மி டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்.

பூந்தோட்ட வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரசியல் நாடகம்:

# சிறைகள் நிறைந்தன

—கரிகாலன்

[பின் குரல்: வண்டாடுஞ் சோலையிலே வலம் வந்தவளமார் வண்டமிழைத் துண்டாடித் தொலைத்துவிட அச்சாரம் போட்டது ஓர் சண்டாளக் கூட்டம். பார்த்திருந்த தமிழன் வார்த்தெடுத்த வண்ணச் சிலையா என்ன? ஆர்த்தெழுந்தான் அண்ணல் செல்வரின் தலைமையில். வீட்டுக்கொரு வாலிபன் வேண்டுமென்றார் அண்ணல். வீரநடை போடுகிறார் பொங்கு தமிழ்ச் செம்மல்]

## காட்சி 1

ஆகஸ்ட் 20ம் நாள்

[தனது இல்லாளிடம் விடைபெற்று அறப்போருக்கு ஏகும் நிலையில் ஓர் தமிழ் மகன்]

**அவன்:** அன்பே சென்று வரட்டுமா?

**அவள்:** செல்லுங்களத்தான்; செந்தமிழுக்கு உரிய இடம் கிடைத்தால் திரும்பி வாருங்கள். இல்லாவிட்டால்......

**அவன்:** ......செத்து மடிவேன்; நீ சொல்லி நான் தெரிய வேண்டியதில்லை கண்ணே. தாளமுத்து நடராசனைத் தத்தஞ் செய்தோர் வழிவந்த நான்; திருமலைத் தியாகி நடராசனைத் தத்தஞ் செய்தோர் வழி நின்ற நான்; இதுகூடவா செய்யமாட்டேன். என்னைப் பார். சாகும்வரை சத்திய யுத்தம் புரியச் செய்கின்றேன். ஆகவே திரும்பி வருவேனே இல்லையோ. போகு முன்பு என் பொங்கி வரும் அன்பையெல்லாம் ஒன்று திரட்டிப் பொழிகிறேன் சில முத்தங்கள். எங்கே திரும்பு; அமிழ்தினுமினிய உன் அதரமா தமிழில் காணும் 'ழ'கரமா சுவையானதெனப் பார்த்துவிடுகிறேன்.

**அவள்:** தெள்ளித் தரும் தினைமாவும் தித்திக்கும் நல்லைத்தேனும் இணையாகாதே திந்தமிழுக்கு. என் அதரம் எம்மாத்திரம்?

**அவன்:** அதையும் தான் பார்த்துவிடுவோமே (அவளை முத்தமிடல். அப்போது அவர்கள் செல்வச் சிறுவன் வருதல்]

**சிறுவன்:** அம்மா, அப்பா போருக்கா புறப்பட்டுவிட்டார்; வரும்போது என்னம்மா கொண்டு வருவார்.

**அவன்:** (அவனை வாரியணைத்து) கொண்டு வருவேன் என் குலக்கொழுந்தே. மானத்தைக் கொண்டு வருவேன். தடைபோட்டு நிற்கும் அவமானத்தைக் கொன்று எடை போட முடியாத மானத்தைக் கொண்டு வருவேன். (மனைவியிடம்) அன்பே! செல்கிறேன். வெற்றியுண்டேல் வீடு திரும்புகிறேன். இல்லையேல் வீர சொர்க்கமாவது காணுகின்றேன். பொட்டி ராமுனுவின் பிணத்திலே ஆந்திரம் பிறந்தது; எனது பிணத்திலே கூட்டரசு பிறக்கட்டும்.

**அவள்:** சென்று வாருங்களத்தான். (விடைபெற்று ஏகல்)

## காட்சி 2

ஆகஸ்ட் 20ந், நாள் நண்பகல்:

[டெம்பிள்ட்ரீஸில் அந்தரங்க மாநாடு. கல்வி மந்தி(ரி)யும், பண்டாவும், ஐ. ஜி. பியும்]

**ஐ. ஜி. பி:** சார், வடகீழ் மாகாணத்திலிருந்து தகவல் வந்திருக்கு சார்; இந்த ஆர்ப்பாட்டக்காரர் இருபத்தையாயிரம் பேர்தானே கேட்டிருந்தாங்க; ஆனால் ஐம்பதாயிரம் பேர் போராட்டத்தில் குதிச்சிருக்கிறாங்களாம்.

**கல்வி:** வாட் (What) ஐம்பதினாயிரமா? இவங்களெல்லாம் எங்கிருந்து வந்தாங்க? யார் பெத்தாங்க இவங்களையெல்லாம்? ஒண்ணுமே புரியலையே. ஐ. ஜி. பி. சார் இவங்களையெல்லாம் அரெஸ்ட் பண்ணனும்; உடனடியாக அரெஸ்ட் பண்ணனும்...நான் கட்டளையிடுகிறேன்.

**பண்:** ஏய்யா கல்வி மந்திரி, நீ ஏனைய்யா கைது செய்யுற விஷயத்துக்குப் போறே? உனக்கு யாரு அதிகாரம் கொடுத்தான்?

**கல்வி:** அது கேட்டீங்களோ உண்மைதான்.

**ஐ. ஜி. பி:** அரெஸ்ட் பண்றதிலே ஒண்ணுமில்லை சார்; ஆனால் அடைச்சு வைக்கிறதுக்கு இடமில்லையே. அடைச்சு வைச்சாலும் 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை நமை மாட்ட நினைக்குஞ் சிறைச்சாலை' எங்கிறாங்க.

**கல்வி:** பார்ரா சுத்தபைத்தியக்காரங்களா இருப்பாங்க போலிருக்கே. அது சரி அத்தனை பேரையும் அடைக்க இடமில்லாதுபோனால் ஒண்ணு செய்ய வேண்டியதுதானே. போராடும் சமயமாப் பாத்து அரைவாசிப் பேரை அடிச்சு நொறுக்கிவிட வேண்டியது தானே.

**ஐ.ஜி. பி;** எதுக்காக அடிச்சு நொறுக்கணும்? என்ன செய்தாங்க? அவங்க போராடுறதாச் சொல்லியிட்டு ஒரு கலவரமுமில்லாமக் காரியத்தைப் பாக்கிறாங்க நம்ம பொலிஸ் புலிகள்தான் வீண் கலவரம் உண்டாக்குறாங்க. பார்க்கப்போனால் அவங்களை அரெஸ்ட்பண்ணக்கு முன்பு பொலிஸ்காரங்களை அரஸ்ட்பண்ண வேண்டியிருக்கு. போதாக்குறைக்கு நம்ம ஆகாயப் படை கடற்படை வீரரெல்லாம் அங்கே குவிஞ்சுட்டாங்க.

**கல்வி:** இவங்கள் ஏன் அங்கே போனாங்க; பறக்கிறவங்களும் நீஞ்சுறவங்களும் ஏன் தரையில தாவுறாங்க?

**பண்:** மூச்சு...அதைப்பற்றி நீ பேசாதையா (சுங்கானைப் புகைத்தவாறே) ஐ. ஜி. பி. சார் இப்படிச் செய்தா என்ன? இடம் போதாதுன்னு கண்டால், பேசாமல் சிறையில் இக்கிற ஐ. ஆர். சிக்களையெல்லாம், அதாவது கொலை செஞ்சவங்க, கொள்ளையடிச்சவங்களையெல்லாம் விடுதலை செஞ்சிட்டு, இந்த ஆர்ப்பாட்டக்காரரைப் பிடிச்சு அடையுங்க.

**ஐ. ஜி. பி:** என்ன சார்; சுத்த அநியாயமா இருக்கே நீங்கள் சொல்றது. கொலைகாரங்க, கொள்ளைக்காரங்களைவிடக் கேவலமாவா இவங்களை நினைக்கிறீங்க கொஞ்சம் மனச்சாட்சியோடை யோசித்துப் பாருங்க. எத்தனை பட்டதாரிகள், பண்பு வாய்ச்சவங்கள்ளாம் அமைதியா அறப்போர் நடத்துறாங்க. அவங்களுக்கு இப்படி அநியாயஞ் செய்தா அயல்நாடுகள் என்ன சொல்லும்.

**பண்:** ஏது? ஏது? கொள்ளைக்காரனையே துப்பறிய விட்டமாதிரித்தான். யாரைப் போராட்டத்தை அடக்க அனுப்பினேனே அவரே அவங்களுக்காகப் பேச ஆரம்பிச்சால்......

**ஐ. ஜி. பி:** மன்னிச்சிடுங்க; மனச்சாட்சி இடைல உண்மையை உளறியிடுகுது.

**கல்வி:** பாத்திங்களா? பாத்திங்களா? இந்தப் பொலிஸ் டிப்பார்ட்மெண்டே யூ. என். பியோடே ஆட்கள் என்று தான் தெரியாமலா பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டேன்.

**ஐ. ஜி. பி:** பொறுப்பற்றதிலை எனக்கு எப்போதுமே ஏற்பட்டதில்லை சார். ஆனால் பெரும்பான்மையான பொலிஸ்காரங்களும் பட்டாளக்காரங்களும் தான் பொறுப்பில்லாமல் நடந்து கொள்ளுறாங்க.

**பண்:** என்ன? என்னது? ஏன் அப்படி?

**ஐ. ஜி. பி:** அவங்கள்ளாம் தமிழ் பேசுறவங்க. போராட்டக்காரருக்கெதிராகத் துப்பாக்கியைத் தூக்கிப் பிடிக்கிற நேரத்திலும் கண்ணீர் வடிக்கிறாங்க.

**கல்வி:** யாராவது 'ரியர் காஸ்' (கண்ணீர்ப் புகை) அடிச்சிருப்பாங்க.

**ஐ. ஜி. பி:** அதொண்ணுமில்லை சார் என்னமோ இன உணர்ச்சியாம், தங்கள் தாய்க்காகத் தங்கள் சகோதரர்களெல்லாம் சண்டை போடும்போது, அவர்களுக்கெதிராகத் துப்பாக்கியைத் தூக்கிப் பிடிக்கும்போது, தங்களையறியாமலே கைகள் நடுங்குதாம், கண்கள் கலங்குதாம்.

**பண்:** இன உணர்ச்சி மண்ணாங்கட்டி; அவங்களையெல்லாம் உடனடியாக வேலையைவிட்டு நீக்க வேண்டியது தான்......ஆம் வேண்டாம் வேண்டாம்......அப்புறம் பொறுத்த நேரத்திலை படைபலம் குறைஞ்சிடும். ஐ. ஜி. பி. சார் நான் இப்போதே வடகிழக்கு மாகாணங்களுக்கு நம்ம செக்ரடரியை அனுப்பி நிலையை நேரடியாக ஆராய்ஞ்சு வரச் சொல்றேன்.

**ஐ. ஜி. பி:** நானும் அவருடன் செல்கிறேன்.

**பண்:** ஆகட்டும்.

**ஐ. ஜி. பி:** குட் பை (Good bye) (தலையசைக்கிறார் பண்டா. ஐ. ஜி. பி. போகிறார்)

**பண்:** சரி சரி (கல்வி மந்திரியிடம்) அந்தப் பேப்பரை எடும். நம்ம எரிக்கரைப் பத்திரிகை என்ன எழுது து பார்ப்போம். (முதற் பக்கத்தைப் பிடித்தல்) "Fifty thousand volunteers on march... Federal Party leading, and all other parties following" (விக்கல் எடுக்கிறது, கல்வி மந்திரியிடம்) தண்ணீ......தண்ணீ......கொஞ்சம் தண்ணீர்......

## காட்சி 3

[வடகீழ் மாகாணச் சிறைகளினுள் இருந்த கொள்ளைக்காரரும் கொலைகாரரும் விடுதலை செய்யப்பட்டு அறப்போர் வீரர்கள் அடைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். வீரர்களை விடுதலை செய்யும்படி கோரி சிறைக்கு வெளியே மக்கள் கூச்சலிடுகிறார்கள். வெளியே ஒரு ஒதுக்குப்புறமாக நின்று நிலையைக் கவனிக்கின்றனர் ஐ. ஜி. பியும் பண்டாவின் செக்ரடரியும். சிறையினுள்ளே செல்வர் பேசுகிறார்]

**செல்:** செந்தமிழ்ச் செம்மல்களே! அடைபட்டுவிட்டோம்; ஆனால் தடைபட்டுவிடவில்லை எமது இலட்சியம். சிறைச்சாலைக்கு வெளியே ஆயிரம் ஆயிரம் தமிழ் அடலேறுகள் ஆத்திர உணர்ச்சி பொங்க நிற்பதைக் காணுகின்றேன்; நான் ஆணையிட்டால் போதும்; என் சுட்டு விரல் அசைத்தால் போதும். உடைபட்டுவிடும் இந்தச் சிறைச்சாலை; என் உத்தரவு கிடைத்தால் உடைத்தெறிவார்கள் வெளியே நிற்கும் உத்தமர்கள். ஆனால் வெளியே நிற்கும் ஆட்சியின் அடிவருடிகள் அச்சமடைய வேண்டாம். அமைதியே எமது பூஷணம். கடமை கண்ணியம் கட்டுப்பாடு எமது கட்கம். இந்தச் சிறைச்சாலை எமது பயிற்சி முகாம். இன்னும் சிறிதுநேரத்தில் சிறைப்பட்ட தொண்டர்களுக்கு இங்கு பயிற்சி வகுப்பு ஆரம்பமாகும். தீப்பொறி பறக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

**ஐ. ஜி. பி:** (கவனித்துவிட்டு) செக்ரடரி சார் வெளியே புரட்சி செய்யுறாங்கன்னுதான் உள்ளே அனுப்பினோம்; உள்ளேயும் புரட்சி செய்யுறாங்களே.

**செக்:** அப்போ வெளியே அனுப்பிவிடுவோமா?

**செல்;** (தொடர்ந்துபேசல்) எமது உரிமைப் போர் இன்னும் ஓய்ந்துவிடவில்லை. பாய்ந்து வரும் கடலை அடக்கலாம் ஆனால் பொங்கிவரும் எமது உணர்ச்சிகளை அடக்க முடியாது. சிறைப்பட்ட சிங்கங்களே! சிறைக்கு உடலை இரையாகக் கொடுத்தீர்கள்; செந்தமிழுக்காக உயிரைக் கொடுக்க இத்தனை பேரும் தயாரா இனியும் தயார்தானா? சிறையிலே வைப்பட்ட அனுபவம் அல்லவா சுப்பட்டது என எவருங் கண்டால் அவர்களுங் கூறுங்கள். இனிமேலுந் தயார் தானா?

**குரல்கள்;** (சிறையே அதிர்ந்துவிடுமளவுக்கு) தயார்! தயார்! தயார்!

**செல்:** மகிழ்ச்சி

**ஐ. ஜி. பி:** ஒ...ஆத்திரத்தில் மறந்துவிட்டேன்...... இவர்களைப் பார்த்தால் சிறைப்பட்டவர்கள் போலவா இருக்கிறது?

[சிறையினுள்ளேயிருந்து குரல்கள்; மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை

**ஐ. ஜி. பி:** செக்ரடரி சார்; போராட்டத்தை நேரிலே பார்த்துப் பிரதமரிடம் ஆலோசனை கூறவல்லவா வந்தீர். இப்போ எப்படி ஆலோசனை கூறப்போகிறீர்?

**செக்:** நேரிலே பார்த்தேன்; உறுதிப்பாட்டினை உணர்ந்து கொண்டேன்; அறப்போருக்கு இத்தனை சக்தி இருக்குமென எதிர்பார்க்கவில்லை. எனது ஆலோசனையின்பேரில் பிரதமர் விடுக்கப்போகும் அறிக்கையைப் பத்திரிகையில் படித்துக் கொள்ளுமேன். நான் வருகிறேன் (செல்கிறார்)

மறுநாள்...பத்திரிகையின் இடதுபக்கத்தில் தலைப்பு: சமஷ்டி அரசியலமைப்பினை வரவேற்கின்றேன்.

வலதுபக்கத்தில் தலைப்பு: அறப்போர் வீரருக்கு வரவேற்பு.

# மக்கள் குரல்

## யார் இவர்கள்?

பிரதமர் பண்டாரநாயகா, "நியாயமான அளவு தமிழ் உபயோகம்" என்னும் தனது திட்டம் பற்றி, ஓர் முடிவுக்கு வருமுன், பத்திரிகைகளில் வெளிவந்த செய்திப்படி, திரு. கே. வி. நடராஜா, செனட்டர் எஸ். நடேசன் முதலிய தமிழ்த் தலைவர்களைக் கலந்தாலோசித்ததாகவும். அவர்கள் தன் திட்டத்தை முழு மனதுடன் ஆதரித்ததாகவும் கூறியிருக்கின்றார்.

என்னே பரிதாபம்! தமிழ் மக்களின் உரிமை பற்றித் தீர்மானிப்பதற்கு ஆலோசனை கூறுவதற்கு தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களோ, அல்லது தமிழ் மக்களிடையே நெருங்கிப் பழகும் பொதுநல ஊழியர்களோ பண்டாரநாயகாவிற்குக் கிடைக்கவில்லை. இரண்டே இரண்டு வழக்கறிஞர்கள்தான், தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வைப் பற்றித் தீர்மானிப்பதற்கு அகப்பட்டிருக்கின்றார்கள். எவ்வளவு அக்கறை தமிழ் மக்கள்மேல் 'பண்டா'விற்கு என்பதைத் தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இராவணனை இராமனிடம் காட்டிக் கொடுப்பதற்கு ஒரு விபீஷணன் தோன்றி [illegible] கொடுப்பதற்கு திரு கே. வி. நடராசாவும், செனட்டர் எஸ். நடேசனும் தோன்றியிருக்கின்றனர் இன்று. மேற்கூறிய இருவரும்தான் தமிழ் மக்களின் தனிப்பெருந் தலைவர்களாகத் தெரிவு செய்திருக்கின்றார் நம் மதிப்புக்குரிய பிரதமர். தமிழ் மக்களின் உயிராகிய தமிழ் மொழியின் உரிமை பற்றி 'பண்டா'வுடன் பேரம் பேசுவதற்கு இவர்களிருவரும் யார்? மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களா? அல்லது மக்களிடையே இருந்து சமூக சேவை செய்யும் பொதுநலத் தொண்டர்களா? இல்லவேயில்லை. பின் இவர்கள் யார் என ஆராய்ந்து பார்த்தால் இருவரும் பிரபல வழக்கறிஞர்கள். 'கறுவாக்காடு' மதிக்கும் பிரமுகர்கள். இவர்களில் பின்னவர் பல இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவுடன் செனட்டராகத் தெரிவு செய்யப்பட்டவர். நேரத்திற்கு நேரம் நிறம் மாறும் பச்சை ஓணான் போல, இவரும் காலத்துக்குக் காலம் கட்சி மாறும் இயல்புடையவர்கள். இப்பெரியார் முதன்முதல் என். எல். எஸ். எஸ். பி.யிலும், பின் தமிழரசுக் கட்சியிலும், தமிழ் காங்கிரஸிலும், தற்சமயம் அரசியல் அனாதையாக, காணியாகும் தன் செனேட்டர் பதவியை மீண்டும் புதுப்பித்துக் கொள்வதற்காகப் 'பண்டா'விடம் தஞ்சமடைந்திருக்கின்றார். இங்கு தமிழ் மக்கள் மொழியுரிமையிழந்து அவதிப்படுகின்றார்கள். இழந்த உரிமையை மீண்டும் பெற ஆகஸ்ட் மாதத்தில் ஆட்சியினரை எதிர்த்துச் சாத்வீக முறையில் போராட்டம் நடத்த மகாத்மா காட்டிய பாதையில் திட்டம் பல தீட்டிக் கொண்டிருக்கின்றார்கள் தமிழ்த் தலைவர்கள். ஆனால் இவர் ரோம் நகரம் தீப்பற்றியெரியும்போது வீணை வாசித்த நீரோ மன்னன் போல, ரஷ்யாவிற்கு திக்விஜயம் செய்திருக்கின்றார். இவர் தமிழ் மக்களின் தலைவரா?

பண்டாவின் இரண்டாவது தலைவர், நமது மதிப்பிற்குரிய அட்வகேட் கே. வி. நடராசா அவர்கள். இவர் யார்? எங்கிருக்கிறார் என்பதே தமிழ் மக்களில் 99 விகிதத்தினருக்குத் தெரியாது. முன்னவரை, செனேட்டர் என்ற அளவில் சிலருக்குத் தெரிந்திருந்தாலும், திரு. நடராசாவை கறுவாக்காட்டு நவநாகரிக மக்களுக்கும், இவரது சொந்தக் கிராமத்திலுள்ள ஒரு சிலருக்கும் தெரியுமே தவிர மற்றவர்களுக்குத் தெரியாது. மக்களிடையே அறிமுகமில்லாத ஒருவர், தமிழ் மக்களின் தலைவரா? அப்படிப்பட்ட இப்பிரமுகர், இன்று தமிழ் மக்களுக்கு பண்டாவின் 'நியாயமான அளவு தமிழ் உபயோகம்' என்னும் திட்டத்திற்கு வக்காலத்து வாங்கிப் பத்திரிகைகளில் அறிக்கை விடக் கிளம்பியிருக்கின்றார்.

தமிழ் பேசும் மக்களே! நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். பண்டாவினால் தமிழ் தலைவர்களெனப் பட்டஞ் சூட்டப்பட்ட இவர்கள் எப்போதாவது தமிழ் மக்களின்

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல்லுக் கழன்ற நரியின் பரிதாபம்!

## பழம் புளிக்கிறதாம்!

## தமிழரசுக்கட்சியின் வளர்ச்சியைக் காணத் திரு. குமாரசாமிக்கு வயிறு பற்றி எரிகிறது

## அபாண்டங்களைச் சொல்லிப் பார்க்கிறார்; ஆனால் கேட்பார் யாருமில்லையே!

"வட இலங்கையின் அரசியல் சூழ்நிலையில் குறிப்பிடத்தக்க மிக விசேஷ அம்சம் சமஷ்டிக் கட்சி பிரதான அரசியல் சக்தியாக அங்கு தலையெடுத்திருப்பது தான்" எனச் சாவகச்சேரியின் முன்னைநாள் எம். பி. திரு வி. குமாரசாமி 12-4-57ல் வெளிவந்த வீரகேசரிமூலம் வெளியிட்டுள்ள அபிப்பிராயம் பண்டாரநாயகா உட்பட அனைவரும் அறிந்த உண்மை. ஆனால் திரு குமாரசாமி வகுப்புவாத உணர்ச்சியைத் தூண்டிச் சமஷ்டிக் கட்சி தேர்தலில் ஜெயித்ததென்று கூறுவது சாவகச்சேரித் தொகுதியைப் பொறுத்த வரையிலாவது பொருத்த மற்றதென்பது பலருமறிந்ததொன்று. ஏனெனில் தேர்தற் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்கள் தமிழ் இராச்சியம் அமைத்தே தீருவர் எனவும், இன்னும் மூன்று ஆண்டுகளில் யூ. என். ஓவில் தமிழ்ப் பிரதிநிதிகள் இடம் பெறுவரெனவும், சமஷ்டிக் கட்சி பண்டாரநாயகாவுடன் இரகசிய உடன்படிக்கை செய்துகொண்டு தேர்தலில் இறங்கியிருக்கிறதெனவும் தேர்தலில் ஜெயித்தால் சமஷ்டிக் கட்சிப் பிரதிநிதிகள் பண்டாரநாயகாவின் மந்திரி சபையில் இடம் பெறுவர் எனவும் இன்னும் பல்வேறு வகையாகவும் திரு குமாரசாமி பேசியது இன்னும் எங்கள் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

### திரு குமாரசாமியின் தோல்வி

சமஷ்டிக் கட்சியினர் சமஷ்டி அரசியலுக்குட்பட்ட ஒரு ஐக்கிய இலங்கைக் கொள்கையை முன்வைத்தே தேர்தற் பிரசாரஞ் செய்தனர். ஆனால் திரு குமாரசாமி இரு இராச்சியங்களைக்கொண்ட பிரிவினை இலங்கையையே மக்கள் முன்வைத்துப் பேசினார். அவரது பேச்சு வகுப்புவாத உச்சநிலையை அடைந்திருந்தது. அவரது சொல்லும் செயலும் நெடுங்காலமாக ஒத்தியங்காதபடியால் அவர் தோற்றாரென்று கூறலாமேயன்றி சமஷ்டிக் கட்சி வகுப்புவாதத்தைக் கிளப்பியபடியால் தோற்றாரென்பது சிறிதும் பொருந்தாது. தேர்தலை முன்னிட்டுத் தொடங்கிய அவரின் அதிதீவிர வகுப்புவாதப் பிரசாரந்தான் அவரைப் படுதோல்வியடையச் செய்ததென்பது பொருத்தமாகும்.

### அரசாங்க பாஷை- ஆரம்ப நடவடிக்கை

"சமஷ்டிக் கட்சி பதவியேற்ற ஒரு வருடத்திற்குள் சிங்களம் ராஜாங்க பாஷையாகிவிட்டது" எனத் திரு குமாரசாமி கூறுகிறார். சிங்களம் ராஜாங்க பாஷையாதற்குரிய உற்பாதம் திரு குமாரசாமி அரை மந்திரிப்

**இ. கந்தையா**

பதவியில் இருந்த காலத்திலேயே ஏற்பட்டதென்பதையும் அப்போதும் அவர் அரை மந்திரிப் பதவியை ராஜினாமாச் செய்தும் தமது 'அலவன்னை'ப் பெற்றே வந்தாரென்பதையும் அவர் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். இப்பதவியைக் கூட அவர் ராஜினாமாச் செய்தது தேர்தல் நெருங்கிவிட்டபடியாற்றான் என்பதையும் நாம் அவருக்கு ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் கொத்தலாவலை அரசாங்கத்திலிருந்து திரு குமாரசாமியின் பதவியை ராஜினாமாச் செய்விக்கப் பல்வேறு வழிகளில் முயன்றதும் அவற்றிற்கெல்லாம் திரு குமாரசாமி செவிசாய்க்காததும் தமிழ் மக்கள் மறந்தனவன்று.

### த. பே. மக்கள் சுமத்தியுள்ள பொறுப்பு

கடந்த ஒரு வருட காலத்தில் சமஷ்டிக் கட்சி எம். பீக்களின் முயற்சியால் ஒரு அபிவிருத்தி வேலைகூட ஆரம்பிக்கப்பட்டதில்லை எனத் திரு குமாரசாமி கூறுகிறார். உண்மைதான். சிங்கள இராச்சியத்தில் தமிழர் உரிமையற்றிருக்கிறார்களென்பதைத்தான் சமஷ்டிக் கட்சி பன்பது ஆண்டுகளாகக் கூறி வந்துள்ளது. உப தபாற் கந்தோர்களைத் திறந்து வைப்பதற்கும் ஆஸ்பத்திரிகளை இரந்து பெறுவதற்கும் மட்டும் தமிழ் மக்கள் விரும்பியிருந்தால் திரு குமாரசாமியை அனுப்பியிருப்பார்கள். ஆனால் தமிழ் மக்கள் மிகப் பெரிய பொறுப்பொன்றை ஏற்றுக்கொள்வதற்காகவே சமஷ்டிக் கட்சியை ஆதரித்தார்களென்பதையும் சமஷ்டிக் கட்சியினர் ஒரு வருட காலத்திற்குள் தாம் அப்பொறுப்பை ஏற்க ஆயத்தமென்பதைத் திரு பண்டாரநாயகா உட்பட அகில இலங்கையும் அறியச் செய்துவிட்டார்களென்பதையும் திரு குமாரசாமி அறியக்கடவர்.

### நண்பர் சிந்திக்கட்டும்

அபிவிருத்தி வேலைகளில் அயராதுழைத்த திரு குமாரசாமிபோன்ற 'அறிஞர்'களை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத காரணத்தையும் அவர் சிந்திக்கக்கடவர். தமிழ் மக்கள் அபிவிருத்தி வேலையிலும் பெரிதாக மதிப்பது ஏதோ இருக்க வேண்டும் என்பதையும் அதற்காகவே திரு குமாரசாமியின் ஈடும் எடுப்புமற்ற அபிவிருத்தி வேலைகளைத் தமிழ் மக்கள் புறக்கணித்தார்களென்பதையும் நண்பர் சிந்திக்கக்கடவர்.

### அறியாமை

"உள்நாட்டு மந்திரி திரு ஜெயசூரியா வடமாகாணத்திற்கு விஜயஞ்செய்தபோது அவரது வருகையைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனச் சமஷ்டி எம். பீக்கள் அறிக்கை விட்டார்கள்" எனத் திரு குமாரசாமி கூறுவது முழுப் பூசணிக்காய்க் கதையே யென்பது முற்றிலும் உண்மை. இத்தகைய பிரசாரத்தின் தீங்கைச் சென்ற தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதன் மேலும் திரு குமாரசாமி விளங்காமலிருப்பதற்குரிய காரணம் எமக்கு தெரியவில்லை. உள்நாட்டு மந்திரி தமது விருந்து வைபவத்திற்குச் சிங்களத்தில் அழைப்பு அனுப்பியபடியால் அதனைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனச் சமஷ்டிக் கட்சி அறிக்கை விட்டதை நண்பர் குமாரசாமி இவ்வாறு திரித்துக் கூறுவது அவரது எதிர்காலத்தையும் இருள்மயமாக்குவதாகும். சமஷ்டிக் கட்சியின் தீர்மானத்திற்கும் அறிக்கைக்கும் மாறாக அக்கட்சிப் பிரதிநிதிகள் எவரும் நடக்கவில்லை என்பது முன்னரே தமிழ் மக்கள் கண்ட முடிபு.

### நகைத்து ஒதுக்கப் பட்டது

கொழும்பில் ஒரு சமஷ்டிப் பிரமுகர் ஒருநாள் சிங்கள சிறீ காரில் பிரயாணஞ் செய்ததும் அதற்கு அப்பிரமுகர் கூறிய விளக்கமும் பத்திரிகைகளில் வெளிவந்தனவாகும். இலக்கத்தைக்கவனியாமலே தாம் அக்காரில் ஏறிவிட்டதாகவும் இலக்கத்தைப் பார்த்தாலுங்கூட அச்சந்தர்ப்பத்தில் தாம் அக்காரில் பிரயாணஞ் செய்வதைத்தவிர வேறு மார்க்கமில்லையெனவும் அப்பிரமுகர் கூறிய கரவற்ற வார்த்தைகளை அறியாதவர் போலத் திரு குமாரசாமி, "கொழும்பில் ஒரு சமஷ்டிப் பிரமுகர் சிறீ இலக்கக் காரில் பிரயாணஞ் செய்கிறார்" என நிகழ்காலத்தாற் கூறியது நகைத்தொதுக்கப்பட்டது.

### வாலறுந்த நரியும் பல்லுக் கழன்றநரியும்

சிறீ எதிர்ப்பு விஷயத்தில் திரு பொன்னம்பலம் மேற்

(11-ம் பக்கம் பார்க்க)

# குரங்குகளின் திடீர் மரணம்!

## புதுடில்லிக்கருகில் 500க்கு அதிகமான குரங்குகள் செத்தும் சாகும் நிலையிலும் இருந்தது பற்றிப் பலவிதமான சந்தேகங்கள்

### டில்லி நகரசபை விசாரணை செய்து வருகிறது

புதுடில்லியில் பழைய கோட்டையின் (புரான கிலா) கிழக்கு, வடகிழக்கு மதிற்சுவர்களை அடுத்துள்ள வனத்திலும் புதர்களிலும் சுமார் 500க்கு மேற்பட்ட குரங்குகள் செத்துக்கிடந்தனவாம்.

அவ்வழி சென்ற நிருபர் ஒருவர் குரங்குகளின் மண்டை ஓடுகளும், எலும்புகளும், அழுகிய சவங்களும் புதுடில்லிக்கு கிழக்கிலுள்ள சாலைகளிலும், மதுராசாலையிலும் சுமார் 2 சதுர மைல் பரப்பளவு பிரதேசத்தில் சிதறிக்கிடப்பதை கண்ணுற்றார். இவற்றை நுணுகி ஆராய்ந்தபோது இக்குரங்குகள் சிறுகச் சிறுக பலநாள் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டதால் இவை இறந்திருக்க வேண்டும் என்று எண்ணச் செய்கிறது.

### மரங்களில்

சில சவங்கள் மரங்களின் கிளைகளிலேயே தொங்கி ஊசலாடிக்கொண்டிருந்தன. இவற்றின் கரங்கள் கிளைகளை வலியப் பற்றியபடி இருக்க அழுகிய கூடுகள் தொங்கிக்கொண்டிருந்தன, மற்றும் சில நூறு குரங்குகள் குட்டிகளுடன் மரக் கிளைகளிலும் ரஸ்தா வேலிகளிலும் வரிசைவரிசையாக உட்கார்ந்திருந்தன. இவைகளுடைய கண்கள் அரைகுறையாக மூடியிருந்தன. ஏதோ மயக்கத்தால் பாதிக்கப்பட்டவைபோல் சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தன.

இவற்றை கண்ணுற்ற சில குழந்தைகள் கற்கள் முதலியவற்றை வீசி இவற்றை விரட்ட முற்பட்டனர்; ஆனால் மயக்க நிலையில் பல் லைக்காட்டி சீறினவேயன்றி உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு நகரவே இல்லை.

### சாரணர் விஜயம்

சாரணர் படையைச் சேர்ந்த சிலர் இந்த இடத்துக்குச் சென்று இக்குரங்குகளின் மாயச்சாவின் மர்மத்தையுப்பற்றியும் ஆராய முற்பட்டனர். யாரோ இந்தக் குரங்குகளை வேறு எங்கோ இருந்து வண்டிகளில் ஏற்றி வந்து ரகசியமாக இங்கு விட்டுவிட்டுச், சென்றிருக்க வேண்டும் என்று சாரணர்கள் யூகிக்கின்றனர்.

### தாண்டி வந்தன

கிழக்குச்சாலை பிரதேசத்திலிருந்து நூற்றுக்கணக்கான குரங்குகள் கடந்த சில நாட்களாக இந்த கோட்டையை நோக்கி தள்ளாடி ஊர்ந்து வருவதையும் கண்டனர். இரவு நேரத்தில் யாரோ இவற்றைக் கொண்டு வந்து விட்டுச் சென்றுள்ளனர் என்றும் எண்ணுகின்றனர்.

### மர்ம வேலையல்ல

கோட்டைப்பிரதேசவாசிகள் இந்தக் குரங்குகளின் ரத்தம் ஏதோ மருத்துவ ஆராய்ச்சிக்காக எடுக்கப்பட்ட பின்னர் இவற்றை இவ்விதம் கொண்டு வந்து விட்டிருக்க வேண்டும் என்று யூகிக்கின்றனர். ஆனால் சர்க்கார் மருத்துவ ஆராய்ச்சி சாலைகள் இவ்வித மர்ம வேலை நடந்திராது என்றும் வேறு தனிப்பட்டவர்கள் தான் இப்படி [illegible] பார்கள் என்றும் [illegible] துகின்றனர்.

### தொற்று நோய்

இந்த மாயா சாவு பற்றி எண்ணற்ற யூகங்கள் தோற்றமாகி வருகின்றன என்றாலும் திட்டமான காரணம் எதுவென இதுவரை புலனாகவில்லை. வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய ஹரிதுவாரம், ரிசிகேசம் மற்றும் உத்தர பிரதேச வட்டாரங்களிலிருந்து இவற்றைப் பிடித்து வந்திருக்க வேண்டும் என்று இவை ஏற்றுமதிக்கான உடல்வளம் முதலியன பெற்றிருக்காததால் இவ்விதம் இந்த பிரதேசத்தில விடப்பட்டிருக்கலாம் என்றும் கருதுகின்றனர். சில நோயுற்ற குரங்குகளால் இப்பிரதேசத்திலுள்ள மற்ற குரங்குகளும் நோயுற்று ஏராளமாகச் செத்திருக்கலாம். குரங்குகளுக்கு வயிற்றுக் கடுப்பு, அஜீரணம், க்ஷயம் முதலிய நோய்கள் ஏற்படுவது இயல்பென்று வைத்தியர்கள் கருதுகின்றனர். இவை தொத்து நோய்களாகையால் எளிதில் பரவும் இவற்றை பாதித்துள்ள க்ஷய நோய் மனிதர்களையும் பற்றிக்கொள்வது இயல்பு.

டில்லியிலுள்ள பழைய கோட்டைக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்ட ஏராளமான குரங்குகள் இறந்து கிடந்த மர்மத்தைப்பற்றி புதுடில்லி நகர சபை கமிட்டியின் சுகாதார இலாகா விசாரணை நடத்தி வருகிறது.

### வயிற்றுப் போக்கு

வயிற்றுப்போக்கின் கார [illegible] இறந்திருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது.


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1957 மே மாதம் 12-ந் திகதி

394 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

## பிரசாரத்துக்கு உபசாரம்!




# சிங்களக் குடியேற்றம்

"தமிழுக்கு சமஅந்தஸ்து பெறுதல்; மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு பிரஜாவுரிமை பெறுதல்; தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத்தைத் தடை செய்தல்; இலங்கைக்கு ஒரு சமஷ்டி ஆட்சி முறையை நிறுவுதல்—ஆகிய இவைகள் தமிழரசுக் கட்சியின் நோக்கங்கள் என்று சொல்லப்படுகின்றன. தமிழ் பகுதிகளில் சிங்களவர்கள் குடியேறக்கூடாதென்றால் சிங்களப் பகுதிகளில் தமிழ் மக்கள் மட்டும் எப்படிக் குடியேறலாம்? சிங்களவர்களும் தங்கள் பகுதிகளிலிருந்து தமிழர்களை வெளியேறும்படி கூறினால் என்ன செய்வது? தமிழரசுக் கட்சியாரின் மனப்பான்மையை சிங்களவரும் கொண்டால் அதில் தவறு என்ன சொல்ல முடியும்?"

கடந்த வாரம் யாழ்ப்பாண முற்றவெளியில் நடைபெற்ற மே தின விழாவில் செனட்டர் திரு பி. நாகலிங்கம் மேற்கண்டவாறு பேசியதாக தினப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கிறது.

திரு நாகலிங்கம் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த ஒரு தமிழ்த் தோழர். தாம் சார்ந்து நிற்கும் கட்சிக்காகப் பேச வேண்டியது அவர் கடமை. தமது கட்சியின் உண்மையான உயர்வுகளையிட்டு அவர் பேசுவதை நாம் வரவேற்போம். ஆனால் தமது கட்சிக்கு முண்டு கொடுப்பதற்காக உண்மையை மறைத்து அல்லது திரித்து விதண்டாவாதத்தில் இறங்குவது அவர் தம்முடைய பலவீனத்தையும் தாம் சார்ந்து நிற்கும் கட்சியின் பலவீனத்தையும் பகிரங்கமாக ஒப்புக்கொள்வதாகவே முடியும்.

சிங்களக் குடியேற்றம் சம்பந்தமாக தமிழரசுக் கட்சியின் திட்டவட்டமான கொள்கை என்னவென்பது நாடறிந்த விஷயம். பல மேடைகளில் தமிழரசுக் கட்சித் தலைவர்களால் விளக்கப்பட்ட விஷயம். இது திரு நாகலிங்கத்திற்கு மட்டும் தெரியாமல் இருக்க நியாயமில்லை. சிங்களக் குடியேற்றம் சம்பந்தமாகத் தமிழரசுக் கட்சியின் கொள்கை என்னவென்பது திரு நாகலிங்கத்திற்குத் தெரியவில்லையென்றால் அது அவருடைய அறியாமையையே காட்டுவதாகும். தெரிந்தும் அவர் மேற்கண்டவாறு விதண்டாவாதம் புரிகிறார் என்றால் தமிழ் பேசும் மக்கள் அவருடைய யோக்கியதையைப்பற்றி, நாணயத்தைப் பற்றி ஐயுறவு கொள்ள வேண்டியதுதான்.

தமிழ் பேசும் மக்கள் கணிசமான அளவு சிங்களப் பிரதேசங்களில் குடியேறியிருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் அவ்வளவு பேரும் தனிப்பட்ட முறையில் அங்கு சென்று குடியேறியவர்கள். சொந்தப் பணத்தைச் செலவிட்டு காணிகள் வாங்கியவர்கள், கடை கண்ணிகள் வைத்தவர்கள். சொந்த முறையில் சொந்தப் பணத்தைச் செலவிட்டுக் குடியேறியவர்களாகையால் குடியேறிய பகுதிகளில் பொறுப்புணர்ச்சியோடு, கண்ணியமாக வாழ்ந்து வருபவர்கள்.

தமிழ் பேசும் மக்கள் சிங்களப் பகுதிகளில் குடியேறியதுபோல் தமிழ்ப் பகுதிகளில் சிங்கள மக்கள் தனிப்பட்ட முறையில் குடியேறுவதையும், வர்த்தகம் வியாபாரம் முதலிய தொழில்களில் ஈடுபடுவதையும் தமிழ் அரசுக் கட்சி எதிர்க்கவில்லை. அப்படியான குடியேற்றம் இரு சமூகங்களுக்கிடையேயும் சௌஜன்ய உறவை வளர்க்கப் பயன்படும் என்பதில் தமிழரசுக் கட்சிக்கு நம்பிக்கை இல்லாமலுமில்லை. இந்த அடிப்படையில் மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் எல்லாம் குறிப்பிட்ட அளவு சிங்கள மக்கள் குடியேறியிருக்கிறார்கள். அப்படிக் குடியேறியவர்கள் தமிழ் மக்களோடு நட்புறவு பூண்டு சுமுகமான முறையில் நடந்தும் வந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் வெளியேற்ற வேண்டும் என்று தமிழ் மக்களோ, தமிழரசுக் கட்சியோ அபிப்பிராயப்பட்டதில்லை.

தமிழரசுக் கட்சி மூர்த்தண்ணியமாக எதிர்ப்பதெல்லாம் காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயகா காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை அசுரவேகத்தில் நடைபெற்று வரும் அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தைத்தான். இந்தக் குடியேற்றம் அரசியல் காரணத்தை முன்னிட்டு நடைபெறுகிறது. இந்தக் குடியேற்றத்தினால் அல்லை, கந்தளாய், கல்லோயா, வவுனியா போன்ற தமிழ்ப் பிரதேசங்கள் சிங்கள மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற இப்படியான தமிழ்க் குடியேற்றங்கள் எதுவும் சிங்களப் பிரதேசங்களில் நடைபெறவில்லை. நடைபெறப்போவதுமில்லை. அப்படி நடைபெற்றால் அதைத் தடுத்து நிறுத்தும் உரிமை சிங்கள மக்களுக்கு உண்டு என்பதை தமிழரசுக் கட்சியோ, தமிழ் பேசும் மக்களோ மறுப்பதற்குமில்லை.

ஒரு இனமும் அதன் மொழி, கலை, கலாச்சாரங்களும் அழிந்தொழிந்து விடாதபடி பாதுகாக்கப்படுவதற்கு இரண்டு முக்கிய அம்சங்கள் அவசியம்.

ஒன்று: மக்கள். அதாவது குறிப்பிட்ட மொழியைப் பேசுபவர்களும், குறிப்பிட்ட கலை, கலாச்சாரங்களை அனுஷ்டிப்பவர்களுமான மக்கள் கூட்டம்.

இரண்டு: வாழ்விடம். அதாவது மேற்படி மக்கள் கூட்டம் ஒன்றாக வாழ்வதற்கு தொடர்புடைய நிலம்.

இந்த இரண்டில் எது பறிபோனாலும் சம்பந்தப்பட்ட இனம் அழிந்தொழிந்துவிடும்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பாலும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் மற்றும் சில பிரதேசங்களிலும் தொடர்பாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வரும் பிரதேசங்கள் அவர்களுடைய வாழ்விடமாக அமைந்திருக்கிறது.

# வயிற்றெரிச்சல் வளர்வதன் காரணம்

# தமிழரசுக் கட்சி மீது அரசியல் பொருமைதான்

இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்வரும் ஆகஸ்டில் போராட்டம் ஆரம்பிக்கப் போகிறது என்றும், அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் அதிர்ச்சியை விட, அதிகப்படியான வயிற்றெரிச்சல் வேறு சில அரசியல் கட்சிகளுக்கும், தனிப்பட்ட நபர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. இந்த வயிற்றெரிச்சல் காரணமாக, தேர்தல் காலத்தைப்போல, பல விதமான அவதூறுகளும், அபாண்டங்களும், கண்டனங்களும் தமிழரசுக் கட்சியின்மீது வாரியிறைக்கப்படுகின்றன.

### பொருமைக்குக் காரணம்

இவ்வளவு 'அர்ச்சனை'களுக்கும் அடிப்படை அந்தரங்கமென்ன வென்பதை ஆராய்ந்து பார்க்கும்போது ஒரு உண்மை புலனாகிறது. அந்த உண்மை என்ன வென்றால், ஆகஸ்ட் போராட்டத்தை நடத்துவதன் மூலம்—போராட்டத்தில் வெற்றி கண்டாலும், தோல்வி கண்டாலும்—தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்களிடையே மேலும் பலமான செல்வாக்கு அடைந்துவிடப் போகிறதே என்ற உள்ளாந்தரத்தைத் தமிழ் அரசுக்கட்சிக்கு விரோதமான இதர கட்சியினரும், தனி நபர்களும் உணர்ந்து கொண்டார்கள் என்பதுதான். இதன் காரணமாக இவர்களிடத்தில் அரசியல் பொருமையும், காப்புணர்ச்சியும் தலைதூக்கி நிற்கின்றன.

### செல்லாக்காசுப் பிரகிருதி

இந்த 'அர்ச்சனைக் கோஷ்டி'யில் சேர்ந்த தனி நபர்களுக்கு உதாரணமாக மாஜி பிரதிநிதி திரு. வி. குமாரசாமியைக் குறிப்பிடலாம். இலங்கையின் எந்தப் பாகத்திலும் ஒரு பொதுக் கூட்டம் கூட்டித் தமது கருத்துக்களை எடுத்துரைக்க துணிவும், திராணியும், பொதுமக்கள் ஆதரவும் இல்லாத இந்த செல்லாக்காசுப் பிரகிருதி தினப் பத்திரிகைகளில் ஆசிரியருக்குக் கடிதங்கள் எழுதுவதிலும், இல்லாத சங்கங்களின் நடக்காத கமிட்டிக் கூட்டங்களில் 'முழங்கி'யதாக வீட்டிற்குள்ளிருந்து செய்திகள் தயாரித்து அனுப்புவதிலும் ஈடுபட்டு, தமது வயிற்றெரிச்சலைப் போக்கிக் கொள்ளுகிறார்.

### காணுமல் போன கதை

அரசியல் கட்சிகளை உதாரணங் காட்ட வேண்டுமானால் தமிழ் பகுதியிலுள்ள கொம்யூனிஸ்டு கட்சியையும் சமசமாஜக் கட்சியையும் குறிப்பிடலாம். இந்த அரசியல் கட்சிகள் என்றோ ஒரு நாள் தமிழ் பேசும் மக்களிடையே செல்வாக்குப் பெறலாமென்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தவை. ஆனால் இந்த எண்ணத்தில் தமிழரசுக்கட்சி மண்ணை வாரிப் போட்டு விட்டது. சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிய வகுப்புவாத எம். ஈ. பி. அரசாங்கத்தை தாமும் ஆதரிப்பது என்று கொம்யூனிஸ்டு கட்சிபோட்ட குத்துக்கரணத்தோடு தமிழ் பேசும் மக்களிடையே அக்கட்சி கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி, அதுவும் தேய்ந்து காணுமற்போன கதையாகிவிட்டது.

### சமசமாஜிகளின் கனவு

சமசமாஜக் கட்சியின் நிலையும் அநேகமாக இதே நிலைதான். செயல் எதுவுமின்றி வெறும் வாய்ப் பேச்சினால் அவர்கள் தமிழ் பேசும் மக்களை மருட்டி விடலாம் என்று எண்ணினார்கள். வெறும் பேச்சோடு காலங் கழிக்காமல், சரியாகவோ பிழையாகவோ செயலில் இறங்குவதென்று தமிழ் அரசுக்கட்சி முடிவு செய்து "ஆகஸ்ட் 20" என்று நாள் குறித்ததும் அதன் மீது தமிழ் பேசும் மக்களுடைய நம்பிக்கை வளரத் தொடங்கி விட்டது. இன்று தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களிடையே அடைந்து வரும் அபரிமிதமான செல்வாக்கின் முன்னால் தாம் ஈடு கொடுக்கமுடியாதென்பதை உணர்ந்த தமிழ்ப் பகுதி சமசமாஜிஸ்டுகள் - செனட்டர் திரு. நாகலிங்கம் போன்றவர்கள்—குதர்க்கவாதம் புரிவதன் மூலமாவது தமிழரசுக் கட்சியின் புனிதமான கொள்கைகளுக்கும் இலட்சியங்களுக்கும் விகற்பமான விளக்கம் கொடுத்து தமிழ் பேசும் மக்களின் உறுதியைக் குலைத்து விடலாம் என்று கனவு காண்கிறார்கள்.

சிங்களம் மட்டும் சட்டத்தினால் தமிழ் மக்களுடைய மொழியுரிமை பறிக்கப்பட்டுவிட்டது. அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தினால் அவர்களுடைய வாழ்விடமும் அபகரிக்கப்பட்டுவிட்டால் பின்பு என்ன மிஞ்சியிருக்கப்போகிறது?

இங்குள்ள இடதுசாரிகள் தாங்கள் இனப்பற்றோ, மொழிப்பற்றோ அற்றவர்கள் என்று வாயளவில் சொல்லிக்கொள்ளுகிறார்கள், இந்த வாய்ப்பேச்சில் திரு நாகலிங்கம் போன்ற அப்பாவி இடதுசாரிகள் ஏமாந்துவிடுகிறார்கள். ஆனால் சிங்கள இடதுசாரிகள் முதலில் தாங்கள் சிங்களவர் என்பதை இலேசில் மறப்பதில்லை. அதன் பிறகுதான் அவர்களுடைய பரந்த சர்வதேசக் கண்ணோட்டம் இடம்பெறுகிறது. இந்த நிலையில் தமிழ் பேசும் மக்கள் இடதுசாரிகளை நம்புவதும் வியர்த்தமாகவே முடியும். முன்னர் அவர்கள் யு. என். பியையும், பின்னர் எம். ஈ. பியையும் நம்பி ஏமாந்ததுபோலவே ஒருநாள் இடதுசாரிகளாலும் ஏமாற்றப்படுவார்கள். கொம்யூனிஸ்டுகட்சி தமிழ் பேசும் மக்களை ஏமாற்றிவிட்டது. இந்த அடிச்சுவட்டைத்தான் சமசமாஜிஸ்டுகளும் என்றோ ஒருநாள் பின்பற்றுவார்கள் என்பது திண்ணம். அப்படி இல்லையென்றால் அவர்கள் ஒருபோதும் அதிகாரத்துக்கு வர முடியாது. அதிகாரத்தைக் கைப்பற்றும் கட்டம் வரும்போது அவர்கள் தமிழ் மொழியையும் தமிழ் இனத்தையும் பலியிட்டேனும் அதிகாரத்தைத்தான் கைப்பற்ற விழைவார்கள்.

எனவே தமிழ் பேசும் மக்கள் சமசமாஜிஸ்டுகளின் இனிப்பான பேச்சில் மெய்மறந்திருந்தால் அவர்கள் இனத்தையும், நிலத்தையும், மொழியையும் இழக்க வேண்டியவர்களாவார்கள். திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம் ஆடணியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்ற தமிழரசுக் கட்சியின் கொள்கைதான் தமிழ் பேசும் மக்களுக்கு பாதுகாப்பும் விமோசனமும் அளிக்கவல்லது என்பதைத் தமிழ் பேசும் மக்கள் உணர்ந்துவிட்டார்கள் என்றே நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பட்டதாரிகளுக்கு மணித்தியாலத்துக்கு 25 சதம் சகாயப்பணம்!

## மிலேச்ச நாகரிகத்திலுமில்லாத அநீதி!! மனித இனத்துக்கே இது அவமானம்!!!

## பா. ஆ. தி. பா. வி. சங்கத்தைச் சர்வகலாசாலை அந்தஸ்துக்கு உயர்த்த ஆவன செய்ய வேண்டும்

### பண்டிதர் வீரகத்தி வற்புறுத்தல்

"இன்னும் காலம் போய்விடவில்லை. அரசாங்கம் மாற்றுந்தாய் நோக்கை விட்டுக் கண்ணியத்துடன் தமிழுக்கும் சமஅந்தஸ்து விரைவில் அளித்தல் வேண்டும். இப்பிரச்னையில் காலதாமதம் செய்வது கழிபெருங் கழிவிரக்கத்துக்கு ஏதுவாகும்" என்று கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் பாரதி பாஷா மண்டபத்தில் நடந்த அகில இலங்கைப் பண்டித பட்டதாரிகள் சங்க ஆரம்பக் கூட்டத்தில் சங்கத்தின் நோக்கங்களையும் அமைப்பையும்பற்றி விரிவாகப் பேசிய பண்டிதர் க. வீரகத்தி குறிப்பிட்டார்.

மேற்படி சங்கம் பண்டிதர் திரு சி. சோமசுந்தர ஐயர் தலைமையின்கீழ் ஆரம்பிக்கப்பட்டது. முழு இலங்கையிலிருந்தும் நூற்றுக்கு மேற்பட்ட பண்டிதர்கள் வித்துவான்கள் சமுகமளித்தனர். பண்டிதர் வீரகத்தி தொடர்ந்து பேசியதாவது:

'அந்நியர் ஆட்சிக்காலத்தில், தமிழைத் துறை போகக் கற்ற தமிழ் பண்டிதர்கள் வித்துவான்கள் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டார்களோ அவ்வாறு மக்கள் ஆட்சிக் காலத்திலும் புறக்கணிக்கப்படுவது நகைப்புக்கிடமானது; துர்அதிர்ஷ்டமானது; ஆழ்ந்த வேதனைக்குரியது. பண்டிதர் ஒருவர் அல்லது வித்துவான் ஒருவர் வாரம் 10 மணித்தியாலங்கள் தமிழ் படிப்பித்தால்—அதுவும் ஆங்கிலப் பாடசாலைகளில் இல்லை—மணித்தியாலத்துக்கு இருபத்தைந்து சதம் சகாயப் பணமாக அளிக்கப்படுகிறது. இதை விட்ட அவமானம் மனித இனத்துக்கு வேறென்ன இருக்கிறது? மிலேச்ச நாகரிகத்தில்கூட இப்படியான சம்பவங்கள் நடந்திருக்க முடியாது.

**ஒற்றுமை வேண்டும்**

"றிக்சோக்காரன் கூட மணித்தியாலத்திற்கு 2 அல்லது 3 ரூபா உழைத்துவிடுவான். எனவே உயர்ந்த வேதனம் அளிக்கப்படும் வரை இப்பத்து ரூபாய் புண்ணியச் சல்லியாக அளிக்கப்படுவதை திருத்தும்படி நாம் அரசாங்கத்தைக் கேட்போம். இதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஒரு கொடியின்கீழ் செயலாற்ற வேண்டும். முன்பு தோன்றிய கீழைத்தேய பட்டதாரிகள் சங்கம் பழங்கதையாய் கனவாய்ப் பொய்யாய்விட்டது. ஆகவே எங்கள் ஒற்றுமையின் அவசியம் நன்கு புலப்படுகிறது. கனம் கல்வி மந்திரி "பிரிவெனுக்களை"ச் சர்வகலாசாலை அந்தஸ்துக்கு உயர்த்துவதற்காக மிகுந்த முயற்சி எடுத்து வருகின்றார். அவர் முயற்சியை ஆக்கப்படுத்துவதன்மூலம் நமக்கு ஆக்கத்தையும் தேடிக் கொள்ளலாம். நாமும் பா. ஆ. தி. பா. வி. சங்கத்தை சர்வகலாசாலை அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கு அயராது உழைத்தல் வேண்டும். அதன்மூலம் நமது குறைகள் குறைக்கப்படும்போது நல்லதொரு தமிழ்ச் சமுதாயத்தையும் சிருட்டிக்க முடியும்.

"அடுத்ததாக, பண்டித பாடத் திட்டங்களும் காலமாற்றத்தையும் தேவையையும் அநுசரித்ததாக அமைக்கப்படுதல் வேண்டும். வளர்ந்து வரும் மனித தேவைகள் பிரச்னைகள் பாடப் புத்தகங்களில் பிரதிபலித்தல் வேண்டும். மொத்தத்தில் சங்கம் மறுமலர்ச்சி பெற நம்மால் ஆவன எல்லாஞ் செய்வோம். நமது முயற்சிகளால் தமிழ் வளரட்டும்; தமிழினம் வளரட்டும்; நாமும் வளருவோம்.

பண்டிதர் திரு ஆசிநாதன் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர்கள் துரைசிங்கம், இராசையா, சின்னையா, முருகேசு ஆகியோர் கூட்டத்தில் பேசினார்கள்.

கீழ்க்கண்டவர்கள் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரியப்பட்டனர்.

போஷகர்கள்: பண்டிதமணி திரு சி. கணபதிப்பிள்ளை, பண்டிதர் திரு சோ. இளமுருகனார்; தலைவர்: பண்டிதர் திரு துரைசிங்கம்; உபதலைவர்: பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி; இணைச் செயலாளர்கள்: பண்டிதர் திரு க. வீரகத்தி, பண்டிதர் திரு த. கிருஷ்ணபிள்ளை; தனாதிகாரி: பண்டிதர் சிவகுரு.

மேற்படி கூட்டத்தில் 8 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## தமிழ்க் கிராமங்.....!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

...ளுக்கு தமிழில் தந்தியனுப்ப முடியாதிருக்கிறது.

வடமேல் மாகாணக் கரையோரங்களில் வசிப்பவர்கள் பெரும்பாலும் தமிழ் பேசுபவர்களாயிருந்தும் உடப்பு, முந்தல்போன்ற கிராமங்களுக்கு தமிழ்த் தந்தி வசதி இல்லை. இந்த இரண்டு கிராமங்களிலும் தமிழ் பேசும் மக்களே 98 விதம் வாழ்கின்றனர். ஆனால் இந்த இரண்டு கிராமங்களுக்கும் சிங்களத் தந்தி வசதியுண்டு.

கிழக்கு மாகாணத்தில் ஓட்டமாவடி என்னும் கிராமம் முழுக்க முழுக்க தமிழ் பேசும் முஸ்லிம்களைக் கொண்டது. இக்கிராமத்திற்கு சிங்களத் தந்தி வசதியுண்டு. ஆனால் தமிழ் தந்தி வசதி கிடையாது.

மத்திய மாகாணத்தில் அக்குறணை என்ற இடத்தில் 93 வீதமானோர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்கள். இந்த இடத்திற்கும் சிங்களத் தந்திவசதியுண்டு தமிழ்த் தந்தி வசதி கிடையாது. வட[...] தில் மடு ரோட் என்[...] நிலையத்தின் நிலை[...] வாறுனதே.

## 'தேவன்' மறைந்தார்

### அடுத்த வாரம் விசேஷ கட்டுரை

சென்னையிலிருந்து வெளி வரும் பிரபல ஹாஸ்ய வாரப் பத்திரிகையான "ஆனந்த விகடன்" ஆசிரியரும் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவருமான 'தேவன்' (திரு. ஆர். மகாதேவன்) கடந்த ஞாயிற்றுக் கிழமை சென்னையில் காலமானார். அவருக்கு வயது 44.

கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆனந்த விகடனுக்கு ஆசிரியராயிருந்த காலத்தில் திரு. தேவன் உதவி ஆசிரியராயிருந்தார். கல்கி அவர்கள் ஆனந்த விகடனை விட்டு விலகிய பின் திரு. தேவன் ஆனந்த விகடன் ஆசிரியரானார்.

"தேவனை"ப் பற்றி திரு. எஸ். டி. சிவநாயகம் எழுதும் ஒரு விசேஷ கட்டுரை அடுத்த வார சுதந்திரனில் இடம் பெறும்.

## மன்னார்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுள்ளேன்; உங்கள் பாராளுமன்ற அங்கத்தவரும் கேட்பார்.

நானும் (இன்ஸ்பெக்டரும்) அவரும் சிங்களசாதியினராயிருந்ததால் நிலைமை ஓரளவு அடங்கி விட்டது. இல்லையேல் எவ்வளவோ நெருக்கடியை உண்டாக்கியிருக்கும் என்று கூறினர்.

காலஞ்சென்ற திரு தனுஷ்கோடி 22 வயது வாலிபர். எருக்கலம் பிட்டியில் தனது பெற்றோருடன் வசித்து வந்தார்.


## தமிழ்
### சிரேஷ்ட பரீட்சை

கடந்த பரீட்சையின் வினு விடைகள்:

| | |
|---|---|
| தமிழ் மொழி | ரூ. 3-00 |
| சைவ சமயம் | ரூ. 3-00 |
| ஆங்கிலம் | ரூ. 3-00 |
| எண் கணிதம் | ரூ. 3-00 |
| ஆங்கிலக் கட்டுரைகள் | ரூ. 3-00 |
| தமிழ்க் கட்டுரைகள் | ரூ. 3-00 |

ஆங்கிலப் பரீட்சைக்கு வினு-விடைகள், குறிப்புகள் எல்லாப் பாடங்களிலும் கிடைக்கும்.

★ ஆங்கிலம்
★ ஹிந்தி

பேச, வாசிக்க, எழுத தபாலில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

[...] கல்லூரி, [...] கொழும்பு.


## சுத்தானந்த வாழ்த்து

தெய்வத் தமிழ் போல், திருவள் ளுவர் குறள்போல்
வையத்தை உய்விக்க வந்தமகான்—தூய்ய
கலையோகி, ஞானக் கவி யோகி வாழ்க,
நிலையாய் எம் நெஞ்சத்துள் நின்று!

ஃ

வற்றுப்பே ரூற்று, வளமார், கலைச்சுரங்கம்,
முற்றறிவு பெற்ற முழுத்துறவி;—நற்றமிழ்த்தாய்
ஈன்றகவி யோகி இனிய சுத்தா[...]ந்தன்
ஆன்ற புகழ் பேசல் அரண்!

ஃ

தவயோக சித்தியிலே தாம் கண்ட முற்றும்
அவனிக் குவந்தளித்த அண்ணல்—பவமாக
நீக்கிய சுத்தானந்த நின்மலனை என்றென்றும்
வாக்கே, நீ போற்றி வழுத்து!

ஃ

மன்புவி காணுத மாதவப்பே ராற்றலினுல்
அன்பு நூல் ஆயிரத்தை ஆக்கிவைத்தான்,—இன்ப
விருந்தாய்ப் பசியுடையோர் வேண்டுமட்டும் உண்டு,
நறுந்தமிழைப் போற்ற, நயந்து!

ஃ

சிந்தைத் தமிழை, இந்நாள் மூதறிஞர் போற்று முன்னே
நந்தாப் பெருவிளக்கம் நல்கியவன்,—எந்தை சுத்
தானந்த வள்ளல், அருட்புகழைப் போற்றிடு நாள்
ஞானந் தலையெடுக்கும் நாள்!

ஃ

பாரெல்லாம் போற்றவரும் 'பாரத சக்தி'தனை
ஆரமு தத்தமிழில் ஆக்கிவைத்தான்,—பூரண
ஞானி. அருட் கவிஞன், நாதப் புலவப் பிரான்,
வானின் கதிர்த்திரள்போல் வாழ்க!

ஃ

நாட்டரசர் போற்றும் நலமிக்கோன்; நல்லமுதப்
பாட்டரசர் வாழ்த்தும் பரிசுத்தன்;—வாட்டமிலா
நல்லறுப தாண்டினைஞன், ஞான சுத்தானந்தன்
பல்லூழி வாழ்க படர்ந்து!

"பரமஹம்ஸதாசன்"

(11-5-57-ல் வரும் கவியோகி சுத்தானந்த பாரதியின் அறுபதாண்டு நிறைவு நாளையொட்டி இக் கவிதை இங்கு வெளியிடப் படுகிறது. சென்னையில் இவரது மணிவிழா பேரறிஞர்களால் விரிவாகக் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.)

## ஆவணி அழைக்கிறது....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

...சுக் கட்சியிடம் தமிழினத்தின் விடுதலைப்போரை ஒப்புவித்தார்கள். இது சென்ற பொதுத் தேர்தல் தந்த தீர்ப்பு.

**தவணை கொடுத்தோம்**

"தமிழரசுக் கட்சியின் தலைமேல் சுமத்தப்பட்டிருக்கும் கடமையை உணர்ந்த நாம் தமிழினத்தின் கண்ணியத்திற்கு களங்கம் ஏற்படாத வகையில் சென்ற ஆவணியில் திருகோணமலையில் கூடி அரசாங்கத்திற்கு ஓராண்டுத் தவணை கொடுத்தோம்; தங்கள் தவறான போக்கைத் திருத்திக்கொள்ளட்டும் என்று!

"அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்பதை விடுத்து 'வாய்ப் பந்த'லினுல் எம்மை ஏமாற்றலாம் என நினைக்கிறது. திருமலைத் தீர்மானத்தில் குறிப்பிட்ட அத்தனை உரிமைகளையும் பெறும்வரை தொடர்ந்து போராடுவதெனத் தமிழரசுக் கட்சி தீர்மானித்திருக்கிறது. போர் முரசு ஆவணியில் அதிரப் போகிறது. குறைந்த பட்சம் வீட்டுக்கொரு வீரனை வேண்டி நிற்கிறுன் தமிழன்னை. தருவது தமிழ் பேசும் மக்கள் கடமை.

"விடுதலைப் போரிலே பல ஆயிரம் பேர் நேரடியாகப் பங்கு பற்றும் வேளையிலே தமிழ் பெருங்குடிப் பிறந்தோரே உங்கள் பங்கு என்ன? தமிழ் பேசும் இனத்திலே நிலையான மாதாந்த வருமானம் உடையோர் பலர் உங்களிடையே இருக்கிறார்கள். விடுதலைப் போருக்கு நிலையான பொருளுதவி செய்யக் கூடியவர்கள் நீங்களே. உயிரும் உடலுங் கொடுத்து தாயின் விலங்கொடிக்கத் தன் மானத் தமிழ் பேசும் வீரர் புறப்படும் வேளையிலே அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்துதவக் கூடியவர்கள் நீங்கள் அல்லாது வேறு யார்?

**பங்கைச் செலுத்துங்கள்**

"பணப்பலமும் அதிகாரப் பலமுங் கொண்ட அரசை எதிர்த்து தமிழ் மக்களின் விடுதலை வேட்கையென்ற வேலேந்தி நிற்கிறோம். விடுதலைப் படைக்கு வேகமளிப்பது உங்கள் உதவிதான். எனவே இந்த வேண்டு கோளை விடுக்கின்றோம். ஆவணி அழைக்கிறது. அதற்கு உங்கள் பங்கைச் செலுத்தி விடுங்கள்."


விற்பனைக்கு

## ஏஜெண்டுகள் தேவை

குறிப்பாக யாழ்ப்பாணத்திலும், கண்டியிலும், பதுளையிலும்

ருசியாலும் குணத்தாலும் பிரசித்தம் பெற்ற

## மணீஸ் காப்பியை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:-

MANI MUSICAL STORES,
145, Sea Street, COLOMBO.
Phone: 7094.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அறிவியல்:

# இயந்திரத் துப்பாக்கியின் பிரயோகம்

## பீரங்கியை இயக்குபவர்கள்

### அறியவேண்டிய முக்கிய விஷயங்கள் மூன்று

## சுயமாய் இயங்கி நாழிக்கு

### 25 குண்டுகள் வரை பொழியும் துப்பாக்கிகள்

போர்க்கருவிகளுள் பொறியியல் பீரங்கியும் (Machine gun) ஒன்று. இது, போர்க்காலங்களில் எளியமுறைக்கேற்ப இயங்கிக், குண்டுகளைப் பொழியும். இதனை அறிவியலார் பொறியியல்பீரங்கி Machine guw) என்பர். இராணுவத் தலைவரும், படைவீரர்களும் எல். எம். ஜி. (L. M. G. என்று சுருக்கமாக அழைப்பார்.

பொறியியல் பீரங்கி, இயங்குவதில் இருவகை ஆற்றல் பொருந்தியது. ஒன்று இயங்கிப் பொழியும் Automatic-இயங்குதினைப் பொழிவு) ஆற்றலாம். மற்றொன்று நின்று பொழியும் ஆற்றலாம். இவ்விருவகை ஆற்றலும் காலம், நிலை ஆகியவற்றிக்கேற்பப் பயன்படுத்த உதவும் நிலையின என்பர்.

### பயன்படுத்தும்காலம்

இயங்குதினைப் பொழிவு என்பது குண்டுகளைப் பொழிந்துகொண்டே இருக்கும் தன்மை வாய்ந்ததாகும். ஒரு நாழிகைக்குள் 25குண்டுகள்வரை பொழியும் தன்மையும், விரைவும் உடையது. எனவே, இயங்குதினைப் பொழிவு நிலையில் பொறியியல் பீரங்கியை இயக்க வேண்டுமாயின், காலம் நிலைக்கேற்பஇணைந்து அமைய வேண்டும். குறிப்பாக வீரன் ஒருவன் பொறியியல் பீரங்கியுடன் மடுவில் மறைந்து இருக்கிறான். அவன் பகைவர் செல்லும் வழி நோக்கியே பொறியியல் பீரங்கியையும் வைத்து, கவனத்துடன் படுத்துஇருக்கிறான். அந் நிலையில் அவன் தனியாகவே இருப்பதால் பகைவர் வரும் காலத்தை நோக்குகிறான். அவன் கருதியபடி பகைவர் குறைவாக வராமல். ஐம்பதுக்கு மேற்பட்டவரே வருகின்றனர். பகைவரின் திரட்சியைக் கண்ட உடனே, அவ்வீரன் பொறியியல் பீரங்கியைப் பயன்படுத்துகிறான். இயங்குதினைப் பொழிவு நிலையில் பீரங்கி இயங்கப்படுகின்றது. குண்டுகள் விரைந்து பொழிகின்றன. பகைவர் நிலைகுலைகின்றனர். பொழியும்குண்டுகளை விலக்க இயலாமல்பகைவர் வீழ்ந்து மடிகின்றனர். காலம் அறியாது புகுந்த பகைவரை, நிலை உணர்ந்து காத்திருந்தவீரன் எளிமையில் அழித்து வெற்றி காணுவான். இயங்குதினைப் பொழிவு நிலையில் பொறியியல் பீரங்கியைப் பயன்படுத்தும் காலம் இதுவே.

### ஒரு வரையறை

நின்று இயங்கும் பொழிவு என்பது ஒவ்வொரு குண்டாகப் பொழியும் தன்மை வாய்ந்தது. விரைவு குறைந்தது. இயங்குதினைப்பொழிவு நிலையில் வெடிக்கும் மூன்று குண்டுகளின் காலமே, நின்று இயங்கும் பொழிவு நிலையில் வெடிக்கும் குண்டு ஒன்றின் நாழிகை. நின்று இயங்கும் பொழிவு நிலையில் பொறியியல் பீரங்கியை இயக்க வேண்டுமாயின், காலமும், நிலையும் எவ்வாறாயினும் கவலை கொள்ளவேண்டிய வரையறை எதுவுமில்லை. ஆயினும் நின்று இயங்கும் பொழிவு நிலைக்கு ஒரு வரையறை உண்டு. குறிப்பாக, வீரன் ஒருவன் பொறியியல் பீரங்கியுடன் மறைவான இடத்தில் பதுங்கியிருக்கிறான். அவன் மனம் பகைவர் திரட்சியாக வருவாரோ? என்று ஐயுற்றுக்கொண்டே இருக்கிறது. அவன் எண்ணியபடி பகைவர் திரண்டுவராமல், ஒன்பதின்மரே வருகின்றனர். உடனே அவன் இயங்குதினைப் பொழிவு நிலையில் பீரங்கியைப் பயன் படுத்த விரும்பான். இராணுவச் சட்டமும் இதையே வலியுறுத்துவதால் அவன் ஒன்பதின்மரை அழிக்க, நின்று இயங்கும் பொழிவு நிலையிலேயே பீரங்கியை இயக்குகிறான். போர்க்களம் புகுந்த அவன் உறுப்பும் உள்ளமும் இந்நிலையையே விரும்புகின்றன. வீர உணர்வுகூட ஒன்பதின்மரை அழிக்க, நின்று இயங்கும் பொழிவு நிலையிலேயே பீரங்கியை இயங்க விழைகின்றது. இவ்வாறு பொழியும் குண்டுகள் ஒன்பது உறுப்புகளை அழிக்க ஒன்பது குண்டுகளேயாகும். நின்று இயங்கும் பொழிவு நிலையில் பீரங்கியை இயக்க இதுவே ஒரு வரையறையாம்.

### குண்டு பொழிவு

இயக்குதினைப் பொழிவின் விரைவும், நின்று இய்யகும் பொழிவின் மென்மையும் ஆற்றலைப் பொறுத்து விளங்குவது போன்று, பொழிவின் நிலைகளை அந்தந்த ஆற்றலுக்கு உட்படுத்தி இயக்குவது தாழ் என்ற கருவியைப் பொறுத்தே இருக்கின்றது. இது வலப்புறத்தில் பொருத்தப்பட்டிருக்கும். இயக்குதினைப் பொழிவை A என்ற எழுத்தும், நின்று இயங்கும் பொழிவை S என்ற எழுத்தும் குறிக்கும். இவைகளில் எது பயன்பட வேண்டுமோ அதற்கு நேராகத்தாழ் கருவியைத் தள்ளிவைக்கவேண்டும். தாழ் எவ் வெழுத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்றதோ, அவ்வெழுத்து ஆற்றலுக்கேற்ப குண்டுகளைப் பொழியும். இயங்குதினைப் பொழிவு நிலையையும், நின்று இயங்கும் பொழிவின் நிலையையும் விடுத்து வெறுங் கோட்டில் தாழை தள்ளி நிறுத்துவோமாயின், பொறியியல் பீரங்கிக்கு இத் தாழ் என்ற கருவியே இயக்கவும், நிறுத்தவும் பயன்படும் சிறந்த கருவியாம்.

### தற்காப்பு முறை

பொறியியல் பீரங்கியின் இருவகை ஆற்றல் பொருந்திய பொழிவின் நிலைகளையும், அவைகளை இயங்கி நிறுத்தும் திறன் வாய்ந்த தாழ் கருவியையும் முன்பு கண்டோம். பொறியியல் பீரங்கியை இயக்கத் துணியும் ஒருவர் முற்கூறிய மூன்று நுட்பவேலைகளை அறிவது முக்கியமாகையால், அவைகளின் ஆற்றல், தன்மை, விரைவு, மென்மை முதலானவற்றின் நிலைகளை ஆய்ந்து, ஆய்ந்து அறிய வேண்டும். இவ்வாறு அறிந்து கொள்வது, பகைவரிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ளக் கற்றுக்கொள்வதாகும்.

### மருந்துக்கிடங்கு

குண்டுகளைச் செலுத்துவதற்கு ஓர் இடம் உண்டு. இதனை மருந்துக் கிடங்கு என்பர். இது, பொறியியல் பீரங்கியில் பொருத்தப்பட்ட உறுப்பன்று. மருந்துக் கிடங்குக்கும், பொறியியல் பீரங்கிக்கும் எப்பொழுதும் ஒட்டும் நிலை ஏற்படாது. பீரங்கியை இயக்கவிழையும் போதுதான் மருந்துக் கிடங்கைப் பொருத்த வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, மருந்துக் கிடங்கைத் தனிக் கருவி என்றே கொள்ள வேண்டும்.

மருந்துக் கிடங்கினுள் எஃகு விசை அமைந்திருக்கின்றது. இதனைக் கிடங்கின் எஃகு விசை என்றழைப்பர். குண்டுகளை உள்ளே ஒவ்வொன்றாகச் செலுத்துவோமாயின், எஃகு விசை இளகித் தரும் 30 குண்டுகள் வரை அதற்குள் செலுத்தலாம். அவ்வாறு நிறையச் செலுத்துவது. சில வேளைகளில் துன்பத்தைத் தருமாகையால், இரண்டு குண்டுகளைக் குறைத்து 28 குண்டுகளையே மருந்துக் கிடங்கிற்குள் செலுத்த வேண்டும். 30 குண்டுகள் செலுத்தப்பட்டதும், உள்ளேஇருக்கும் எஃகு விசை முறிந்தாலும் முறியக்கூடும். இவ்வாறு விசை முறிந்துவிடுமாயின் குண்டுகள் வெளிவரா. பீரங்கியில் பொருத்தி இயக்கினாலும் குண்டுகள் வெளிப்படா. பகைவர் நம்மை எளிமையில் அழித்துவிடுவர். எனவே, 28குண்டுகள் கிடங்கிற்குள் இருக்குமாயின், அவைகளை ஒவ்வொன்றாகத் தள்ளி வெளிப்படுத்தும் விசையைப் பற்றி கவலை இல்லாமல் பகைவரை எதிர்க்கலாம்.

### மூன்று குற்றங்கள்

ஒருவர் பொறியியல் பீரங்கியை இயக்க வேண்டுமாயின், அவர் முக்கியமாக உணர வேண்டியவை மூன்று குற்றங்களாகும். இம்மூன்று குற்றங்கள் நிகழாதிருக்க அறிந்த பின்னரே ஒருவர் பொறியியல் பீரங்கியைப் பயன்படுத்தத் துணிய வேண்டும். 1. குண்டு மருந்துகள் அழுக்கின்றி இருக்க வேண்டும். 2. குண்டு மருந்துகளை, மருந்துக்கிடங்கிற்குள் செலுத்தும்பொழுது. ஒன்றன் பின் ஒன்றாகச் செலுத்த வேண்டும். 3. வாயு நிலை நின்று விடுமாயின், அதனை ஒருபடி உயர்த்தி வைக்கவேண்டும். இம் மூன்று குற்றங்கள் நிகழாதிருக்கப் பாதுகாத்துக் கொண்டால் தன்னை காத்துக்கொள்ள , முயன்றது போலாகும்.

### வாயு நிலை

வாயு நிலை என்பது குழாயின் முகப்புக் கருகில், பொறியியல் பீரங்கியின் முற்காலி ஒன்றில் பொருத்தப்பட்டு விளங்கும் ஒரு சிறு வட்டமாம். இவ் வட்டம் வாயு புகைக்கு நிலையிடம். குழாயின்கீழ் சாலைப் போல் அமைந்துள்ள குழாய்ப் பொருளில் வாயுப்புகை உலவிக்கொண்டிருக்கும்sபீரங்கி இயக்கப்படுமாயின், அப்பொழுதுதான் வாயுப்புகை குழாய்ப்பொருளில் அலைந்து கொண்டிருக்கும். இதன் அளவுக்கு ஓர் அளவு உண்டு வாயு நிலையான வட்டத்தில் நான்கு படிகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் சிறிது சிறிது உயர்ந்து பெரிதாக இருப்பதால், முதலாய, படியில் இயங்கும் பொறியியல் பீரங்கி 32 குண்டுகளுக்குப் பின் நின்றுவிடுமாயின், உடனே வாயு நிலை வட்டத்தின் இரண்டாவது படியில் முதல் படியின் இடத்திற்குத் திருப்பிவைக்கவேண்டும். இவ்வாறு திருப்பிவைத்து விட்டால் வாயுப்புகையின் வேகம் ஒரு படி உயர்ந்து விடும். பிறகு பீரங்கி இயங்கும். இவ்வாறு நான்கு படிகளுக்கும் ஒரளவு உயர்ந்து இருக்கும்வேகத்தை அறிந்த ஒருவர், போர்க்கலங்களில் வாயு நிலையின் வட்டத்தைத் திருப்பி வைக்க முயலும் போது, உடலை மேலெடுக்காமல் படுத்து நகர்ந்தவாறே இவ்வேலையைச் செய்ய வேண்டும். உடல் மேலெழுந்தால்பகைவர்தாக்குவர் என்பதால், இராணுவ முறையில் இதனைப் போர் வீரர்கள் செய்தேஆகவேண்டும்.

—புகழேந்திக் கரிகாலன்

# அணுசக்தி வைத்தியத்தின் புரட்சிகரமான சாதனைகள்!

## புற்று நோய் முதல் சகல விதமான தொற்று நோய்களையும் குணமாக்கலாம்

—:0:—

## அமெரிக்கா தந்த அற்புத ‘ஐஸடோப்புகள்’

கடந்த பத்தாண்டுகளில், அணுக்கதிரியக்கமுள்ள பொருள்களை நோயறிவதற்கும் நோய் தீர்ப்பதற்கும் பயன் படுத்தி, நல்ல பயன் கண்டிருக்கிறார்கள், இதனால் ஒரு புதிய வைத்தியமே தோன்றியுள்ளது. ஆயிரக் கணக்கான விஞ்ஞானிகள் அயராது வருந்தி உழைத்ததனால்தான் இந்த அறிய காரியங்கள் நடந்துள்ளன; வருங்காலத்தில் அணுசக்தி மக்கள் உடல் நலத்துக்கு மாபெரும் துணையாய் விளங்கும். என்னும் நம்பிக்கை அவர்களுடைய அயராத உழைப்பினால் ஏற்பட்டுள்ளது.

### ஐஸடோப்புகளின் உதவி

அணுசக்திவைத்திய துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமெல்லாம் கிட்டத்தட்ட 1947-க்குப் பிறகு ஏற்பட்டதேயாகும். அந்த வருஷந்தான் அமெரிக்கா அணுக்கதிரியக்கமுள்ள ஐஸடோப்புகளைப் பெருவாரியாகச் செய்து உலகமெல்லாம் விநியோகிக்கத் தொடங்கியது. அப்பொழுதுதான் விஞ்ஞானிகளுக்கு அந்த அரும்பொருள் முதன் முதவாகப் போதிய அளவில் கிடைத்தது. அவர்களும் உடற்கூற்றின் இயல்களை மிகமிக நுணுக்கமாக ஆராயவும் பிணிகளைத் தீர்க்கவோ தணிக்கவோ புதுப் புது வழிகளைக் காணவும் முடிந்தது

### [illegible]

அணுசக்தியை அடக்கியாண்டு மனிதனுடைய நன்மையை எவ்வாறு பெருக்கலாம் என்று அறிவதற்குக் கடந்த எட்டு ஆண்டுகளாகப் புதிய வழி துறைகளும் நுண்ணிய கருவிகளும் கண்டு பிடித்திருக்கிறார்கள். அணுக்கதிரியக்கமுள்ள ஐஸடோப் எதனையும் மருந்தாகக் கொள்ளுமுன், அதன் அணுக்கதிர் எவ்வளவுக்கு மேற்போகாமலிருந்தால் உடம்புக்குக் கேடு விளையாது என்றும்; அணு உடம்பின் உறுப்புகளும் என்னவாகின்றன என்றும், அவை கடைசியில் அணுக்கதிரியக்கத்தை எப்படிக் கழித்து விடுகின்றன என்றும் மிக நுணுக்கமாக ஆராய்ந்து தெரிந்தாக வேண்டும்.

### தீராத நோய்கள் தீர்க்கப்படுகின்றன

அணுசக்தி வைத்தியம் இன்று ஆரம்ப திசையில் தான் இருக்கிறது, என்றாலும் இன்று கைவரப்பெற்றது சில ஆண்டுகளுக்கு முன் கூடக்கனவாகவே இருந்தது. ஏற்கனவே நனவாயிருக்கும் அருஞ் செயல்களால் இப்புதிய விஞ்ஞானம் உலகுக்கெல்லாம் மிகவும் முக்கியமான ஒன்றாக விளங்குகிறது.

இன்ன கோளாறு தான் என்று கண்டு பிடிக்க முடியாதபடி இருந்த பல நோய்களின் தன்மையை இன்று அணுக் கதிரியக்கமுள்ள ஐஸடோப்புகளை உடம்பினுள் செலுத்தி அவற்றின் போக்கை கருவிகளால் காண்பதால் உடனே அறிகிறார்கள். பின்னர் அதே ஐஸடோப்புகளை மேலும் ஊட்டினால் அந்நோய்கள் தீர்ந்து விடுகின்றன. தீராத நோய்கள் என்று நினைத்தவை பல இப்புதிய முறைகளால் ஒன்று தீர்க்கப்படுகின்றன அல்லது தணிக்கப்படுகின்றன.

### புரட்சிகரமான சாதனைகள்

அமெரிக்கா அணுசக்திக் கமிஷனின் உயிர் நூலும் வைத்தியமும் ஆகிய பகுதிக்குத் தலைவராக இருக்கும் விஞ்ஞானி டாக்டர் ஜான் பியூகெர் வைத்தியத்துறையில் அணு சக்தியால் ஏற்பட்டிருக்கும் சாதனைகள் புரட்சிகரமானவை என்றார். இன்னும் தொடர்ந்து நடக்கும் ஆராய்ச்சியில் நமது வாழ்நாளிலேயே அணுசக்தி வைத்தியம் உலகிலிருந்து பல நோய்களை ஒட்டிவிடும் என்கிறார் அவர். தொற்று நோய் உடல் நலத்துக்கு ஒரு பெருங் கேடாக இராது; புற்றுநோய் தீர்ந்து போகும் அல்லது திருப்தியாய்த் தணியும்; வெப்ப நாட்டு நோய்களை விளைவிக்கும் ஒட்டுண்ணிகள் ஒழியும் என்று அவர் சொல்லுகிறார். உலகமெங்கும் எல்லா இடங்களிலும் கோடிக்கணக்கான மக்களுக்குக் கனவிலுங்கருதாத சுகாதார நன்மைகள் வருங்காலத்தில் பூட்டி வைத்திருக்கின்றன என்றும் அவற்றைத் திறந்து தருவது இன்றைய அணுசக்தி ஆராய்ச்சி என்றும் அவர் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை:

# தோழரின் மனமாற்றம்

—வ. அ. இராசரத்தினம்

விடிந்ததும் விடியாததுமாகத் தோழர் சச்சிதானந்தம் அவர்கள் குழம்பிக்கொண்டே இருந்தார். பாவம்! சிந்தனைக் குழப்பத்தில் முன்னிரவு முழுவதும் அவருக்குத் தூக்கமில்லை. சிந்தித்து ஏற்பட்ட சோர்வில் தன்னையறியாமலே பின்னிரவிற் தூங்கினார். ஆனால் எழுந்தபோது மறுபடியும் குழப்பம்...யோசனை...

தோழர் சச்சிதானந்தத்திற்கு—ஏன் உலகம் அடங்கிலுமுள்ள அவர் தோழர்கட்குக் கூடச் சிந்தனை செய்வது ஒரு கலைதான் ஆனால் இன்றைக்கு அவருக்கு ஏற்பட்ட சிந்தனையின் அடிப்படையே வேறு. திரும்பத் திரும்ப அவர் மூளையில் அந்தக் கேள்விதான்—அந்த ஒரே கேள்விதான் பூதாகர உருவிற் குத்திட்டு நின்றது.

தமிழினம் இந்நாட்டில் இருக்க வேண்டாம். எந்தெந்த நாட்டிலிருந்தோ இறக்குமதி செய்யப்பட்ட தத்துவங்களை மனனம் பண்ணி அந்த அடிப்படையிலே சிந்தித்துப் பழகியிருப்பினும், அந்த இறக்குமதித் தத்துவங்கள் கோட்பாடுகள் எல்லாமே திருவள்ளுவர் தொடக்கம் நேற்றுப் பிறந்த பாரதிவரை தமிழ்நாடுகண்டதுதானே என்று எண்ணுகையில் தான் தமிழனாகப் பிறந்ததின் பெருமையைத் தோழர் என்றைக்குமே மறந்ததில்லை. மறுத்ததும் இடையாது.

இந்த இருபதாம் நூற்றாண்டிலே இயந்திர யுகத்திலே சர்வதேசியம் என்ற உலக சகோதரத்துவத்தைப் பற்றிப் பேச வேண்டிய இந்த நேரத்திலே தமிழன் தமிழினம் என்று குறுகிய கண்ணோட்டத்தோடு எந்தப் பிரச்னையும் அணுகித் தெரிந்திராத தோழருக்கு இன்றைக்கு இப்படிப்பட்ட சிந்தனைகள் ஓடியபோது அவர் மனம் அவரையே கேட்டது 'சகோதரன் இன்றிச் சகோதரத்துவம்இருக்க முடியுமா?'

ஆம் ஆம். சகோதரதத்துவம், சமத்துவம், சுதந்திரம் என்றெல்லாம் முற்போக்கு அரசியல் வாதிகள் என்று தங்களைத் தாங்களே சொல்லிக்கொள்பவர்கள் கதறுகிறார்களே. அந்தத் தோழர் கூட்டத்தாரிடமே கேட்க வேண்டும்போலத் தோன்றியது சச்சிதானந்தத்திற்கு.

சகோதரன்இன்றிச் சகோதரத்துவம் இருக்கமுடியுமா? நெருப்பின்றிப் புகை இருக்க முடியுமா?

பக்கத்திலுள்ள தன் சகோதரர்கள் மிருகங்களாக மாறி மத்திய கால ஆட்சியொன்றை நடாத்திக் கொண்டு மற்றவர்களைக் கேவலம் அடிமைகளாகவும் நாடற்றவர்களாகவும் மதிக்கையில் உலக சகோதரத்துவமாவது மண்ணாங்கட்டியாவது?

வெறுப்பு மேலிட்ட சச்சிதானந்தம் கட்டிலை விட்டெழுந்து அந்த அதிகாலையிலே பைத்தியக்காரனைப் போல அறைக்குள் அங்குமிங்கும் உலாவத் தொடங்கினார். ஆனால் அவர் தூக்கி வைக்கும் ஒவ்வொரு அடியும் அவர் சித்தத்தை மேலும் மேலும் குழப்பியதேஅன்றித்தெளியவைக்கவில்லை.

'வண்மை இல்லை ஓர் வறுமை இல்லையால்' என்று கம்பன் கனவு கண்ட இராம ராஜ்யத்தை அதாவது தோழரின் பாஷையில்சோஷலிச அமைப்பைக் கடந்த இருபது ஆண்டுகளாகக் கனவு கண்டவர் தோழர் சச்சிதானந்தம். அந்த அமைப்பை ஏற்படுத்துவதற்காக இரத்தங்கூட ஒரோர் வேளை சிந்தியுந்தான் இருக்கிறார். ஆனால் அந்த அமைப்பு அவர் தாய் நாட்டின் மூன்றிலொருபங்குப் பிரஜைகளை ஒதுக்கிவிட்டு மீதியானவர்களையே வாழவைக்கும்படி திருப்பிவிடப்பட்ட இந்தப் பொன்னாட்டுப் பொதுவுடமையைப், பாவம் தோழரால் அடக்கித் திருப்பிவிட முடியவில்லை. எனினும் இருபது ஆண்டுகளாகஇடைவிடாமற் பேசிக்கொண்டு வந்துவிட்ட வாய்ப்பாடமானதத்துவார்த்தங்கள் கட்சித் தலைவர்களிடத்து ஏற்பட்டிருந்த அபரிமிதமான விசுவாசம் என்பன அவரைக் கட்டுப்படுத்தியே வைத்தன. இந்த நிலையிலேயே இன்னமும் போய்க்கொண்டிருக்குமாயின் அதன் கதி...? ஆம், தோழர் சச்சிதானந்தம் கால் மார்க்ஸின் முதலாவது வாரிசாகவே இருக்கலாம். மார்க்ஸியம் என்ன?மார்க்ஸீய வாதிகளின் இலட்சிய எல்லையான அரசனே தேவையில்லை நம்மை நாமே, எல்லாரும் எல்லாரையுமே ஆண்டுகொள்ள முடியும் என்ற அதியுச்ச நிலையான 'அனார் இஸத்'தையே உலகத்திற்கு கொண்டுவந்து விடக்கூடிய திறமையாளனாக இருக்கலாம். ஆனாலும் அவர் தன்னைத்தானே 'தமிழன்' என்று சொல்லிக்கொள்வதில் யாருக்கு என்ன குறைந்துவிட்டது?மார்க்ஸைஜெர்மானியயூதன் என்று எழுதி வைக்கும் சரித்திர ஆசிரியர்கள் சச்சிதானந்தத்தை இலங்கைத் தமிழன் என்று எழுதினால் அதை ஏன் மற்றவர் தடுக்கவேண்டும்? இலங்கையின் அரசியல் போகும் போக்கில் இந்த நாட்டில் இனித் தமிழினம் இருக்க முடியுமா? குடியேற்றத் திட்டங்கள், பாஷைப் பிரச்னை.. இப்படியே போய்க்கொண்டிருப்பின் ஒரு நூறு வருடங்களின்பின் இலங்கைத் தமிழின்நிலைதான் என்ன?

சிங்களத் தலைவர்களோடு ஒத்துழைத்ததின் பயனைத் தோழருக்கு இந்த வினாக்கட்கு விடை தெரியவே தெரியும். ஆனாலும் உலக சகோதரத்துவம்...தொழிலாளி...முதலாளி...

குழம்பிக்கொண்டே போய் ரேடியோவை முறுக்கிவிட்டார் சச்சிதானந்தம். வானொலி பாடியது.

"அவள் செப்பு மொழி பதினெட்டுடையாள்—எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்."

அவர் சிந்தனைகள் மறுபடியும் சுழன்றன. தமிழனையும் தமிழையும்பற்றி எவ்வளவோ உணர்ச்சி வேகத்துடன் எத்தனையோ இடங்களிற் பாடிய பாரதியாரே, இந்திய தேசத்தின் மற்றையப் பாஷைகளையும் ஒப்புக்கொண்டு...ஆம், தமிழன் என்றைக்குமே பிற பாஷைகளைத் துவேசித்தது இல்லை.

அடடா!இதேமாதிரிச் சிங்களச் சகோதரர்களும் தமிழை இலங்கையின் தேசிய பாஷைகளில் ஒன்றாக ஒப்புக்கொண்டுவிட்டால் அதன் பிறகு எத்தனை ஒற்றுமையான ஐக்கியமான இலங்கை கைகூடிவிடும்?

ஆனால் இப்போது காலங்கடந்துவிட்டதேசச்சிதானந்தம் வாய்விட்டுக் கூவினார். 'இனி அரசியல் அதிகாரத்தைப் பிரிப்பதைத் தவிர வேறு வழியேஇல்லை.'

இப்படிக் கூவிக்கொண்டே தோழர் தெருப் படலைக்கு வந்தார்.

ஆவணி மாதத்துக் காலை இள வெய்யில் முதுகிலே சுள்ளென்றடித்தது. கிழக்கிலே சூரியன் உதயமாவதைப் போன்று கிழக்கிலங்கையிலேயும் புரட்சி ஆரம்பமாகிவிட்டது. மூவர்ணக் கொடிகளைப் பிடித்துக் கொண்டே தொண்டர்கள் 'ஒற்றையாட்சி ஒழிக' என்று கோஷங்கள் எழுப்பிக் கொண்டு நிதானத்தோடும் அடக்கமாகவும் முன்னேறி வந்துகொண்டிருந்தார்கள்.

ஊர்வலம் அவர் அருகாற் செல்கையில் ஒரு தொண்டர் கோஷித்தார், தலையைக் கொடுத்தும் தமிழைக் காப்போம் என்று. சச்சிதானந்தமும் 'புரட்சி நீடுழி வாழ்க' என்று கோஷித்துக்கொண்டே தொண்டரணியில் சேர்ந்துகொண்டார். தமிழன் தமிழனாக வாழ்ந்தாற்தான் உலக சகோதரத்துவத்தைப்பற்றி அவன் பேச முடியும் என்று அவர் மனச்சாட்சி சொல்லிக்கொண்டிருந்தது.

---

**கண்ணே! போரோ......**

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லடி தந்தாலும், காவற்சிறையிற் தள்ளிச் சாகடித்தாலும் தமிழ் காக்கும் இன்பத்தில்-அந்தக் கடமை உணர்ச்சியில் நீயும் நானும் பங்கு கொண்டு வெற்றி பெற்றால் பின் இருவருக்கும் திருமணம். இல்லையேல் வீர சொர்க்கம் தான். எனவே ஆனியிற் திருமணம் என அவசரப்படாதே ஆகஸ்ட் போராட்டம்தான் திருமணத்தைக் காட்டிலும் முக்கியமானது என்பதை இப்பொழுது நீ உணர்ந்திருப்பாயென நம்புகிறேன்.

என் அன்பே! தீந்தமிழ் அது நமது உயி. ர்உயிருக்கு வேதனையானால், சோதனையேற்பட்டால் விமோசனத்துக்காக எத்தனை முயற்சிகள்—பொருட் செலவு! அதுபோல் தமிழ் காப்பதற்காக எம் கடைசி மூச்சு உள்ளவரை மட்டற்ற மகிழ்ச்சியுடன் உயிர்போனாலும் உரிமை பறிபோகக் கூடா தொன்ற உணர்வுடன் போராடுவோம்.

கடிதம் நீண்டுகொண்டே போகிறது எங்கள் வீட்டுத் தோட்டத்துப் பூடோல் மாதிரி! உனக்கும் அலுப்புத் தட்டும். பதில் கண்டு பின் விரிவாக எழுதுகிறேன். இதோ என்" உ...ச்..."!

என் உயிர்க் காதலன்

"புத்தொளி"

---

# பல்லுக் கழன்ற நரியின்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டதே சரியான வழியென நண்பர் குமாரசாமி கூறுகிறார். திரு பொன்னம்பலம் சிங்கள சிறீ வருகிறதெனத்தெரிந்தவுடன் இரு கார்களை வாங்கிய நிகழ்ச்சியையே திரு குமாரசாமி சரியான வழியெனக் கூறுகிறாரோ என்னவோ தெரியவில்லை. ஆனால் திரு கு. வன்னியசிங்கம் இதற்குப் பல நாட்களுக்குமுன் 'சிங்கள சிறீ' எழாத காலத்தில் கார் வாங்கியதைக் குறையாகப் பேசுபவர் திரு பொன்னம்பலத்தை அதற்காகப் பாராட்டியிருக்கமாட்டாரென்றும் சிறீ எதிர்ப்பை ஒரு நாளுடன் விட்டுவிட்டு இடையிடையே செய்வதென்ற யோசனையைத்தான் பாராட்டுகிறாரெனவும் எண்ணுகிறோம். ஆற்றில் விழுந்து தத்தளிப்பவன் துரும்பைப் பற்றியதுபோல இன்றுள்ள நிலையில் திரு குமாரசாமி சமஷ்டி எதிர்ப்பாளர் அனைவரையும் பாராட்டுகிறார். எதிர்மன்ன சிங்கத்தையும் காரியப்பரையும் வெளியிற் பாராட்டாவிட்டாலும் உள்ளூரப் போற்றிப் புகழ்ந்திருப்பாரென்பதில் ஐயமில்லை. திரு. பொன்னம்பலத்தை வாலறுந்த நரியாக வர்ணித்த திரு. குமாரசாமி பல்லுங்களன்ற நரியாகக் காட்சியளிப்பது பரிதாபமே.

### இளைய சகோதரர்

"ஜனாப் அஸீஸுக்கும் திரு. தொண்டமானுக்கும் தனித்தனியே ஆதரவு தருவதாக வாக்களித்து இருபிரிவுகளுக்கு மிடையில் சமஷ்டிக் கட்சி பிளவை அதிகரித்து வருகிறது" எனத் திரு. குமாரசாமி கூறுகிறார். இக் கூற்றிற்கு அவர் எத்தகைய ஆதாரமுங் காட்டாதபடியால் வழமையாக அவர் கூக்குரலிட்டழைக்கும் ஓநாய்களில் இதுவும் ஒன்றென்று விட்டுவிடுவோம்" ஆனால் இத்தகைய ஆதாரமற்ற கூற்றுகளால் தமிழ் மக்கள் மேற்கொள்ளவிருக்கும் விடுதலைப் போராட்டத்தில் அவர்களின் நம்பிக்கையைக் குறைப்பதோடு சிங்கள ஏகாதிபத்திய வெறியர்களின் கையைப் பலப்படுத்த திரு. குமாரசாமி செய்யுஞ் சூழ்ச்சி தமிழினத்தையே அழிக்கச் செய்யுஞ் சதித் திட்டமாகும். அதிஷ்டவசமாகத் திரு. குமாரசாமியின் பேச்சை எடைபோட்டு அதன் குணகுணங்களை முன்னரே தமிழ் மக்கள் அறிந்துவிட்டார்களாதலால் ஆறுதலடைகின்றோம். கிழக்குமாகாணத்தில் சமஷ்டிக் கட்சியை கேட் முதலியார் காரியப்பர் கை நெகிழ்த்த சேதியையும் திரு. குமாரசாமி உவகை பொங்கக் குறிப்பிடுகிறார். அரை மந்திரிப்பதவியைத் துறக்க மாட்டாமல் தமது அரசியல் குரு ஜீ. ஜீ. பொன்னம்பலத்தைத் துறந்து யூ. என். பீயிற் சேர்ந்து கிளைகளுந் திறந்த திரு. குமாரசாமிக்குத் திரு. காரியப்பர் இளைய சகோதரர் என்பதைத் தவிர வேறென்ன கூறுவோம்.

### வயிறு எரிகிறது குமாரசாமிக்கு

வட்ட மேசை மகாநாடு பற்றித் திரு. [illegible] அதிகம் எழுதியுள்ளார். வட்ட மேசைப் பேச்சு வந்தவுடன் ஒரு சபையை அமைத்துப் பிரதமரின் ஆலோசனையைப் புகழ்ந்து அவர் அழைப்பைப் பெற்றுக் கொள்ள விரும்பினார் திரு. குமாரசாமி. ஆனால் பிரதமர் அவ்விஷயத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தம்மைச்சந்திப்பதற்கு ஒரு தேதி குறிப்பிப்பிடுவாரானால் தாம் சந்தோஷமாக அவரைச் சந்தித்து எல்லா விஷயங்களையும் பற்றிப் பேச ஆயத்தமாயிருப்பதாகப் பாராளுமன்றத்திற் கூறிவிட்டார். தமிழ் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரேயொரு கட்சி சமஷ்டிக் கட்சியே என்பதைத் திரு. பண்டாரநாயக்கா பேச்சாலுஞ் செய்கையாலும் காட்டி வருவதைக் காணத் திரு. குமாரசாமிக்கு வயிறு எரிகிறது. புதிதாக அமைத்த சபையுங் குலைக்கப் பட்டதோ என்னவோ யார் கண்டார்?

### ஒதுக்கித் தள்ளப்பட்டவர் சிந்திப்பாரா?

திரு. சுந்தரலிங்கம் அவர்கள் அரசியலில் ஒதுங்கி நிற்பதன் மூலந் தமிழினத்திற்கு இன்று ஒப்பற்ற சேவை செய்கிறார். திரு. பொன்னம்பலமும் இப்போது தாம் அரசியலிலிருந்து ஒதுங்க வேண்டியதன் அவசியத்தைக் கண்டு கொண்டார். திரு. குமாரசாமியை மக்கள் ஒதுக்கித் தள்ளியும் இன்னும் நான்காண்டு கழித்து வரும் விஷயத்திற்காக அவர் வாயூறுகிறதே. தமது இத்தகைய செயல்களால் தமிழருக்கு வரும் இன்னல்களைத் [illegible] வேண்டும். சிந்திப்பாரா என்பதுதான் கேள்வி.

---

# இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

நவீன முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

**இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத்தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.**

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இயற்கையாகவே அழகு உள்ளவர்களுக்கு மேக்கப் அவசியமா?

## இக் கலையின் இன்றைய நிலை!

தற்காலம் பொதுஜனங்கள் சினிமாவைப்பற்றி, சினிமாவை உருவாக்கும்ஒவ்வோர் தொழிலைப்பற்றியும் நன்கு அறிந்திருக்கிறார்கள். ஆனால் அதில் மிக முக்கியமான 'மேக்கப்' கலையைப் பற்றி அவ்வளவாக அறிந்திருக்கமாட்டார்கள். அதை அறிய அவ்வளவு சிரத்தை எடுப்பதும் இல்லை. ஏனெனில் 'மேக்கப்' என்பது நாடகம் முதல் சினிமாவரை எல்லாம் ஒன்றுகவே கருதி இருப்பதே அதன் காரணம்.

இந்தியாவில் நாகரிக அபிவிருத்தி ஏற்படாத காலத்தில், தெருக் கூத்துகளில், தங்கள் வேஷங்களை, தேங்காயெண்ணெயில் சுண்ணும்பையும் குங்கிலியத்தையும் கலந்து முகங்களில் பூசி அழகுபடுத்திக் கொண்டார்கள். அவ்விதமாக பூசுவதால் முகத்தின் இயற்கை வசீகரம் கொல்லப்பட்டு, உஷ்ணத்தால் முகத்தில் பலவித ரோகங்கள் வருகிறது. அதை மதியாது, உற்சாகமாகவும், பலர் தொழிலாகவும் கொண்டனர்.

### மேக்கப் சாமான்கள்

அதன்பின் வெளிநாடுகளிலிருந்து, பல நிறப் பவுடர்களும், கண் மையும், உதட்டுச் சாயமும் இறக்குமதியான பின் நாடகம்முதல் நடனக் கச்சேரிவரை அம்முறையைக் கையாண்டனர். இம்முறையும் அதிக உஷ்ணத்தையும், கெடுதலையும் கொடுப்பதாகவே இருந்தது.

ஆனால் தற்காலம் வைத்திய நிபுணர்களைக்கொண்டு பரிசோதிக்கப்பட்டு அதனால் உடலுக்கோ, முகத்திற்கோ எவ்வித ஹானியையும் விளைவிக்காதபடி இனிமையான வாசனைத் திரவியங்களையும் அதில் சேர்த்து, உண்மையான நல்ல 'மேக்கப்' சாமான்களைத் தயாரித்து உலகிற்கு அளித்தார்கள் மேல்நாட்டார். அதில் மிக பிரபல கம்பெனியார் 'மாக்ஸ் பாக்டர்' இன்று 'மாக்ஸ் பாக்டர்' மேக்கப் சாமான்கள் சகல நாடுகளிலும் உபயோகத்தில் இருந்து வருகிறது தற்போது 'ஸ்டெயின்ஸ்' 'ஏடர்ன்ஸ்' என்ற முக்கிய கம்பெனிகளையும் தவிர ஒவ்வோர் நாடுகளிலும் இன்று 'மேக்கப்' சாமான்கள் தயாரிக்கப்பட்டு உபயோகத்தில் இருந்து வருகிறது.

### மேக்கப் ஏன்?

பிரகாசமான விளக்கு வெளிச்சத்தில் தன் சொந்த நிறத்தை மாற்றி பிரகாசமாக்குவதுதான் 'மேக்கப்' என்பது அல்ல, இயற்கையாகவே அழகிருந்தால்மேக்கப் ஏன் செய்ய வேண்டும்? ஏனெனில் எவ்வளவு அழகாகவும, சிகப்பாகவும் இருந்தாலும் 'காமிரா' முன் அவர்கள் முகம் 'க்ளோசப்' எடுக்கும்போது அவர்கள்

**பி. ஆர். சிங்**

முகத்தில் உள்ள ஒவ்வோர் உரோமத் துவாரங்கள் முதல், பருக்கள்வரை-அதாவது சாதாரணமாக நம் கண்ணுக்குத் தெரியாதவை—எல்லாம் அக்'க்ளோசப்"பில் நன்ருகத் தெரியும். தவிர நம் கண்ணுக்குத் தெரியும் அம் மிருதுவான முகம் 'மேக்கப்பில்லாவிடில் கடூரமாகத் தெரியும். அதுமட்டுமல்ல, ஏராளமான 'பவர்' உள்ள லைட்டுக்கு முன், அவர்கள் முகம் சோர்வடைகிறது வியர்த்துக் கொட்டுகிறது. இவைகளுக்கு நிவாரணம் தான் 'மேக்கப்'

### சாதனங்கள்

மேக்கப் செய்யப்படாத முகம் இயற்கையாக கடூரமாக இருந்தாலும், மேக்கப்பிற்கு பின் மிருதுவாகவும், அழகாகவும், சோர்வில்லாமலும் இருக்கும். 'எலக்டிரிக்' வெளிச்சத்தால் முகம் உஷ்ணமடையாமல் மேக்கப் பூச்சுகள் தடுத்துக்கொள்ளவும் செய்கிறது. மேக்கப்பிற்காக உபயோகப்படுத்தப்படும் நிறங்கள் நூற்றுக்கு மேற்பட்டவை இருக்கின்றன. இது தவிர கத்தி, கத்திரி, பிரஷ்கள், ப்ளேடு, சீப்பு தவிர எத்தனையோ வித முடிகளும் உபயோகப் படுத்தப்படுகின்றன.

### சொந்தத்தில் மேக்கப்

தற்போதைய காலத்தில் சில பெரிய நட்சத்திரங்கள் சொந்தமாக மேக்கப் போட்டுக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

சொந்தமாக மேக்கப் போட்டுக்கொள்ளும் நட்சத்திரங்கள், எந்த படத்திலும் ஒரேமாதிரியான தோற்றத்திலேயேதான் இருப்பார்கள். படத்திற்கு படம் தன் கதாபாத்திரத்தின் பெயர் மட்டும் மாறும். வேஷப் பொருத்தம் என்பது முகத்தில் இராது. ஏனெனில் அவர்களுக்கு எங்கு எந்த ஸ்டுடியோவானுலும், எப்படமானுலும், புராணமோ, சமூகமோ எதுவானுலும் ஒரே மேக்கப்தான் செய்யத் தெரியும். உடை ஒன்றில்தான் வித்தியாசப்படுத்திக் கொள்வார்கள். ஆனல்மேக்கப்மேன் அதே நட்சத்திரங்களை கதாபாத்திரத்திற்குத் தக்கவாறு முகங்களை மாற்றி அமைத்துத் தர முடியும் என்பது நிச்சயம். இதை உணர வேண்டும் அவர்கள்.



வணங்காமுடி: திருமணக்கோலத்தில் இருப்பவர்கள் நம்பியார்-சாவித்திரி

திரைப்பட விமர்சனம்:

# வணங்காமுடி

வாள் வீச்சும் வாய்ப் பேச்சும் கடகட வென மடைதிறந்த வெள்ளத்தின் வேகத்தில் வந்து கொட்டகையைக் கிடுகிடுக்கச் செய்கின்றன. தீஞ்சுவைப் பாடல்களும் எழில் மிகு ஆடல்கள் சிலவும் வீர உணர்ச்சியால் சூடேறிய உள்ளங்களைக் குளிரப்பண்ணிக் குஷிப்படுத்துகின்றன. அந்த அனுபவம் மிதமாகி இதமற்றுப் போகாதிருக்கும் வகையில் கல்நெஞ்சையும் கரைய வைக்கும் தன்மை வாய்ந்த உருக்கமான நிகழ்ச்சிகள் பொருத்தமான இடங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னுல் காதல், வீரம், சோகம் ஆகிய மூன்று ரஸங்களையும் கூட்டுச் சேர்த்து "வணங்காமுடி" என்ற பெயரில் படமாகத் தரப்பட்டிருக்கிறது. கொழும்பு கிங்ஸ்லி தியேட்டரிலும் மற்றும் வெளியூர் தியேட்டர்கள் சிலவற்றிலும் வணங்காமுடி தற்போது ரஸிகர்களுக்கு வணக்கம் தெரிவித்து அவர்களை வரவேற்ற வண்ணம் இருக்கிறுன்.

வணங்காமுடி (சிவாஜி கணேசன்) யாருக்கும் தலை வணங்கியதில்லை; ஆனல் பெற்ற நற்றாய் மங்களம் (கண்ணும்பா) உற்ற தந்தை தேவப்பன் (நாகையா) இவர்களின் அன்புக் கட்டளைக்கு எப்பொழுதுமே தலைவணங்கியவன்தான். இசைவல்ல சிற்பியாயிருந்து இளவரசியின் காதலால் நாடு கடத்தப்பட்டு மீண்டும் தந்தையாலேயே கைது செய்யப்பட்டுக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்ட வாலிபனின் வீர வரலாறுதான் வணங்காமுடி.

மனேகராவின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் படமாக்கப்பட்டிருக்கிறது வணங்காமுடி. முனைதில் தாயும் மகனுமாக முக்கிய பாத்திரங்களேற்ற கண்ணும்பாவும் சிவாஜி கணேசனும்தான் வணங்காமுடியிலும் தாயும் மகனுமாக நடிக்கிறுர்கள். என்றுலும் மனேகராவில் உள்ள அவர்களின் நடிப்புக்கும் வணங்காமுடியிலுள்ள அவர்களின் நடிப்புக்கும் எவ்வளவோ வித்தியாசம்.

அரச சபையிலே குற்றமொன்றும் செய்திராத தனது தோழன் அடிபட்ட போதும், பின்னொரு சமயம் மன்னர் மாளிகையிலே இராச விசுவாசமொன்றுக்காகத் தன்னைக்கைதுசெய்து வந்த தனது தந்தை அநியாயமாக அடிபட்டபோதும் வணங்காமுடி (சிவாஜிகணேசன்)யின் முகபாவம் மிகவும் நன்ருயிருக்கிறது. நாகையா கச்சிதமாகநடித்திருக்கிறுர். கண்ணும்பா வழக்கம்போலக் கண்ணீர் சிந்தவேண்டியதைச் செவ்வனே செய்து முடித்திருக்கிறுர். அரச அவையில் அவர் மகனுக்காக மன்றுடும் கட்டம் அவர் திறமைக்கு இன்னும் கச்சிதமாக நடித்திருக்கலாம்.

மன்னன் மகளாகச் சாவித்திரி நடிக்கிறுர். குறத்தி வேஷமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மன்னன் மகளாக மினுக்கியும், குறத்தியாகக் குலுக்கியும் ரஸிக்கத் தக்க முறையில் நடித்திருக்கிறுர். குறத்தியாக நடித்தது மன்னன் மகளாக நடித்ததைக்காட்டிலும் ஒருபடி சிறப்பாகவே அமைந்திருக்கிறது.

ஒருகட்டத்தில் சேனதிபதியின் உறையில் இருந்தவாளையும் இன்னொரு கட்டத்தில் தந்தையின் உறை வாளையும் வீராவேசத்தோடு உருவுகிறுர். இரண்டு கட்டங்களுமே நேர்த்தியாக இருக்கின்றன.

சேனதிபதியாக நம்பியார் நடித்திருக்கிறுர். சில கட்டங்களில் அவரின் ஆவேசப் பேச்சுகளும் அங்க அசைவுகளும் மிகையாகத் தோன்றிய போதிலும் மொத்தத்தில் குறை சொல்வதற்கில்லை.

ஆட்டக்காரியாக ராஜசுலோசன தோன்றி ஆடிப்பாடி ரஸிகர்களை மகிழ்விக்கிறுர். சிறிய பாகமே அவருக்கு கொடுக்கப்பட்ட போதிலும் அதைக் கச்சிதமாக நடித்திருக்கிறுர். ராஜசுலோசன கமிராவின் எந்தக் கோணத்திலும் அழகியாகத் தோன்றுவது அரைக்கு மேற்பட்ட அங்கங்களைப் பொறுத்தவரையில் உண்மையே. அதற்காக வேண்டாத பாகங்களை அதுவும் டான்ஸுக்கான மேக்கப்பில் குளோசப் எடுத்துக் காட்டுவதில் எத்தகைய நியாயமுமிருக்க முடியாது.

ஹாஸ்ய விருந்தளிக்கும் பொறுப்பு தங்கவேலுவுக்கு விடப்பட்டிருக்கிறது. கதைக்கும் அவருக்கும் அதிக சம்பந்தமில்லை. என்றுலும் ஹாஸ்ய விருந்தளிப்பதற்காகவே வணங்காமுடியின் தோழனுக அவர் படத்தில் நடிக்க வைக்கப்பட்டிருக்கிறுர். அதை அவர்உணர்ந்தே நடித்திருக்கிறுர்.

ஹெலனின் நடனம்பாமர ரஞ்சகமானது. மற்றப்படி படத்தில் வரும் இரண்டொரு கோஷ்டி நடனங்கள் அநாவசியம். படத்தின் விறுவிறுப்புக்கு அவை விரும்பத்தக்கனவல்ல. வணங்காமுடியில் கேட்கும் பாடல்கள் அனைத்துமே இனிமையானவை 'என்னைப்போலப் பெண்ணல்லவோ' என்ற பாடல் அபாரம். ஆனல் குரல் பொருத்தத்தில் படப்பிடிப்பாளர்கள் சற்றுக் கவனம் செலுத்தியிருந்தால் அவற்றின் தரம் படத்தைப் பொறுத்தவரையில் இன்னும் உயர்ந்திருக்கும்.

பட வசனங்கள் வேலனுடையன, அவை பேசப்படும் போது அநேகமாகத் தியேட்டரே அதிரும்படியான கொடைடியாக இருந்தபோதிலும் கருத்தாளம் நிறைந்தவை என்பதை மறுக்க முடியாது. நாகையாவின் வாயிலிருந்து வெளிவரும் வசனங்கள் தென்றலின் இன்பத்தைத் தருகின்றன.

எதிர்பாராதது என்ற படத்தைத் தந்த புனிட்டி சரவண பிக்ஷர்சார்தான் வணங்காமுடியையும் தந்திருக்கிறுர்கள். திரு புல்லையா டைரக்ட் செய்திருக்கிறுர். சிறிய சிறிய நிகழ்ச்சிகளையெல்லாம் ஒன்று சேர்த்துத் தொடர்ச்சியாக ஓடும் வெற்றிப்படமாகத் திறமையாக உருவாக்கியிருக்கிறுர்கள்.


## வாடிக்கைக்காரர்களுக்கோர் அறிவித்தல்

7-4-57 முதல் எங்கள் டெலிபோன் இலக்கம் 281 என மாற்றப்பட்டுள்ள தெனபதை அறியத் தருகிறேம்.

சிறந்த வேலைப்பாடும், உத்தரவாதமுமுள்ள அழகிய பவுண், வைர ஆபரணங்களுக்கு எந்நேரமும் எங்களிடம் விஜயஞ் செய்யுங்கள். அழகை அழகு செய்ய, அருள் பெருக, அன்பு வளர, அழைக்கிறேம்.

எல். கே. எஸ். லெப்பை பிரதர்ஸ்,

# தங்க மாளிகை

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் குரல்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தலனுக்காக ஒருசில மணி நேரமாவது செலவழித் திருக்கின்ருர்களா? தமிழுக்காக மற்றைய தலைவர்கள் அடிபட்டு, உதைபட்டு, மிதிபட்டு பேரை ஆற்றில் தூக்கி எறியப்பட்டபோது இவர்கள் எங்கிருந்தார்கள்? கறுவாக்காட்டிலுள்ள மாளிகையில் இன்பமாகப் பொழுதைக் கழித்துக்கொண்டிருந்தவர்கள் இன்று பண்டாவின் கடைக்கண் பார்வை தங்கள் பக்கம் திரும்புகின்றது; அதனுல் ஏதாவது பதவி கிடைக்கும் என்ற காரணத்தால் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுப்பதற்குக் கிளம்பி யிருக்கின்ருர்கள்; சிங்களம் மட்டும் சட்டம் எம். ஈ. பி. யினுல், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது வாய் மூடி மௌனிகளாக இருந்த இவர்கள், இன்று புற்றீசல்கள் போலக் கிளம்பியிருக்கின்ருர்கள் ஆலோசனை கூற.

ஆகையால் ஈழப் பெருங்குடி மக்களே! இவ்வினத் துரோகிகளின், கருங்காலிகளின், கோடரிக் காம்புகளின் பசப்பு வார்த்தைகளில் மயங்கிவிடாதீர்கள். ஒற்றுமையுடன், ஒரே குரலுடன் அற்ப சலுகைகளை நிராகரியுங்கள். நீங்கள் தெரிவு செய்த உறுப்பினர்கள், உங்கள் நலனே தங்கள் நலன் என்று கருதும் தலைவர்கள் தமிழ் மொழி காக்க, இழந்த உரிமையை மீண்டும் பெறத் திட்டம்தீட்டிக்கொண்டிருக்கின்ருர்கள். உரிமை அளிப்பதாயிருந்தால் சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்து அளியுங்கள். அற்ப சலுகைகள் எங்களுக்கு வேண்டாம். அதை நாம் ஒருகாலமும் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என ஒரே குரலுடன் உரிமைக் குரலெழுப்புங்கள். சந்தர்ப்பவாதிகளின் பேச்சை நம்பாதீர்கள். நீங்கள் தெரிந்தனுப்பிய தலைவர்கள் தீட்டும் திட்டங்களை ஏற்று சாத்வீக முறையில் உரிமைக் குரலெழுப்பி இழந்த உரிமைகளை மீண்டும் பெற, ஒற்றுமையாக செயலாற்றுங்கள். வெற்றி நமதே!

—"யாழ்வாணன்"

கொழும்பு, 29-4-57.

## வாழ்வளிக்க வாலிபர்கள் முன்வருக!

நமது நாட்டில் சீதனத்தின் கொடுமைகளை விளக்கிப் பத்திரிகைகளுக்குக் கடிதங்கள் எழுதுபவர்கள், சட்டத்தின் மூலம் அதைத் தடை பண்ணக் கோருபவர்கள், பிரசார இயக்கங்களை ஏற்படுத்த யோசனை கூறுபவர்கள் பல பேர்கள்! ஆனுல் தமது இருண்ட வாழ்வில் ஒளிபிறக்காதா என்று ஏங்கித் தவிக்கும் ஆயிரக்கணக்கான வனிதையர்களின் துயர நிலைமை உணர்ந்து அவர்களுக்கு விமோசனமளிப்பதற்கு ஒவ்வொரு வாலிபனும் முன்வராத பட்சத்தில் மேல் கூறியவைகளால் ஒரு வித பலனும் ஏற்படப்போவதில்லை எனவே நமது நாட்டில் சீதனம் இல்லாததால் விவாகமே இன்றி வேதனையோடு இருக்கும் ஆயிரக்கணக்கான வனிதையர்களுக்கு வாழ்வளிப்பதற்காக ஒவ்வொரு மணமாகாத வாலிபனும் முன்வர வேண்டும்.

—கு. நா. விஸ்வலிங்கம்

ஒப்பநாயக்கா

27—4—57

# 'நியாயமான அளவு' என்பது வெறும் வார்த்தை ஜாலம்

## பிரதமரின் தமிழ்ப் பிரயோக அறிக்கைக்கு இ.தி.மு.க. கண்டனம்

"சிங்களம் மட்டும் சட்டத்தைத் திருத்தியோ அல்லது அதை முற்ருக நிராகரித்துவிட்டோ தமிழையும் சிங்களத்தையும் இலங்கையின் அரச கரும மொழிகளாக்கி, சிங்கள தமிழ் சமூகங்களிடையே ஒற்றுமையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தும்படி இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது"

இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் காரியக் கமிட்டி விடுத்துள்ள அறிக்கை யொன்றில் மேற்கண்டவாறு கண்டிருக்கிறது. மேற்படி கழகத்தின் காரியக் கமிட்டி பிரதமரின் "தமிழின் நியாயமான அளவு உபயோகம்" பற்றிய அறிவித்தல்களைப் பரிசீலனை செய்ததில் அவை வெறும் வார்த்தை ஜாலங்களும் கண்துடைப்பு வேலைகளுமே என்ற முடிவுக்கு இப்போது வந்திருக்கிறது! அரசியல் திட்டத்தை திருத்தாமல் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து வழங்கச் செய்யப்படும் எந்த முயற்சியாலும் எதுவித பலனுமில்லை யென்றும் அவை வெறுமனே முடிவில் புகைந்து மறைந்து போகுமென்றும் பிரஸ்தாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு திரு. பண்டாரநாயகா பதவியேற்றதும் இ. தி. மு. க. அவரை வெகுவாகப் பாராட்டிப் புகழ்ந்து ஒரு தந்திச் செய்தியை அனுப்பி வைத்ததென்பதும் இப்போது அவரை ஒரு வார்த்தை ஜாலக்காரர் என்று இழித்துரைப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## நாட்டை விடுவிக்கும்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டனவே, ஏன் என்று பார்க்க வேண்டுமென்ருர்.

"குறை கூறினல் பேச்சு உரிமை சுதந்திரம்தந்தாலே பேசுகிறீர்கள் என்று காங்கிரஸ்காரர்கள் கேட்கிருர்கள். அப்பேர்து சத்திய மூர்த்தி நினைவுதான் எழுகிறது.

அன்று அந்நிய ஆட்சியை எதிர்த்து அவர் வீர முழக்கம் செய்தபோதுதேம்ஸ்நதிக்கரையில் அமர்ந்து "நாங்கள் உரிமை தந்தோம்" என்று அன்றைய ஆட்சியினர் சொன்னுர்கள். இன்று கூவம் நதிக் கரையில் உயன்று கொண்டிருப்பவர் இதரரைப்பார்த்துசொல்லுகிருர்கள் என்று கூறி முடித்தார்.


எல்பின்ஸ்டன்

ரெக்ஸி

எம். ஜி. ராமச்சந்திரன்

லலிதா

பத்மினி

பி. எஸ். வீரப்பா

எம். என். நம்பியார்


நடிக்கும்

ராஜராஜன்




சிரிப்பூட்டும் நிகழ்ச்சிகள் வேண்டும். அது மட்டும் போதாது: நல்ல கதையமைப்பு வேண்டும்; இதயம் குளிர வைக்கும் இசை விருந்து வேண்டும்; இனிய பாடல்கள் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகப் படத்தில் சிறந்த நட்சத்திர நடிக நடிகைகள் உயர்ந்த முறையில் நடிக்க வேண்டும்

— இல்லையா?



அப்படியானுல் இதோ இருக்கிறது படம்:

எங்கள் வீட்டு மகாலட்சுமி



நடிகர்கள்: ஏ. நாகேஸ்வரராவ், சாவித்திரி,

கண்ணப்பா, ரங்கராவ், கே. ஏ. தங்கவேலு, சுந்தரிபாய்,

எம். என். நம்பியார், ராஜசுலோசன, அங்கமுத்து, ஏழுமலை, பார்வதி,

மாஸ்டர் சரத்பாபு, (ரூட்) நாய்.

நடனங்கள்: ஈ. வி. சரோஜா, ஏ. கே. சோப்ரா.

இரண்டாவது மகத்தான வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) போகம்பரை (கண்டி) ராணி (யாழ்ப்பாணம்) ஸ்டார் (பதுளை)

தினசரி மாலை 6, இரவு 9-30, சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணி, ஞாயிறு காலை 10 மணி.

கேதுமதி (மகாவெலை) தினசரி மாலை 6-30, இரவு 9-30, ஞாயிறு பிற்பகல் 2-30.

முருகன் (ஜிந்துப்பிட்டி)

தினசரி மாலை 6, இரவு 9-30. சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கும். ஞாயிறு காலை 10 மணிக்கும் விசேஷ காட்சி.

எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி நடிக்கும்

மலைக்கள்ளன்

மீபுர (நீர்கொழும்பு) அரோஹ (மட்டக்களப்பு)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எம். ஜி. ராமச்சந்திரன் நடித்த

சக்கரவர்த்தித் திருமகள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்

### 'சும்மாவைக் கொடு'

ஒரு நாள் ஒரு தனவந்தர் ஒரு வழியால் போகும் போது ஒரு மரத்தின் கீழ் சில போக்கிரிகள் சூதாடுவதைக் கண்டு அவர்களின் கிட்டப் போய் "பந்தயம் என்ன?" என்று கேட்டார். அவர்கள் "சும்மா" என்றூர்கள். தனவந்தர் தம்மையும் சேர்க்கும்படி கேட்டு, விளையாடினூர். போக்கிரிகள் தனவந்தரின் கழுத்துச் சங்கிலியிலேயே கண்ணுக இருந்தனர். தனவந்தர் ஆட்டத்தில் தோற்று, வெட்கத்தால் "நான் இனி ஆடவில்லை" என்று சொல்லிப் போக எத்தனிக்கும் போது, போக்கிரிகள் "சும்மாவைக் கொடு" என்று அவரைப் பிடித்துக் கொண்டனர். அவர் ஒன்றுந் தோன்றுது விழித்து "சும்மா என்றுல் யாது?" என்று கேட்டார். "நீ என்னவென்று நினைத்து ஆடினுய்? முன்பு நீ பந்தயம் என்ன வென்று கேட்ட போது நாங்கள் சும்மா என்றேம். நீ அதற்குச் சம்மதித்துத்தானே விளையாடினுய்? நீ தோற்றபடியால் ஒப்புக்கொண்டபடி சும்மாவைக் கொடு! அல்லாவிட்டால் அதற்குப்பதிலாக உன் சங்கிலியைக் கொடு" என்றூர்கள் அப் போக்கிரிகள். "வாருங்கள் நியாயசபையிற் கேட்போம்" என்று தனவந்தர் எல்லோரையும் அழைத்துக் கொண்டு நியாயசபைக்குச் சென்று நடந்தவற்றை நியாயாதிபதிக்கு முறையிட்டார். போக்கிரிகள் "ஐயா! இவன் ஒப்புக் கொண்டபடி சும்மாவை வாங்கிக் கொடுங்கள் அல்லாவிட்டால் அதற்காகச் சங்கிலியை வாங்கிக் கொடுங்கள்" என்றூர்கள்.

நியாயாதிபதி சற்றுயோசித்துவிட்டுப் போக்கிரிகளைக் கூப்பிட்டுப் பக்கத்திலிருந்த ஓர் வெறுங் கூடையைக் காட்டி அதற்குள் "என்னஇருக்கிறது?" என்று கேட்டார். அவர்கள் "சும்மா இருக்கிறது" என்றூர்கள். "அதற்குள் இருக்கிற சும்மாவை எடுங்கள்" என்றூர் நியாயாதிபதி. போக்கிரிகள் செய்வதறியாது திகைத்தார்கள். நியாயாதிபதி சிரித்து "இனிமேல் உங்கள் போக்கிரித்தனத்தை அகற்றி நல்லவர்களாக வாழுங்கள்" என்றூர்.

—வே. கமலாதேவி,
(வ. ம. இல. 634)
கொக்குவில் கிழக்கு.

—.—

நிமிஷக் கதை: 18

### குணுவின் பதில்

அன்று வகுப்பறையிலே ஒரே 'குசு குசு' என்ற பேச்சுத்தான்! எல்லா மாணவிகளும் மிகமிக உற்சாகத்துடன் இருந்தார்கள்......

இந்த மிதமிஞ்சிய உற்சாகத்திற்குக் காரணம் என்ன?

யாரோ ஒரு பிரபல அறிஞர் பாடசாலைக்கு வருகின்றூராம்......

எல்லோரும் வரப்போகும் அறிஞரைக் காணும் ஆவலில் மிதந்துகொண்டிருந்தார்கள்.

அப்போது—!

அந்த அறிஞர் வந்தார்... ஆசிரியர்கள் அவரை மலர்ந்த முகத்துடன் வரவேற்றூர்கள்.

அந்த அறிஞர் எல்லா வகுப்புகளையும் பார்வையிட்டுக்கொண்டே வந்தார்...... நான்காம் வகுப்பு......குறும்புக்காரி குணலக்சுமி படிக்கும் வகுப்பாயிற்றே அது...

மாணவிகளைப் பார்த்து அறிஞர் கேட்டார்:

"மீன்பிடிப்பதற்குப் பாவிக்கப்படும் வலை இருக்கிறதே..... அது எப்படிச் செய்யப்பட்டது......?"

திடீரென்று எழுந்து நின்ற குணு 'டக்'கென்று பதிலளித்தாள்.

"பல நூறு வட்டங்களை நூலினுல் கட்டப்பட்டிருக்கின்றன......!"

—தேன்மொழி

### அன்பார்ந்த மருமக்களுக்கு!

ஆயிரத்து ஐஞ்ஞூறுக்கு மேற்பட்ட மருமக்கள் வளர்மதியிற் சேர்ந்து உழைத்து வருகிறூர்கள். இவர்கள் யாவரும் இளைஞர்கள்; எழுச்சியும் உணர்ச்சியும் உடையவர்கள். எனவே எங்கள் மருமக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேம். நீங்கள் செய்வது மாத்திரமன்றி, உங்கள் ஊரிலுள்ள பத்து வீடுகளுக்காவது சென்று பின்வருபவற்றைச் செய்யுமாறு வேண்டுங்கள்; இரந்து கேளுங்கள்; செய்வித்து முடியுங்கள்.

1. தமிழ் வாழ, வளம்பெற அரசாங்கத்துக்கும், வர்த்தக நிலையங்களுக்கும் எழுதியனுப்பும் கடிதத் தொடர்புகள் அனைவற்றையும் தமிழிலேயே எழுதுங்கள்—எழுதுவியுங்கள். முகவரி, தந்தி, அஞ்சற் கட்டளை முதலியவற்றையும் தமிழில் எழுதுவியுங்கள்.
2. 11—6—57 செவ்வாய்க்கிழமை திருவள்ளுவர் திருநாள். சாதி, மத வேறுபாடின்றி ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாடச் செய்யுங்கள். கொண்டாடுங்கள்.
3. ஒவ்வொருவரும் மூன்று நண்பர்களையாகுதல் வளர்மதியிற் சேரச் செய்யுங்கள்.

### திருவள்ளுவர் திருநாள் கட்டுரைப் போட்டி

11—6—57 செவ்வாய்க்கிழமை திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு வளர்மதியுறுப்பினருக்குள் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்துகிறேம். திருக்குறள்பற்றி எழுதியனுப்பப்படும் சிறந்த இரு கட்டுரைகளுக்கு முதற் பரிசு ரூ. 15, இரண்டாம் பரிசு ரூ. 10 பெறுமதியான நூல்களைப் பரிசில்களாக வழங்க தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் உடன்பட்டுள்ளார். கட்டுரைகள் இரண்டு பக்கத்துக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். 28—5—57க்கு முன் வளர்மதிக்கு கட்டுரைகளை அனுப்புக. கடித உறையின் மீது "குறள் போட்டி" என்று குறிப்பிடுக. சிறந்த கட்டுரைகள் 9—6—57 சுதந்திரனில் வெளியிடப்படும்.

மிக்க அன்புள்ள,
சுதந்திரன் மாமா.

## அக்கரைப்பற்றில்
### பாரதி மணி மண்டபம்



இழக்கு மாகாணத்தின் தென் கோடியிலுள்ள அக்கரைப்பற்றில் ஒரு அழகான மணி மண்டபம் உருப்பெற்று வருகிறது. பாரதியாருக்கு அவர் பிறந்த எட்டயபுரத்தில் ஓர் மணி மண்டபம் அமைத்து தாய்நாட்டு மக்கள் அவரைக் கௌரவித்துள்ளார்கள். தமிழ் பேசும் மக்கள் எங்கெல்லாம் உள்ளார்களோ அங்கெல்லாம் அமரகவி பாரதிக்கு மணி மண்டபம் அமைப்பது தமிழ் பேசும் மக்கள் கடமை என்ற குறிக்கோளை முன் வைத்து அக்கரைப்பற்று இராமகிருஷ்ண சங்க பாடசாலைத் தலைமை ஆசிரியர் அன்பர் நடராஜன் அக்கரைப்பற்றில் பாரதி மண்டபமொன்றை நிர்மாணித்து வருகிறூர். இம்மண்டபத்தின் வேலைகள் அநேகமாக முடிவடைந்து விட்டனவென்றும், இவ்வாண்டு செப்டம்பர் 11-ல் பாரதி தினத்தன்று மண்டபத் திறப்பு விழா நடைபெறும் என்றும் தெரிய வருகிறது. அண்மையில் அகில இந்திய சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு திரும்பியிருக்கும் நடராஜன், மேற்படி விழாவில் கலந்து கொள்வதற்குப் பல பெரியார்களை ஏற்பாடு செய்து விட்டு வந்திருக்கிறூர்.

திறப்பு விழா நிகழ்ச்சிகளில் பாரதியின் பெயரால் (1) கவிதைப் போட்டி, (2) கட்டுரைப் போட்டி, (3) பேச்சுப் போட்டி முதலியவற்றை நடாத்தி, மக்களிடையே பாரதியின் நாமத்தை மேலும் ஊன்றிப் பதிய வைக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இப் போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்குத் தங்கப் பதக்கங்களும், வெள்ளிப் பதக்கங்களும், நற்சாட்சிப் பத்திரங்களும் வழங்கப்படும். அவர்களது படைப்புகளும் படங்களும் பாரதி மண்டபத் திறப்பு விழா மலரில் இடம் பெறும் என்றும் தெரிகிறது.

மேற்படி போட்டிகளுக்கான முடிவு திகதிகள் ஏற்கனவே குறிப்பிடப் பட்டிருந்தன. ஆனுல் பலருடைய வேண்டுகோளுக் கிணங்க இத் திகதிகள் தள்ளிப் போடப் பட்டிருப்பதாக பாரதி மண்டப சபையார் சுதந்திரனுக்கு அறிவித்திருக்கிறூர்கள். அவர்களுடைய அறிக்கை கூறுவதாவது:

#### பாரதி பேச்சுப் போட்டி

இலங்கையிலுள்ள பாடசாலைகளில் பெரும் பாலானவை இப்பொழுது விடுதலை, அதனைப் பாரதி பேச்சுப் போட்டிக்குரிய விண்ணப்பத் திகதியை நீட்டித் தரும்படி பல மாணவர்கள் எழுதிக் கேட்டுள்ளார்கள். அவர்களது கேள்வியை அங்கீகரித்து 15-5-57ந் திகதி வரை திரும்பவும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் என்பதையும் திரிகோணமலை யாழ்ப்பாணம் ஆகிய இரு இடங்களிலும் பேச்சுப் போட்டி முறையே 22-6-57, 29-6-57ல் நடைபெறும் என்பதையும், தெரிவித்துக் கொள்ளுகிறேம். மற்றும் போட்டிகள் சம்பந்தமான தகவல் அறிய விரும்புவோர் செயலாளர், பாரதி மண்டப சபை, அக்கரைப்பற்று. (கி. மா.) என்ற விலாசத்துக் கெழுதவும்.

சுதந்திரன் வளர்மதியில் சேர்ந்த மாணவர்கள் மேற்படி போட்டியில் கலந்து கொண்டு "பாரதி" பரிசில்களைத் தட்டிக் கொள்வதன் மூலம் வெற்றிக்கொடி நாட்ட வேண்டும் என்று சுதந்திரன் மாமா ஆசைப் படுகின்றூர்.

### நேர்மைக்கொரு நேரு

நேரு எங்கள் நேருவாம்
நேர்மை மிக்க நேருவாம்
பார் புகழ்ந்து போற்றிடும்
பண்பு மிக்க நேருவாம்.
காந்தி தந்த சீடராம்
கர்ம வீரர் நேருவாம்
சாந்திக்காகத் தம்மையே
தந்து நிற்கும் நேருவாம்.
எங்குமுள்ள மக்களை
இனிய நண்பராக்கியே
இந்தியாவின் தந்தையாம்
இன்று வாழும் நேருவாம்.
உலகுக்கொரு தொண்டராம்
உண்மைக்கொரு வீரராம்
கலகமின்றி உலகினைக்
காக்க வந்த கடவுளாம்.
உலக மாந்தர் எல்லோரும்
ஒன்றுகூடி என்றுமே
திலகமென்று வாழ்ந்திடும்
தியாக சீலர் நேருவாம்.

—வ. ஞானமாணிக்கம்,
அக்கரைப்பற்று.

### மாமா பதில்

சி. சின்னையா, களுவாஞ்சிக்குடி

'இளைஞர் விவசாயச் சங்கம்'—அனைவரும் ஸ்தாபித்து உழைக்க வேண்டிய ஸ்தாபனம்தான்!

எஸ். பொன்னையா,
மட்டுக்கொல்லை

தோல்வியைக் கண்டதும் மௌனமா? எல்லோருமே தோல்விக்குப் பலியாகிவிட்டால், முன்னேற முடியுமா? தோல்விதான் வெற்றியின் முதல்படி......இது தெரியாதா? முயன்றுல் வெற்றி கிடைக்காமல் விடுவதில்லையே!

எஸ். காசியன் ரஞ்சன், எல்ல

ஐஐயோ—எட்டுக் கடிதங்களை எழுதிவிட்டீரா? பதில் தானே? 'உமது கடிதங்கள் கிடைத்தன'—போதுமா? உமது அங்கத்தவர் இலக்கம் தானே? சீக்கிரம் வெளியாகும். திருப்திதானே......?

ஆ. த. ஆசைநாயகம்,
கரவெட்டி

'மாமா பதில்'—நல்ல பெயரில்லையா...? புகைப்பட நிபுணரே—! உமக்கு மாமாவின் பாராட்டுக்கள். ஆனுல் படங்களை அனுப்பவா? அவைகளை வளர்மதியில் தற்போது வெளியிடுவது சாத்தியமில்லையே!

சோ. சிவசுப்பிரமணிய ஐயர்,
ஆனைக்கோட்டை

'புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்,' 'ஈழமும் பாரதமும்'—இரண்டு கட்டுரைகளும் கிடைத்தன. இன்னும் சிறப்பாக எழுதி அனுப்பினுல்......?

க. கிருஷ்ணபிள்ளை, சந்திவெளி

காய்கறிகள்!—புதுமையான சிறிய விஷயம்......... மாமாவுக்கு கடிதமே எழுதக்கூடாதா? சந்திவெளியில் இன்னும் என்னென்ன இருக்கின்றன...?

வே. பத்மநாதன், சாவகச்சேரி

உமது 'தவறு', உமது 'பிராயச்சித்தம்', உமது கட்டுரைகள், உமது கவிதைகள் எல்லாவற்றையும் விட உமது க...டி...த...ம்...எல்லாம் கிடைத்தன! அந்தக் கதை...? அபாரம் போ!

சோ. இராசேந்திரம்,
கந்தரோடை

நீர் அனுப்பிய விஷயங்கள் அத்தனையும் கிடைத்தன! 'அவை நன்று இருக்கின்றனவா?' என்று கேட்கின்றுய்? ஐயோ...நான் எதைச் சொல்ல? நீர் கெட்டிக்காரன்தான்......

வே. தில்லைநாதன்,
பெரிய அரசடி

'கவிதை அரங்கு'—'விதாதக் கட்டுரை'—இவ்விரு விஷயங்களையிட்டும் நான் யோசனை செய்து வருகின்றேன்...கதை மட்டும் நன்று!

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி
#### சுதந்திரன் மாணவர் மன்றம்
அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 9.

பெயர்..........................................................

பாடசாலை......................................................

விலாசம்.......................................................

...............................................................

................................ பெற்றேர் அல்லது ஆசிரியர் கையொப்பம்

................................ கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்குக் கேடு வந்த போது வீட்டுக்கொரு வாலிபனைக் களம் அனுப்பி வைத்தது நம் தாய்க் குலம்

—o—

## உரிமைப் போருக்கு வீரப் பெண்கள் கூட்டம் வீறுகொண்டு எழல் வேண்டும்

—o—

### போரதீவு தமிழரசுக் கட்சிக் கிளைத் தலைவர் பேச்சு

"நாட்டுக்கு கேடு வந்தபோது வீட்டுக்கு ஒரு வீரனை விரைந்தனுப்பி மாற்றானை மண்டியிடவைத்து மானம் காத்த தாய்க் குலம், இன்று இழிவும் பழியும் ஏற்று மூலையிலே முக்காடிட்டுக் கிடக்குமா? பால் மணம் மாருத பச்சிளம் பாலகன் புற முதுகிட்டான் என்ற சொல்லை கேட்கச் சகியாது அவனுக்குப் பாலூட்டிய மார்பகத்தை துண்டித் தெறிவேன் என வெஞ்சினம் கொண்டு எழுந்த தாய்க் குலம் எதிர் வரும் ஆகஸ்ட் போராட்டத்தில் வேண்டிய பணி செய்து வெற்றிவாகை சூடும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை"

இவ்வாறு பெரிய போரதீவு பத்திர காளி அம்மன் ஆலய வீதியில் நடைபெற்ற மாதர் பொதுக் கூட்டமொன்றில் தமிழரசு கிளை தலைவர் திரு. பூ. செல்வத்துரை பேசுகையில் கூறினார்.

பெரிய போரதீவு மாதர் முன்னேற்ற மன்றம் அமைக்கு முகமாக சென்ற 27—4—57-ல் திருமதி வ. பொன்னம்மா தலைமையில் மாதர்களின் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது.

திரு. பூ. செல்வத்துரை தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:-

"பண்டைக் காலத்தில் தாய்க் குலம் ஓர் தனிச் சிறப்போடு வாழ்ந்துவந்தது.

"இன்று இந் நாட்டையாளும் நாசகாரர்கள் நம் தமிழ் இனத்துக்கு நாளிலும் பொழுதிலும் பல நாசங்களைச் செய்து கொண்டு வருகின்றனர். நாடு இழந்து, நாட்டில் வாழும் உரிமை இழந்து, நாடோடிகளாக்கப் பட்டிருக்கின்ருேம். இந்த அவல நிலையை எதிர்த்துப் போராட வேண்டிய காலம் நெருங்கி விட்டது. இந்தப் போராட்டத்தில் நாம் வெற்றி பெற வேண்டுமானுல் தாய்க் குலம் வீறுகொண்டு எழவேண்டும்" என்று கூறினார். பின்னர் கீழ்கண்ட உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவி: திருமதி வ. பொன்னம்மா, உப தலைவி: சீ. தங்கம்மா, காரியதரிசி: செல்வி மகேஸ்வரி, உப காரியதரிசி: திருமதி கா. சீதேவி, தனாதிகாரி: திருமதி க. சின்னத்தங்கம். இத்துடன் 13 செயற் குழு அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

---

#### புங்குடுதீவு கைப்பந்தாட்டக் கோஷ்டி ஜெயித்தது

புங்குடு தீவுக் கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் பள்ளம்புலம் கைப்பந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே அண்மையில் நடந்த கைப்பந்தாட்டப் போட்டியில் புங்குடு தீவுக் கோஷ்டி ஜெயித்தது.

பள்ளம்புலம் கோஷ்டி தங்கள் முழுத் திறமையோடும் தரம் குன்றுது விளையாடிய போதும், புங்குடு தீவுக் கோஷ்டி அலாதியான திறமை காண்பித்து ஜெயித்தது.

தீவுப் பகுதி கைப்பந்தாட்டக் கழகங்களின் சம்மேளனம் வழமைபோல் இம்முறையும் போட்டியை ஏற்பாடு செய்தது.

---

#### வல்லை முத்துமாரி அம்மன் கோவில் திருப்பணி

வல்லை முத்துமாரியம்மன் கோவில் இராஜகோபுரத்தை இடித்து எடுப்பாகப் புதிதாகக் கட்டி முடிப்பதென்றும் அதற்குச் சிற்ப சாஸ்திரிகளின் ஆலோசனையைப் பெற்றுக் கொண்டு திருப்பணி வேலையைக் காலதாமதமின்றி ஆரம்பிப்பதெனச் சமீபத்தில் பிரஸ்தாப கோயில் வீதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டது.

அக் கூட்டத்தில் பிரஸ்தாப கோவிலின் தர்மகர்த்தாவும் வர்த்தகப் பிரமுகருமான திரு. இராமசாமிப் பிள்ளை பேசுகையில், இந்தத் தலை முறையிலேயே திருப்பணி வேலையைத் செய்து முடிப்பது சிறப்பென்றும், விரும்பியவர்கள் பணத்துக்குப் பதிலாக வேண்டுமானுல் தமது சரீர உழைப்பை நல்கலாமென்றும், அப்போதெல்லாம் தாமும் அவர்களோடு தோளோடு தோள் உழைக்கத் தயாரென்று கூறினார்.

கோவில் திருப்பணி வேலைக்குச் சுமார் எழுபதினாயிரம் ரூபாய் செலவாகலாமென்று நம்பப்படுகிறது. இதல் பதின்மூவாயிரம் ரூபாய் இதுவரை சேர்த்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

---

#### கிராமச் சங்க மண்டப திறப்பு விழா

செட்டிகுளம் கிழக்கு கிராமச் சங்க மண்டப திறப்பு விழா சென்ற 27-3-57-ல் நடைபெற்றது. திரு இராசேந்திரா குத்துவிளக்கேற்றிக் கட்டடத்தை திறந்து வைத்தார். எஸ். பீ. பொன்னையா வரவேற்புரை நிகழ்த்தினர்.

திருவாளர்கள் க. சுப்பிரமணியம் 'கிராமச் சங்கங்களின் வளர்ச்சி' பற்றியும், எஸ். யோசெவ் ஸ்பீரியர் 'கிராம ஒற்றுமை' பற்றியும், அ. குழந்தைப்பிள்ளை 'புதிய மண்டப அமைப்பு' பற்றியும், ஆர். ஞானச்சந்திரன் 'அங்கத்தவர்களின் ஊக்கம்' பற்றியும், திரு ம. பூவாணி 'சங்கத்தின் எதிர்கால சேவை' பற்றியும், திரு. கி. சந்தணம்பிள்ளை 'கிராம மக்களின் கடமை' பற்றியும், எம். கந்தையா 'சங்கத்தின் சென்ற கால—தற்கால வருமானம்' பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

---

#### ஊரதீவு கிராம முன்னேற்றச் சங்கம்

ஊரதீவு கிராம முன்னேற்றச் சங்கக் கூட்டமொன்று தலைவர் திரு. சி. நா. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற பொழுது ஊரதீவு உப தபால் நிலைய திறப்பு விழாவைச் சிறப்பாக நடாத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மே மாதம் 2-ந் தேதி உப தபால் நிலையத் திறப்புவிழாவை நடாத்துவதெனவும், தீவுப் பகுதிக் காரியாதிகாரியைத் திறப்புவிழாவுக்கு அழைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. குடி தண்ணீர்க் கஷ்டம் பற்றித் தீவுப் பகுதி எம். பி. வடமாகாண அதிபர், தீவுப்பகுதிக் காரியாதிகாரி ஆகியோருக்கு அறிவிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

---

#### கதிரிப்பாய் சன சமூக நிலையக்கூட்டம்

"சன சமூக நிலையங்கள் செல்வனே பணியாற்றி பயன் தர வேண்டுமானுல் மக்களிடம் ஒருபோதும் துவேஷ மனப்பான்மை தலைகாட்டக் கூடாது. விரிந்த அறிவும் பரந்த நோக்கும் உடையவர்களாக மக்கள் இருந்தாற்ருன் மக்கள் சமுதாயத்தில் சுபீட்சம் ஏற்படும்—ஏற்பட்டது நிலை பெற்று இருக்கும்."

இவ்வாறு திறைசேரி இலாகா பிரதமர் சிருப்பர் திரு. கே. செல்வத்துரை, கதிரிப்பாய் ஸ்ரீ சுப்பிரமணிய சன சமூக நிலையத்தின் ஆருவது ஆண்டு நிறைவு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

திரு. கே. குழந்தைவேலு பேசுகையில் தற்போது தமிழ்ச் சாகியத்தினரின் முன்னேற்றத்திற்குத் தடையாகப் பல, பிரச்னைகள் தோன்றியிருப்பதைக் குறிப்பிட்டு அவற்றைச் சுமுகமாய்த் தீர்த்து வைப்பது தமிழ்த் தலைவர்களின் கட்டாய கடமையென்றும் கூறினர்நிலையத்தின்நிர்வாகஉத்தியோகஸ்தர்கள் கீழ்க் கண்டோர் தெரியப்பட்டனர். போஷகர்: திரு. கே. செல்வத்துரை, தலைவர்: திரு. பி. சிவப்பிரகாசம், காரியதரிசி: திரு. ரி. சிவலிங்கம், பொக்கிஷாதிபர்: திரு.எம். இராசதுரை.

---

#### மனேன்மணி சனசமூக நிலையம்

திரு. க. தர்மலிங்கம் தலைமையில் கொக்குவில் மனேன்மணி சனசமூக நிலையத்தின் மகாசபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. காரியதரிசி தனாதிகாரி ஆகியோரின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டபின் பின்வருவோர் புதிய நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர் திரு. க. தர்மலிங்கம், உபதலைவர் திரு. அ. சீனிவாசகம், காரியதரிசி திரு. ஆ. தியாகராசா, தனாதிகாரி திரு. பொ. இரத்தினம், உப தனாதிகாரி திரு. வே. பரராசசிங்கம்; நிலையப் பொறுப்பாளர்: திரு. த. அன்னலிங்கம், உப பொறுப்பாளர்: திரு. சி. கந்தையா, திருவாளர்கள் க. நடராசா, சி. நடராசா, சி. பத்மநாதன் ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்கள். கணக்குப்பரிசோதகர், திரு. நா. பற்குணம்.

---

#### வாலிபர் முன்னேற்றக் கழகம்

வாலிபர் முன்னேற்றக் கழக செயற்குழு கடந்த 13-4-57-ல் கொழும்பு புளுமண்டல் வீதியில் உள்ள கழக பணிமனையில் கூடியது; கூட்டத்திற்கு திரு சிவபாதம் தலைமை வகித்தார். கீழ்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டன.

1. சயிபத்தில் தமிழகத்தில் நடந்த பொதுத் தேர்தலில் தி. மு. க. சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்ற அறிஞர் அண்ணு முதலிய தி. மு. க. முன்னணி வீரர்களை இக்கழகம்பாராட்டுகிறது.

2. கழகத்தின் சார்பாக ஒரு இலவச இராப் பாடசாலை நடத்துவது என்றும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக நோட்டு புத்தகங்கள்வாங்கிக்கொடுப்பதுஎன்றும் முடிவு செய்யப்பட்டது.

---

## மஹாரகமை பயிற்சிக் கல்லூரியில் இன பேதம்

—o—

### தமிழுக்கு இனி அங்கே இடமில்லை : கல்வி மந்திரியின் தீர்க்கமான முடிவு

—o—

### அரசகரும மொழி இலாகாவிலும் தமிழுக்கு அங்கீகாரமில்லை

(சுதந்திரன் நிருபர்)

புயல் வேகத்தில் முன்னேறிக்கொண்டு போகும் அரசியலாரின் சிங்கள மொழி வெறி கட்டுக்கடங்காத நிலையை எட்டுமளவுக்கு அடியெடுத்து வைத்து விட்டதாகச் சுதந்திரனுக்குக் கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது. சிங்களம் வேண்டாமென்று ஏகோபித்து குரலெழுப்பும் தமிழ் பேசும் மக்களின் தொண்டைக்குள் அதை எப்படியும் திணித்துவிடுவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவது தெரியவருகிறது.

கல்வி மந்திரி திரு தஹநாயகாவின் புதிய திட்டப்படி சிங்களம் தெரியாத எந்த நபரும் இனிமேல் மஹரகமை பயிற்சிக் கல்லூரியில் சேர முடியாத நிலை ஏற்படவிருக்கிறது.

மஹரகமை பயிற்சிக் கல்லூரியில் சிங்களத்தில் மட்டும் போதனை நடத்துவது, அதாவது சிங்களம் தெரியாதவர்களுக்கு அங்கு இடமில்லாதுபோகச் செய்வதென்ற முடிவு சிறிதுகாலத்துக்கு முன்பு அரசியலாரால் செய்யப்பட்டிருந்தபோதிலும் இதுபற்றிப் புனர் ஆலோசனை செய்து தீர்க்கமான முடிவுக்கு வந்து நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு கல்வி மந்திரியிடம் ஒப்படைக்கப்பட்டது.

கல்வி மந்திரி கண்ட முடிவு தமிழ் பேசும் மக்களுக்கு அந்தக் கல்லூரியை ஒரேயடியாக மூடிவிடுவது என்பதுதான். இது விஷயத்தில் புனராலோசனைக்கே இடமில்லையென்று அவர் திட்டவட்டமாகக் கூறினுராம்.

#### அரசகரும மொழி இலாகாவில்

அரசகரும மொழி இலாகாவிலும் அரசியலாரின் சிங்கள மொழி வெறி வேகம் அதிகரித்துவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அங்கு கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள் தமிழில் லீவு கோரிச் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களெல்லாம் நிராகரிக்கப்படுகின்றனவாம். லீவு வேண்டுமானுல் அவர்கள் சிங்களத்திலே அல்லது சிங்களம் தெரியாவிட்டால் ஆங்கிலத்திலே எழுதிக் கேட்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிருர்களாம்.

தமிழுக்கு நியாயமான அளவு உபயோகம் கொடுப்பதாகச் சமயம் வாய்த்தபோதெல்லாம் வாய்ப்பந்தல் போடும் பிரதமர், அரசகரும மொழி இலாகாவிலேயே தமிழுக்கு எதுவித நியாயமும் வழங்கப்படாதிருப்பது குறித்து கவலையடைவாரா? நிலைமையை திருத்தியமைக்க நடவடிக்கை எடுப்பாரா? என்று கேட்கப்படுகிறது.

---

#### தொண்டர் படை திரட்டல்-பூநகரியில்

கடந்த மாதம் 28-ந் திகதி பூநகரியில் தமிழரசுக் கட்சியாரால் எதிர்வரும் ஆகஸ்ட் போராட்டத்துக்கான தொண்டர் படை திரட்டப்பட்டது.

பிரஸ்தாப வேலையில் தமிழரசுக் கட்சிச் சாவகச்சேரி கிளைச் சங்கக் காரியதரிசி திரு. என். அருணசலம், திரு. எஸ். குலசேகரசிங்கம், திரு. எஸ். யோகலிங்கம் ஆகியோர் முக்கிய பங்கு கொண்டனர்.

---

#### மனம் நாடிய......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கவலை கெண்டிய
அகல்வாய்ச் சிறுகுழி,
கொன்றை ஒள்வீ
தாஅய்ச், செல்வர்
பொன்பெய் பேழை
மூய்திறந்த அன்ன,
கார் எதிர் புறவின்
அதுவே; உயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த
மிச்சில், யாவர்க்கும்
வரை கோள் அறியாக்
கொன்றி,
நிரைகோல் குறுந்தொடி
தந்தை ஊரே.

இச்செய்யுள் பேயன் என்னும் புலவர் பாடியது. களவு மணம் வெளிப்பட்ட பிறகு கூடத் தலைவன் தலைவியை மணந்துகொள்ள வில்லை. வினை புரியும் பொருட்டு வெளியூருக்குச் சென்று திரும்பினுன். தலைவியை மணப்போம் என்ற ஆவலுடன் திரும்பினுன். திரும்பும் போது தலைவியின் ஊரைத் தன் தேர்ப்பாகனுக்குக் காட்டிக் களிப்படைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

| கிங்ஸ்லி | பிளாஸா | வெலிங்டன் | விஜயா |
|---|---|---|---|
| (கொழும்பு) | (வெள்ளவத்தை) | (யாழ்ப்பாணம்) | (மட்டக்களப்பு) |
| **மொடர்ன்** | **தீவொளி** | **விஜிதா** | **ஜெமினி** |
| (பதுளை) | (நுவரெலியா) | (மஸ்கெலியா) | (பொகவந்தலாவ) |

ஆகிய திரைகளில்!

நடிகர்கள்:

**சிவாஜி கணேசன், சாவித்திரி, நாகையா, கண்ணாம்பா, ராஜசுலோசனா, எம். கே. ராதா, சரோஜா, நம்பியார்**

மற்றும் பலர்.

**நடனம்: ஹெலன்.**

பின்னணி இசை: எம். வசந்தகுமாரி, பி. சுசிலா, பி. லீலா, ஜிக்கி, சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன்.




இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 196ம் இலக்கத்தில் வசிக்கும் [illegible] அவர்களால் சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1957 மே மாதம் 12ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org